முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியரோடு இருக்கும்போது அவர்கள் அவர் மீது மிகுந்த அன்போடிருந்தார்கள். அவருடைய ஊழியத்திற்கு அதிக மதிப்பும் முக்கியத்துவமும் கொடுத்தார்கள். கலாத்தியர் மத்தியிலே யூதமார்க்கத்தை உபதேசிக்கிற உபதேசியார்கள் சிலர் பிரவேசித்தார்கள். இவர்கள் கள்ளப் போதகர்கள். இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை இவர்கள் தவறாக உபதேசிக்கிறார்கள்.

ஒவ்வொரு விசுவாசியும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் என்பது இவர்களுடைய உபதேசம். பவுலோ விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்படுவதாக உபதேசம் பண்ணுகிறார். நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால் கள்ள அப்போஸ்தலர்களோ சுவிசேஷத்தை கலப்பாய் உபதேசம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலருடைய அதிகாரத்தையும் மரியாதையையும் அவமதிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை கலாத்தியர் மத்தியிலே உறுதிபண்ணுகிறார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைப்போல தானும் அப்போஸ்தல ஊழியத்தை செய்வதாக சொல்லுகிறார்.

கலாத்தியா நாட்டுச் சபையிலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவை விட்டுப் பின்வாங்கிப் போய் விட்டார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிப்பதற்குப் பதிலாக வேறொரு சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்கள். கள்ளப்போதகர்கள் இவர்கள் மத்தியில் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்டுகிறார்கள். அப்போஸ்தலர் பவுலோ மனுஷரைப் பிரியப்படுத்தாமல் தேவனைப் பிரியப்படுத்துகிறார்.

நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்திலே நீதிமானாகிறதில்லை யென்று பவுல் இந்த நிருபத்தில் தெளிவாக எழுதுகிறார். மேலும் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்னும் சத்தியத்தையும் தெளிவு படுத்துகிறார். சுதந்தரவாளிக்கும், அடிமையானவனுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை பவுல் இந்த நிருபத்தில் எடுத்துச் சொல்லுகிறார். கிறிஸ்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு இரட்சித்திருக்கிறார். நாம் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்கு உட்படக் கூடாது. கிறிஸ்து நமக்குண்டாக்கின சுயாதீன நிலமையிலே நிலை கொண்டிருக்க வேண்டும்.

இந்த நிருபத்தின் முடிவுரையில், பவுல் கலாத்தியரிடம் “நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக” என்று புத்திசொல்லி, “ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்” என்று புத்தி சொல்லுகிறார். உலகம் பவுலுக்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. பவுலும் உலகத்திற்கு சிலுவையில் அறையப் பட்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்களைப் பவுல் தன் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறார். “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை அவர்கள் ஆவியுடனே கூடயிருப்பதாக” என்று சொல்லி பவுல் இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார்.

1 அதிகாரம்

சுருக்கமான முன்னுரை (கலா 1:1-5). பவுல் கலாத்தியாவிலுள்ள சபைகளைக் கடிந்துகொள்கிறார் (கலா 1:6-9). தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை பவுல் உறுதிபண்ணுகிறார். பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார். கிறிஸ்துவே தம்முடைய சுவிசேஷத்தை தனக்கு வெளிப்படுத்தியதாக பவுல் அறிவிக்கிறார் (கலா 1:11,12). பவுல் தன்னுடைய சரித்திரத்தை சுருக்கமாகச் சொல்லுகிறார். பவுல் யூதமார்க்கத்திலிருந்தபோது அவருடைய நடக்கைகளை இங்கு அறிவிக்கிறார் (கலா 1:13-14). பவுல் இரட்சிக்கப்பட்டபோதும், அதன்பின்பும் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறார் (கலா 1:15-24).

அப்போஸ்தலனாயிருக்கிற பவுல் கலா 1 : 1-5

கலா 1:1. மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்,

கலா 1:2. என்னுடனேகூட இருக்கிற சகோதரரெல்லாரும், கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது:

கலா 1:3. பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக;

கலா 1:4. அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி, நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;

கலா 1:5. அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

அப்போஸ்தலர் பவுலும், அவருடனே கூடயிருக்கிற சகோதரரெல்லாரும் இந்த நிருபத்தை எழுதுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை இந்த நிருபத்தில் பொதுவாகச் சொல்லுகிறார். அப்போஸ்தல ஊழியத்திற்குத் தான் அழைக்கப்பட்ட விதத்தையும் கலாத்தியருக்குத் தெளிவாக எடுத்துச்சொல்லுகிறார். மனுஷராலோ அல்லது மனுஷர் மூலமாகவோ பவுல் அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும் பவுல் அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

பவுலின் ஊழிய அழைப்பு மனுஷப்பிரகாரமாக ஏற்படுத்தப்பட்டதல்ல. தேவனுடைய சித்தத்தினால் பவுல் தெய்வீக அழைப்பைப்பெற்று, அப்போஸ்தல ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே பவுலை அப்போஸ்தல ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார். பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் கிரியையை உறுதிசெய்து, பவுலை அப்போஸ்தல ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மரித்து, உயிரோடு எழுந்த பின்பே, பவுல் அப்போஸ்தல ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சத்தியத்தைச் சொல்லும்போது, "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவன்" தன்னை அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைத்திருப்பதாகச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து பவுலை அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைத்தபோது, கிறிஸ்துவானவர் மரித்தோரிலிருந்து எழுந்து, பரலோகத்திலிருக்கிறார். பவுலுக்கு பரலோகத்திலிருந்து அப்போஸ்தல ஊழிய அழைப்பு உண்டாயிற்று.

பவுல் கலாத்தியருக்கு இந்த நிருபத்தை எழுதுகிறபோது, தன்னோடு சேர்த்து தன்னுடனேகூடயிருக்கிற சகோதரரெல்லாரும் இந்த நிருபத்தை எழுதுவதாகச் சொல்லுகிறார். இந்த நிருபத்தில் பவுல் எழுதுகிற சத்தியத்தை அவருடனே கூடயிருக்கிற சகோதரரெல்லாரும் அங்கீகரிக்கிறார்கள். பவுல் பிரசங்கிக்கிற சத்தியத்தை பரிசுத்தவான் களெல்லோரும் ஏற்றுக் கொண்டு, அதை உறுதிபண்ணுகிறார்கள்.

இந்த நிருபம் கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதப்பட்டிருக்கிறது. பவுல் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதும்போது, அவர்களுடைய சபைகளில் உபதேசக் குழப்பமுண்டாயிற்று. விசுவாசிகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திலிருந்து வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள். கள்ளப் போதகர்கள் அவர்கள் மத்தியிலே பிரவேசித்து, அவர்களுக்கு வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். யூதமார்க்கத்து உபதேசங்களை விசுவாசிகள் கடைப்பிடிக்கவேண்டு மென்று கட்டாயப்படுத்துகிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மாத்திரமே இவர்கள் நீதிமான்களாக முடியும் என்று யூதமார்க்கத்தின் உபதேசத்தையும் அவர்களுக்குச் சொல்லுகிறார்கள். சபையில் இவ்வாறு உபதேச குழப்பமுண்டாயிற்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், பவுலும் அவருடனே கூடயிருக்கிற சகோதரரெல்லாரும் இந்த நிருபத்தை கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு இந்த நிருபத்தை எழுதும்போது, ஆரம்ப வார்த்தையாக, அவர்களுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதம் கூறி எழுதுகிறார். "பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று வாழ்த்துவது அப்போஸ்தல ஆசீர்வாதமாகும். இந்த ஆசீர்வாதத்தில் "கிருபையும் சமாதானமும்" இடம்பெற்றிருக்கிறது. தேவன் நம்மிடத்தில் காண்பிக்கிற அவருடைய நல்ல சித்தமும், அவர் நம்மிடத்தில் செய்கிற அவருடைய நல்ல கிரியைகளும் "கிருபை" என்று அழைக்கப்படுகிறது.

நம்முடைய உள்ளான மனுஷனில் உண்டாகக்கூடிய ஆறுதல் "சமாதானம்" என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகள் சம்பூரணமாகச் சந்திக்கப்பட்டு, நம்முடைய வாழ்க்கையில் ஒரு செழிப்பு உண்டாகும்போது, நமக்குள் சமாதானம் அதிகரிக்கிறது. விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபையும் சமாதானமும் நிரம்பியிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் வாழ்த்துகிறார்கள்.

கிருபையில்லாமல் மெய்யான சமாதானம் இருக்க முடியாது. ஆகையினால்தான் அப்போஸ்தலர்கள் விசுவாசிகளை வாழ்த்தும்போது, முதலாவது கிருபையைப்பற்றிச் சொல்லுகிறார்கள். கிருபையைச் சொன்ன பின்புதான் சமாதானத்தைச் சொல்லுகிறார்கள். தேவனுடைய கிருபையைப் பற்றிச் சொல்லும்போது, அவருடைய அன்பைப் பற்றி சொல்லாமலிருக்க முடியாது. ஏனெனில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே, நம்முடைய பாவங்களுக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்து, அவர் நம்மீது வைத்துள்ள மெய்யான அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நாம் ஜீவிக்கிற இந்தப் பிரபஞ்சம் துன்மார்க்கத்தில் நிறைந்திருக்கிறது. மனுஷருடைய பாவத்தினால் உலகத்தில் சாபம் வந்துவிட்டது. இந்தப் பிரபஞ்சம் பொல்லாததாகயிருக்கிறது. இப்பொழுதிருக்கிற இந்தப் பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து, நம்மை விடுவிக்கும்படி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங் களுக்காக, தம்மைத்தாமே சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காக, இயேசுகிறிஸ்து தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்தினார்.

நாம் இப்பொழுதிருக்கிற இந்தப் பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தம். இந்தப் பிரபஞ்சத்திலிருந்து கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளையெல்லாம் வெளியேற்றி விடாமல், இந்தப் பிரபஞ்சத்தின் பொல்லாத வல்லமையிலிருந்து விடுவிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் விடுவிக்கும் கிரியை பிதாவாகிய தேவனுடைய சித்தத்தோடு ஒத்திருக்கிறது. ஆகையினால் நாம் தேவனை "அப்பா பிதாவே" என்று கூப்பிடுகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் தேவனை நோக்கிப் பார்க்கும்போது, நம்முடைய பிதாவை நோக்கிப் பார்ப்பதுபோல, தைரியமாகப் பார்க்கலாம். தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பிதாவாகயிருக்கிறார். ஆகையினால் இயேசுகிறிஸ்துவிலும், அவர் மூலமாகவும், தேவன் உண்மையான விசுவாசிகளெல்லோருக்கும் பிதாவாகயிருக்கிறார்.

அப்போஸ்தல ஆசீர்வாதத்தின் முடிவுரையாக, பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் துதிக்கிறார். "அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" என்று சொல்லி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஸ்தோத்திரிக்கிறார்.

கலாத்தியா நாட்டிலுள்ள சபைகள்
கலா 1 : 6-9

கலா 1:6. உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்;

கலா 1:7. வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலக்கப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களே யல்லாமல் வேறல்ல.

கலா 1:8. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக்கடவன்.

கலா 1:9. முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

கலாத்தியா நாட்டிலுள்ள சபையார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய பின்மாற்றத்தைக் குறித்து பவுல் மிகுந்த கரிசனையோடிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய கிருபையினால் அவர்களை அழைத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கிறிஸ்துவை விட்டு விலக்கிபோய்விட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களை விட்டு மாத்திரமல்ல, கிறிஸ்துவை விட்டே விலகிப்போய்விட்டார்கள். தேவன் தம்முடைய கிருபையை அவர்களுக்குக் காண்பித்திருக்கிறார். ஆனால் அவர்களோ தேவனுடைய கிருபையை அசட்டை செய்து, அந்தக் கிருபையை விட்டு விலகிப்போய்விட்டார்கள். தேவனுடைய இரக்கம் தங்களுக்குத் தேவையில்லையென்று தீர்மானித்து தேவனைவிட்டே விலகிப்போய்விட்டார்கள்.

தம்முடைய ஆசீர்வாதங்களிலும், சிலாக்கியங்களிலும் பங்கு பெறுவதற்காகவே, தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களை அழைத்திருக்கிறார். இது அவர்களுக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். ஆனால் அவர்களோ கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தில் பங்குபெறாமல், கிறிஸ்துவை விட்டு விலகிப்போய்விட்டார்கள். கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களும் மிகவும் அதிகம். கலாத்தியர்கள் இவற்றை இதுவரையிலும் அதிகமாய் அனுபவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போதோ தங்களுடைய பாவத்தினாலும், மதியீனத்தினாலும், தேவனுடைய கிருபையை விட்டு விலகி, அவருடைய ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் இழந்து நிற்கிறார்கள்.

கிறிஸ்துவானவர் தம்முடைய கிருபையினால் கலாத்தியர்களைத் தம்முடைய ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்களாக அழைத்திருக்கிறார். ஆனால் அவர்களோ தங்களை அழைத்தவரை சீக்கிரமாய் விட்டு விலகிப்போய்விட்டார்கள். கொஞ்சக்கால மாத்திரமே அவர்கள் கிறிஸ்துவின் கிருபையில் இருந்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை கொஞ்சக்காலம் மாத்திரமே பெற்றிருக்கிறார்கள். அதன்பின்பு, அவர்கள் கிறிஸ்துவின் கிருபையில் நிலைத்திராமல், அதிசீக்கிரத்தில் அவருடைய கிருபையை விட்டும், அவரை விட்டும் விலகிப்போய்விட்டார்கள்.

கலாத்தியா நாட்டிலுள்ள சபையார் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாகயிருக்கிறார்கள். விசுவாசத்திலும் பலவீனமாக யிருக்கிறார்கள். இதனால் கிறிஸ்துவின் கிருபையில் அவர்களால் நிலைத்திருக்க முடியவில்லை. சீக்கிரத்திலேயே அவரை விட்டு விலகிப்போய்விட்டார்கள். கிறிஸ்துவின் கிருபையில் நிலைத்திருந்தால் மாத்திரமே, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கள்ளப்போதகர்கள் தவறான சத்தியங்களை இவர்களுக்கு உபதேசம் செய்து, இவர்களுடைய விசுவாசத்தைப் பலவீனப்படுத்திவிட்டார்கள்.

கிறிஸ்துவை விட்டுப் பிரிந்துபோன இவர்கள், வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள். ஆனால் வேறொரு சுவிசேஷம் என்று எதுவுமில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷம் மாத்திரமே மெய்யான சுவிசேஷம். கள்ளப்போதகர்கள் விசுவாசிகளை கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்டுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் பரலோகத்திற்குப் போகவேண்டிய வழி தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கள்ளப்போதகர்களோ, பரலோகத்திற்குப் போக, வேறொரு வழி இருப்பதாகச் சொல்லி, கலாத்தியர்களை தவறான பாதையில் வழிநடத்துகிறார்கள்.

இதுவரையிலும் கிறிஸ்துவின் கிருபையில் நிலைத்திருந்த கலாத்தியர்கள், கள்ளப்போதகர்களின் தவறான உபதேசத்தினால், திசைமாறி, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பி, வேறொரு பாதையில் போகிறார்கள். கிறிஸ்துவின் பாதை நித்திய ஜீவன். மற்ற பாதைகளெல்லாம் நித்திய அழிவு. கலாத்தியர்கள் கிறிஸ்துவின் கிருபையைவிட்டு விலகிப்போனதினால், தங்களைக் கரம்பிடித்து வழிநடத்துகிற கிறிஸ்துவை விட்டும் விலகிப்போய்விடுகிறார்கள். பாதை தடுமாறி வேறொரு சுவிசேஷத்தைப் பற்றிக்கொள்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியருக்கு மெய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்கிறார். வேறொரு சுவிசேஷம் எதுவுமில்லை. ஆனால் சிலர் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்டுகிறார்கள். இப்படி வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களென்று பவுல் சொல்லுகிறார். அவர்கள் மனுஷனாகயிருந்தாலும், வானத்திலிருந்து வருகிற தூதனாகயிருந்தாலும், அவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

பவுலின் பெயரில், வேறு யாராவது, வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினாலும், அவர்களும் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். தேவதூதரின் போர்வையைத் தரித்துக்கொண்டு, வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினாலும், அவர்களும் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். கிறிஸ்துவின் மெய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் ஆசீர்வாதமுண்டு. பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் சாபமுண்டு.

பவுலின் சரித்திரம்
கலா 1 : 10-24

கலா 1:10. இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.

கலா 1:11. மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியான தல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

கலா 1:12. நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.

கலா 1:13. நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி;

கலா 1:14. என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.

கலா 1:15. அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்ததேவன்,

கலா 1:16. தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்;

கலா 1:17. எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபிதேசத்திற்குப் புறப்பட்டுபோய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்.

கலா 1:18. மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்தேன்.

கலா 1:19. கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.

கலா 1:20. நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்குமுன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

கலா 1:21. பின்பு, சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்.

கலா 1:22. மேலும் யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்.

கலா 1:23. முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து,

கலா 1:24. என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தின் முன்னுரையில் சுருக்கமாக எழுதின சத்தியத்தை, இங்கு விரிவாக எழுதுகிறார். பவுல் தன்னை கிறிஸ்துவின் அப்போஸ்தலராக அறிக்கை செய்கிறார். மனுஷராலோ அல்லது மனுஷர் மூலமாகவோ பவுல் அப்போஸ்தலராக நியமிக்கப்படவில்லை. இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும் பவுல் அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை பவுல் இங்கு மேலும் விவரிக்கிறார்.

அப்போஸ்தல ஊழியம் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவரே பவுலை அப்போஸ்தலராக நியமித்திருக்கிறார். தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்பதும், பாவிகளை மனந்திரும்புவதற்கு நேராக வழிநடத்தி, அவர்களை கிறிஸ்துவுக்கு கீழ்படியச் செய்வதும் அப்போஸ்தல ஊழியத்தின் முக்கியமான பகுதியாகும். பாவத்திற்கு அடிமையாகயிருந்தவர்கள் இனிமேல் கிறிஸ்துவுக்கு அடிமைகளாக வேண்டும். அவருடைய சுவிசேஷத்திற்கு அடிமைகளாகவேண்டும்.

அப்போஸ்தலர்கள் மனுஷரை நாடியோ, மனுஷரைப் பிரியப்படுத்தியோ போதிக்கக்கூடாது. அவர்கள் தேவனையே நாடவேண்டும். தேவனையே பிரியப்படுத்தவேண்டும். தேவனை நாடி, தேவனைப் பிரியப்படுத்துகிறவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரர்கள். அப்போஸ்தலர் பவுல் மனுஷரை நாடவில்லையென்றும், மனுஷரைப் பிரியப்படுத்தவில்லையென்றும், அறிக்கை செய்கிறார். மேலும் அவர் தேவனையே நாடி, தேவனையே பிரியப்படுத்துவதாக பவுல் அறிக்கை செய்கிறார். இரண்டு எஜமானுக்கு யாராலும் உண்மையாய் ஊழியம் செய்யமுடியாது. ஒருவனைச் சிநேகித்து மற்றவனைப் பகைப்பான். அப்போஸ்தலர் பவுல் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவரல்ல. கிறிஸ்துவுக்கு மாத்திரமே ஊழியம் செய்கிறவர். ஆகையினால் அவர் மனுஷரைப் பிரியப்படுத்தாமல் தேவனை மாத்திரமே பிரியப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரர்களாயிருக்கிறவர்கள், ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வரவேண்டும். மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்கள், ஜனங்களை மனுஷரிடத்தில் அழைத்துப்போவார்கள். பவுலோ கிறிஸ்துவைப் பிரியப்படுத்துகிறவர். ஆகையினால் ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறார். மனுஷர் தங்களை அங்கீகரிக்கவேண்டுமென்று எதிர்பார்த்து, ஒரு சிலர் மனுஷரைப் பிரியப்படுத்தும் காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் பவுலோ கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரராயிருந்து, கிறிஸ்துவை மாத்திரமே பிரியப்படுத்துகிறார்.

பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார். தான் இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட விதத்தை இங்கு தெளிவுபடுத்துகிறார். பவுல் பிரசங்கிக்கிற சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படி உண்டானதல்ல. பவுல் இந்தச் சுவிசேஷத்தை எந்த ஒரு மனுஷனாலும் பெற்றுக்கொள்ளவில்லை. எந்த ஒரு மனுஷன் மூலமாயும் கற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவானவரே தம்முடைய சுவிசேஷத்தை பவுலுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

கிறிஸ்துவே அப்போஸ்தலர்களை அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கிறார். அவர்களுக்கு அப்போஸ்தல ஊழியத்தை எப்படி செய்யவேண்டுமென்று கற்றுத்தருகிறார். கிறிஸ்துவானவரே அவர்களை அப்போஸ்தல ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணுகிறார். இதுவே அப்போஸ்தல ஊழியத்தின் குணாதிசயம். அப்போஸ்தல ஊழியம் மனுஷரால் ஏற்படுத்தப்பட்டதல்ல. அது தேவனால் ஏற்படுத்தப்பட்டது.

இயேசுகிறிஸ்துவானவரே பவுலுக்கு தம்முடைய சுவிசேஷத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கம் செய்கிறார். பவுலுக்கு சுவிசேஷத்தைப்பற்றி ஞானம் இருக்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற அதிகாரமுமிருக்கிறது. இந்த ஞானமும், இந்த அதிகாரமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவருக்கு நேரடியாக வந்திருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய கடந்தகால ஜீவியத்தைப்பற்றி இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார். பவுலின் ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவை, தன்னுடைய இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக, யூதமார்க்கத்திலிருந்தார். அவருடைய யூதமார்க்கத்து நடவடிக்கையைக் குறித்து கலாத்தியர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அப்போது பவுல் தேவனுடைய சபையை மிகவும் துன்பப்படுத்தி அதை பாழாக்கினார். யூதமார்க்கத்தில் தேறினவனாயிருந்தார். தன் பிதாக்களின் பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவராயிருந்தார். அப்படி இருந்தவருடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிற்று. இந்த மாற்றம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டாயிற்று. இதுவரையிலும் எந்த உபதேசத்தைப் பற்றிக்கொண்டிருந்தாரோ அதற்கு விரோதமாக இப்போது உபதேசம் செய்கிறார். இதுவரையிலும் எந்த உபதேசத்தை வெறுத்தாரோ, அந்த உபதேசத்தை இப்போது உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கிருபையினால் அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டார். அவருடைய கிருபையினால் பவுலுக்கு கிறிஸ்துவில் விசுவாசமுண்டாயிற்று. தேவனுடைய கிருபையினால், அவரே பவுலை அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். அப்போஸ்தலர்களில் பவுல் மிகவும் விசேஷமானவர். அவருடைய மனமாற்றம் திடீரென்று உண்டாயிற்று. அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் மிகவும் பெரியது.

பவுல் தன் தாயின் வயிற்றிலிருந்தது முதல், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவரைப் பிரித்தெடுத்து, தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து தம்மைப் பவுலுக்குள் வெளிப்படுத்தியிருக்கிறார். நமக்குள் கிறிஸ்துவின் வெளிப்பாடு உண்டாகவேண்டும். இல்லையென்றால் கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு நமக்கு நிறைவாகக் கிடைக்காது. நம்முடைய உள்ளத்தில், நமக்குள், கிறிஸ்து தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்று, நாம் கருத்தோடு ஜெபிக்கவேண்டும்.

தம்முடைய குமாரனை பவுலுக்குள் வெளிப்படுத்துவது பிதாவாகிய தேவனுக்கு பிரியமாக இருக்கிறது. புறஜாதிகளிடத்தில், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, பவுல் சுவிசேஷமாய் அறிவிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமும், தேவனுடைய விருப்பமும் பிரியமுமாகும். இவ்வாறாக பவுல் தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டினால், ஒரு விசுவாசியாகவும், ஒரு அப்போஸ்தலராகவும் இருக்கிறார்.

பிதாவாகிய தேவன் பவுலுக்குள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்குப் பிரியமாகயிருக்கிறார். பவுல் தேவனுடைய விருப்பத்தை அறிந்தபோது, அவர் தன் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணவில்லை. பவுல் தன்னுடைய மாம்சத்தினாலோ, தன்னுடைய இரத்தத்தினாலோ சிந்தித்து தீர்மானம் செய்து, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கர்த்தரே பவுலுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

தேவன் பவுலை தம்முடைய ஊழியத்திற்குப் பிரித்தெடுத்தபோது, பவுல் தன் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணவில்லை. தேவனுடைய அழைப்பைப்பற்றி உறுதிபண்ணுவதற்கு மற்ற அப்போஸ்தலர்களிடத்தில் அவர் யோசனை கேட்கவுமில்லை. தன்னை கர்த்தர் பிரித்தெடுத்திருக்கிறார் என்றும், புறஜாதிகளிடத்தில் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தரே தன்னை நியமித்திருக்கிறார் என்றும் பவுல் உறுதியாக நம்புகிறார். பவுல் இந்தச் சத்தியத்தை கலாத்தியருக்கு எழுதும்போது, இவைகள் பொய்யல்லவென்றும், தேவனுக்கு முன்பாக தான் நிச்சயமாய்ச் சொல்வதாகவும் எழுதுகிறார் (கலா 1:20).

தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு கர்த்தர் நமக்கு பல வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். கர்த்தருக்காக ஊழியம் செய்வது நம்முடைய கடமை. கர்த்தர் ஊழிய வாய்ப்பைக் கொடுக்கும்போது, ஊழியம் செய்வது கர்த்தருடைய சித்தமா என்று யோசித்துக் கொண்டிருக்கக்கூடாது. அது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கடமையென்று தீர்மானித்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வது நம்முடைய சிலாக்கியம். கர்த்தர் நமக்கு ஊழிய வாய்ப்புக்களைக் கொடுக்கும்போது, அதைப் பயன்படுத்த யோசிக்கக்கூடாது. யாரிடத்திலும் அது சம்பந்தமாக ஆலோசனை கேட்கவேண்டியதில்லை. கர்த்தருடைய அழைப்பு தெளிவாகயிருக்குமென்றால், அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.

கர்த்தர் பவுலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தபோது, எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்தில் பவுலுக்கு அதிக பழக்கமில்லை. அவர்களைப்பற்றி பவுலுக்கு அதிகமாகத் தெரியாது. யூதேயா தேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு பவுல் முகமறியாதவராக இருந்தார். ஆனால் யூதேயா தேசத்திலுள்ள சபையாரோ பவுலின் இரட்சிப்பைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பவுல் தங்களைத் துன்பப்படுத்தினவர் என்பதும், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தை அழிக்கத் தேடினவர் என்பதும் யூதேயா தேசத்திலுள்ள சபையாருக்குத் தெரிந்திருக்கிறது. அப்படிப்பட்ட பவுல், தான் அழிக்கத் தேறின விசுவாசத்தை, இப்போது பிரசங்கிக்கிறார் என்பதை அவர்கள் கேள்விப்படுகிறார்கள். இதற்காக அவர்கள் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

மூன்று வருஷங்களாக பவுல் எருசலேமுக்குப் போகாமல் அரபி தேசத்திலும், சீரியா, சிலிசியா நாடுகளின் புறங்களிலும் புறஜாதிகளிடத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தார். மூன்று வருஷம் சென்றபின்பு பவுல் பேதுருவைக் கண்டுகொள்ளும்படி எருசலேமுக்குப்போனார். அவரிடத்தில் பதினைந்து நாட்கள் தங்கினார். அப்போது கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபைச் சந்தித்தார். அப்போஸ்தலரில் வேறு யாரையும் பவுல் காணவில்லை. பவுலுக்கு அப்போஸ்தலரைவிட கர்த்தரே முக்கியமானவராக இருக்கிறார். அப்போஸ்தலருடைய சிநேகத்தையும் ஆலோசனையையும்விட கிறிஸ்துவின் அன்பும், ஆலோசனையுமே அவருக்கு மிகவும் முக்கியமானதாகயிருக்கிறது.

2 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் எருசலேமுக்கு மறுபடியும் பிரயாணம் செய்கிறார் (கலா 2:1-10) பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது பவுல் அவரோடு விவாதம்பண்ணுகிறார் (கலா 2:11-14) நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார் (கலா 2:15-21).

மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்
கலா 2 : 1-10

கலா 2:1. பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்.

கலா 2:2. நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்; ஆயினும் நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கை யுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்.

கலா 2:3. ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை.

கலா 2:4. கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.

கலா 2:5. சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.

கலா 2:6. அல்லாமலும் எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை; அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லவே.

கலா 2:7. அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்,

கலா 2:8. விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டது போல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு;

கலா 2:9. எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,

கலா 2:10. தரித்திரரை நினைத்துக்கொள்ளும் படிக்குமாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்

ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் இரண்டு பிரிவாகயிருக்கிறார்கள். ஒரு பிரிவார் யூதமார்க்கத்திலிருந்து பிரிந்து வந்து, இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும்ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டவர்கள். மற்றொரு பிரிவார் புறஜாதி மார்க்கத்திலிருந்து பிரிந்து வந்து இரட்சிக்கப்பட்டவர்கள். யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கும், புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கும் சில வித்தியாசங்கள் இருந்தது.

விருத்தசேதன முள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்கு கையளிக்கப்பட்டது. விருத்தசேதன மில்லாதவர்களுக்கு பிரசங்கிக்கும்படி பவுலுக்கு கையளிக்கப்பட்டது. யூதமார்க்கத் திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள், விருத்தசேதனமானது அவசியம் என்று சொல்லுகிறார்கள். தங்கள் இரட்சிப்புக்கு விருத்தசேதனம் பெற்றுக்கொள்கிறார்கள். பவுலோ, விருத்தசேதனத்தினால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை என்று பிரசங்கம் செய்கிறார். புறஜாதியார் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் போதுமானது என்றும், விருத்தசேதனம் பெற்றுக்கொள்வது தேவையற்றது என்றும் உபதேசம் செய்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் மறுபடியும் எருசலேமுக்குப் போகிறார். தன்னோடு தீத்துவையும், பர்னபாவையும் கூட்டிக்கொண்டு போகிறார்.

பவுல் ஏற்கெனவே எருசலேமுக்குப் போனதை குறிப்பிட்டிருக்கிறார் (கலா 1:18). இதற்குப் பிறகு, பதினாலு வருஷம் சென்ற பின்பு அவர் மறுபடியும் எருசலேமுக்குப் போகிறார். இந்தப் பதினாலு வருஷங்களாக அவர் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரைப் பார்க்கவில்லை. பவுலின் ஊழியம் மற்ற அப்போஸ்தலரின் ஊழியத்தைச் சார்ந்திருக்கவில்லை. எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களும் பவுலை தங்களிடத்தில் அழைத்து வந்து, அவரை விசாரிக்கவில்லை. பவுல் புறஜாதி தேசங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கலப்பில்லாமல் பிரசங்கம் செய்கிறார்.

அப்போஸ்தலர் 15-ஆம் அதிகாரத்தில் இந்தப் பிரயாண சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. தன்னோடு தீத்துவையும், பர்னபாவையும் எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு போகிறார். அந்தியோகியாவிலுள்ள சபையார் பர்னபாவை பவுலோடுகூட அனுப்புகிறார்கள். ஆகையினால்தான் பர்னபாவும் இந்தப் பிரயாணத்தில் பவுலோடு கூடப்போகிறார்.

பவுல் பதினாலு வருஷம் சென்ற பின்பு, இரண்டாம் முறையாக, எருசலேமுக்குப் போகும்போது தீத்துவும் அவரோடு கூடப்போகிறார். இவர் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர். பவுல் இப்போது எருசலேமுக்குப் போகும்போது, தீத்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற பிரசங்கியாராக ஊழியம் செய்கிறார். பிறப்பினால் இவர் புறஜாதியார். விருத்தசேதனம் செய்துகொள்ளாதவர். பவுல் விருத்தசேதனமில்லாத தீத்துவை தன்னோடுகூட எருசலேமுக்கு கூட்டிக்கொண்டு போகிறார். விசுவாசத்தினால் மாத்திரமே நாம் நீதிமானாக முடியும் என்றும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை என்றும் பவுல் பிரசங்கம் செய்கிறார். தன்னுடைய பிரசங்கத்திற்குச் சாட்சியாக, பவுல் தன்னோடுகூட, விருத்தசேதனம் செய்துகொள்ளாத தீத்துவையும் எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்.

பவுல் எருசலேமுக்கு தன்னுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமோ, சுயசித்தத்தின் பிரகாரமோ, சுயதிட்டத்தின் பிரகாரமோ போகவில்லை. தேவ அறிவிப்பினாலே அவர் எருசலேமுக்குப் போகிறார். அப்போஸ்தலருக்கு தேவனுடைய விசேஷித்த வெளிப்பாடு கிடைக்கிறது. அவர்கள் தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் பெற்றவர்கள். தெய்வீக வெளிப்பாட்டிற்கு கீழ்ப்படிகிறவர்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். தேவனுடைய வெளிப்பாடுகளையும், வழிநடத்துதல்களையும் பெற்றுக் கொள்ளவேண்டும். நம்முடைய பாதை கர்த்தருக்குச் சித்தமான பாதையாகவும், அவருக்குப் பிரியமான பாதையாகவும் இருக்கவேண்டும். நாம் எங்குபோனாலும் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிறவர்களாக இருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் எருசலேமுக்குப் போய், புறஜாதிகளிடத்தில் அவர் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு தனிமையாய் விவரித்துக் காண்பிக்கிறார். அப்போஸ்தலர் பவுல் ஊழியத்தில் உண்மையுள்ளவராகவும் விவேகமுள்ளவராகவும் இருக்கிறார். புறஜாதியார் மத்தியில் தான் பிரசங்கிக்கிற எந்த சுவிசேஷத்தையும் பவுல் மறைக்கவில்லை. ஊழிய அறிக்கையையும், உபதேச அறிக்கையையும், ஒளிவு மறைவில்லாமல், உள்ளதை உள்ளபடியே சொல்லுகிறார். தான் புறஜாதியார் மத்தியில் பிரசங்கித்த அதே சுவிசேஷத்தையே, இனிமேலும் பிரசங்கிக்க தீர்மானம் செய்திருக்கிறார். பவுலின் பிரசங்கச் செய்தியில் மாற்றம் எதுவுமில்லை.

தன்னுடைய ஊழியத்தைப்பற்றி எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடம் பவுல் சொல்லும்போது மிகுந்த ஞானத்தோடும், மிகுந்த எச்சரிப்போடும் பேசுகிறார். புறஜாதிகளுக்கு பவுல் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை, எல்லோருக்கும் முன்பாக, வெளிப்படையாக விவரித்துக் காண்பிக்காமல், அவர்களுக்கு தனிமையாய் விவரித்துக் காண்பிக்கிறார். எருசலேமிலுள்ள விசுவாசிகளில் அநேகர் யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள். பவுலோ புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்கிறவர். புறஜாதிகளிடத்தில் தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை, எருசலேமிலுள்ள விசுவாசிகளுக்கு, வெளிப்படையாக விவரித்துக் காண்பித்தால், ஒருவேளை அவர்கள் பவுலுக்கு விரோதமாக கலகம் செய்யக்கூடும். பவுலின் ஊழியத்திற்கு அவர்கள் ஒருவேளை தடையாக இருப்பார்கள். பவுல் இதுவரையிலும் ஓடுகிறதும், ஓடினதும் வீணாய்ப் போய்விடுவதற்கு வாய்ப்புள்ளது. தன்னுடைய ஊழியத்திற்கு எந்தவிதமான தடையும் வரக்கூடாது என்பதில் பவுல் மிகுந்த எச்சரிப்போடிருக்கிறார். ஆகையினால் புறஜாதிகளிடத்தில், தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை, எருசலேமிலுள்ள யூதமார்க்கத்தமைந்த விசுவாசிகளிடத்தில், தனிமையாய் விரித்துக் காண்பிக்கிறார்.

பவுல் எருசலேமிலுள்ள விசுவாசிகளிடத்தில் வெளிப்படையாய்ப் பேசினால் குழப்பமுண்டாகும். பவுலின் ஊழியம் பாதிக்கப்படும். அவர் இதுவரையிலும் பிரயாசப்பட்டு ஊழியம் செய்ததது வீணாய்ப் போகும். கர்த்தருடைய ஊழியத்தை இனிமேலும் தொடர்ந்து செய்வதற்கு தடைகள் உண்டாகும். கர்த்தருடைய சித்தத்தின்படி பவுலால் விடுதலையோடு ஊழியம் செய்யமுடியாது. இப்படிப்பட்ட பிரச்சனைகளையெல்லாம் பவுல் தன் மனதில் சிந்தித்துப் பார்த்து, தான் புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை, எருசலேமிலுள்ள விசுவாசிகளிடத்தில், தனிமையாய் விவரித்துக் காண்பிக்கிறார்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் ஆதித்திருச்சபைக்குத் தலைவர்களாகயிருக்கிறார்கள். சபைகளை ஆளுகை செய்கிற அதிகாரம் அவர்களிடத்தில் பொறுப்பாய் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் அங்கீகரிக்கவேண்டும். மற்ற இடங்களிலுள்ளவர்கள் பவுலின் பிரசங்கத்தை அங்கீகரிக்கிறார்களா, அங்கீகரிக்கவில்லையா என்பது முக்கியமல்ல. எருசலேமிலுள்ளவர்கள் அங்கீகரிக்கவேண்டும். ஏனெனில் ஆதித்திருச்சபையின் அதிகாரம் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

புறஜாதிகளிடத்தில் தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தைக் குறித்து பவுல் உறுதியோடிருக்கிறார். எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடம், தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை, தனிமையாய் விவரித்துக் காண்பித்தாலும், பவுலின் வார்த்தையில் உறுதி இருக்கிறது. தான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை பவுல் உறுதியாய்ப் பின்பற்றுகிறார். பவுல் தன்னோடுகூட தீத்துவை எருசலேமுக்கு அழைத்து வந்திருக்கிறார். அவர் ஒரு கிரேக்கர். தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படிக்கு கட்டாயம் பண்ணப் படவில்லை. தீத்து விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் யாரும் கட்டாயம்பண்ணவில்லை. புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் படுகிறவர்கள் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் ஒருபோதும் கட்டாயம் பண்ணவில்லை.

புறஜாதியாரும் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கட்டாயம் பண்ணாவிட்டாலும், வேறுசிலர் இதைக் கட்டாயம் பண்ணுகிறார்கள். இவர்கள் கள்ளச்சகோதரர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் தங்களுக்குண்டான சுயாதீனத்தை இவர்கள் உளவு பார்க்க வந்தவர்கள் என்று பவுல் இவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். தங்களை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாக பக்கவழியாக வந்த கள்ளச்சகோதரர்கள் என்றும் பவுல் இவர்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

விசுவாசிகளை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைப்படுத்த வேண்டுமென்பதே கள்ளச்சகோதரரின் திட்டம். தீத்து பவுலோடு கூடயிருக்கிறார். தீத்து விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், மற்ற புறஜாதியாரும் விருத்தசேதனம்பண்ண வேண்டுமென்று சொல்லுவது கள்ளச்சகோதரருக்கு எளிதாக இருக்கும். புறஜாதியாரை விருத்தசேதனம் பண்ண வைத்தால், அவர்களை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கி விடலாம் என்பது கள்ளச்சகோதரரின் திட்டம். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைவிட, மோசேயின் பிரமாணத்திற்கு, இந்தக் கள்ளச்சகோதரர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

விசுவாசிகளை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைகளாக்க முயற்சி செய்யும் கள்ளச்சகோதரர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் எதிர்த்து நிற்கிறார். பவுலும் அவரோடு கூடயிருக்கிறவர்களும் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்கு கீழ்ப்படிந்து இணங்கவில்லை. விசுவாசிகளிடத்தில் சுவிசேஷத்தின் சத்தியம் நிலைத்திருக்கவேண்டுமென்பதே பவுலின் விருப்பம். ஆகையினால் பவுல் மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து இணங்கவில்லை. முன்னோர்களின் பாரம்பரியங்களுக்கு பவுல் கீழ்ப்படியவில்லை.

இயேசுகிறிஸ்து நமக்கு அடிமைத்தனத்தின் ஆவியைக் கொடுக்காமல் சுயாதீனத்தின் ஆவியைக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் நம்மை, நம்முடைய பாவங்களுக்கும், சாபங்களுக்கும் விடுவித்திருக்கிறார். நியாயப்பிரமாணத்தின் அடிமைத் தனத்திற்கு விடுவித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து கொடுத்திருக்கிற விடுதலையில் விசுவாசிகள் நிலைத்திருக்கவேண்டும் என்றும், தாங்கள் பெற்றுக்கொண்ட விடுதலையை இழந்துபோகக்கூடாது என்றும் பவுல் தீர்மானமாயிருக்கிறார். இதனால் பவுலும் அவரோடு கூடயிருக்கிறவர்களும், நியாயப்பிரமாணத்திற்கு தங்களை அடிமையாக்க நினைக்கும் கள்ளச்சகோதரருக்கு ஒரு நாழிகையாகிலும் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.

அப்போஸ்தலர் பவுல் எருசலேமுக்கு வந்தபோது அங்குள்ள மற்ற அப்போஸ்தலரோடு உரையாடுகிறார். அவர் எருசலேமில் இருந்த நாட்களில், அங்குள்ள அப்போஸ்தலர்கள் பவுலுக்கு ஒன்றும் போதிக்கவில்லை. பவுல் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திலிருந்து அப்போஸ்தல அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களிடமிருந்து எந்த போதனையையும் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் எப்படிப்பட்டவர்களாகயிருந்தாலும் தனக்கு கவலையில்லை என்று பவுல் தெளிவுபடுத்துகிறார். தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்ல. எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களை நேசிக்கிற தேவன், பவுலையும் நேசிக்கிறார். இந்தச் சத்தியத்தில் பவுல் உறுதியாக இருக்கிறார்.

எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் பவுலுக்கு முன்பாகவே அப்போஸ்தல ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் பவுல் தானும் அவர்களைப்போல, அவர்களுக்குச் சமமான அப்போஸ்தலர் என்று தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய சித்தத்தினால் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வெளிப்பாட்டின் மூலமாகவே பவுல் தெய்வீக சத்தியங்களைப் பெற்றுக்கொண்டார். பவுல் வெளிப்பாட்டின் மூலமாகப் பெற்றுக்கொண்ட சத்தியத்தைத் தவிர, வேறு புதிய சத்தியம் எதையும், எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் அவருக்குப் போதிக்கவில்லை. பவுல் உபதேசிக்கிற சுவிசேஷத்திற்கு விரோதமாகவும் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

பவுலின் அப்போஸ்தல ஊழியத்தை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் அங்கீகரிக்கிறார்கள். அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தை அவர்களும் உறுதிபண்ணுகிறார்கள். தங்களைப்போல பவுலும் ஒரு அப்போஸ்தலர் என்று சொல்லி, அவரை அப்போஸ்தலராக அங்கீகாரம் செய்கிறார்கள். விருத்தசேதனமுள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே, விருத்தசேதனமில்லாதவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பவுலுக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது என்பதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் காண்கிறார்கள்.

ஆதித்திருச்சபையில் யாக்கோபு, கேபா, யோவான் ஆகியோர் தூண்களாக எண்ணப்பட்டவர்கள். பவுலுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். பவுல் புறஜாதிகளுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்கள். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள், பவுலோடும் அவருடைய உடன்ஊழியரோடும் அந்நியோந்நிய ஐக்கியத்தோடிருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்கிறார்கள். தங்களுடைய அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக அவர்கள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் வலது கை கொடுக்கிறார்கள்.

பவுல் மறுபடியும் எருசலேமுக்கு வந்தது மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது. எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் பவுலோடு இசைவாக ஒத்துப்போகிறார்கள். அவரோடு அந்நியோந்நிய ஐக்கியத்தில் இருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்கள். அவர்கள் பவுலின் உபதேசத்தையும் நடத்தையையும் அங்கீகரிக்கிறார்கள். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் பவுலுக்குப் புதிதாக ஒன்றும் போதிக்கவில்லை. "தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு" மாத்திரம் அவர்கள் பவுலுக்குச் சொல்லுகிறார்கள். பவுல் ஏற்கெனவே தரித்திரரை நினைக்கிறவர். அவர்கள்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறவர். அவர்கள் தரித்திரரைப் பற்றிச் சொன்னது பவுலுக்குப் புதிய உபதேசமல்ல. ஏற்கெனவே பவுல் செய்கிற ஊழியத்தை, அவர் தொடர்ந்து செய்யுமாறு, அவரை உற்சாகப்படுத்துகிறார்கள். தரித்திரரை நினைத்துக்கொள்வதற்கு தான் முன்னமே கருத்துள்ளவராக இருந்ததாக பவுலும் குறிப்பிடுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தங்களைப்போல கர்த்தருக்கு ஊழியம் செய்கிற மற்ற ஊழியக்காரர்களுக்கும் மரியாதை காண்பிக்கவேண்டும். அவர்களோடு அந்நியோந்நிய ஐக்கியத்திலிருக்க வேண்டும். நம்மைப்போலவே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற மற்ற ஊழியக்காரர்களையும் நேசிக்கவேண்டும். ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்யும்போது, ஊழியக்காரரின் ஐக்கியமும் ஒற்றுமையும் ஜனங்களுக்குத் தெரியவேண்டும். ஊழியக்காரர் மத்தியில் அதிகமான குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும், பிரிவினைகளும் இருக்குமென்றால், ஜனங்கள் மத்தியில் அவர்களால் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த முடியாது.

பவுலும் பேதுருவும்
கலா 2 : 11-14

கலா 2:11. மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ் சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்.

கலா 2:12. எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்த சேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்.

கலா 2:13. மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம் பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்.

கலா 2:14. இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியருக்கு நிருபம் எழுதும்போது, தான் எருசலேமுக்கு இரண்டாம் முறையாக பிரயாணம் செய்ததை எழுதுகிறார். அதன்பின்பு அவர் அந்தியோகியாவிலே, பேதுருவோடு பண்ணிய ஒரு விவாதத்தையும் குறிப்பிட்டு எழுதுகிறார். இதற்கு முன்பு இவர்கள் இருவரும் சந்தித்துக்கொண்டபோது, மிகுந்த ஒற்றுமையோடும், இசைவாகவும் இருந்தார்கள். ஆனால் இப்போதோ, பேதுரு செய்த ஒரு தப்பிதத்தினிமித்தம், பவுல் பேதுருவை எதிர்ப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்.

பேதுரு புறஜாதியார் மத்தியிலும் ஊழியம் செய்தார். அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்தார். புறஜாதியாருடனே சாப்பிட்டார். அப்போது எருசலேமிலிருந்து யூதமார்க்கத்தமைந்த விசுவாசிகள் சிலர் பேதுருவிடத்திற்கு வந்தார்கள். அவர்களெல்லோரும் விருத்த சேதனமுள்ளவர்கள். அவர்கள் தன்னிடத்தில் வந்தபோது, பேதுரு அவர்களுக்குப் பயந்து, புறஜாதியாரைவிட்டு விலகிப் பிரிந்தார். பேதுரு புறஜாதியாரை விட்டு விலகிப் பிரிவதைப் பார்த்து, மற்ற யூதரும் பேதுருவுடனேகூட மாயம் பண்ணினார்கள். இதுவரையிலும் புறஜாதியாருடனே சாப்பிட்டவர்கள், இப்போது மற்ற யூதர்களுக்குப் பயந்து, புறஜாதியாரை விட்டு விலகிப் பிரிகிறார்கள். புறஜாதியார்களுக்கு அப்போஸ்தலராக ஊழியம் செய்த பர்னபாவும் அவர்களில் ஒருவர். அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டார். பேதுருவும், அவருடனேகூட ஊழியம் செய்தவர்களும் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடக்கவில்லை.

பேதுருவும் பர்னபாவும் கர்த்தருக்கு அப்போஸ்தலர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புறஜாதியார் மத்தியில் அப்போஸ்தல அதிகாரத்தோடு பிரசங்கம் செய்கிறார்கள். சபைக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் பலவீனம் உண்டாகும்போது அது மற்றவர்களையும் அதிகமாகப் பாதிக்கிறது. சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி தலைவர்கள் சரியாய் நடக்கவில்லையென்றால், அதனால் சபைக்கு அதிக பாதிப்பும், விசுவாசிகள் மத்தியில் அதிக குழப்பமும் உண்டாகிறது. ஆகையினால் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனுஷருக்குப் பயப்படாமல், கர்த்தருக்கு மாத்திரமே பயந்து ஊழியம் செய்யவேண்டும். மனுஷரைப் பிரியப்படுத்த ஊழியம் செய்யாமல், கர்த்தரையே பிரியப்படுத்தவேண்டும். உபதேசத்திலும் விசுவாசத்திலும் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும்.

சபையின் தலைவர்கள் விசுவாசிகளுக்கு நல்ல முன்மாதிரிகளாக இருக்கவேண்டும். தலைவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடக்கவில்லையென்றால், விசுவாசிகள் மத்தியில் அதிகமான குழப்பங்கள் உண்டாகிவிடும். விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாக நிலைத்து நிற்கமாட்டார்கள். பிரசங்கம் செய்கிறவர்கள் தாங்கள் பிரசங்கிக்கிற செய்திக்கேற்ற பிரகாரம் ஜீவிக்கவில்லையென்றால், அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள், தாங்கள் கேட்ட பிரசங்கச் செய்திக்கேற்ற பிரகாரம் ஜீவிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

பேதுருவும் மற்ற யூதரும் மாய்மாலம் பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அதைக் கண்டபோது, எல்லோருக்கும் முன்பாக பேதுருவைக் கடிந்துகொள்கிறார். பேதுரு யூதனாகயிருக்கிறார். அவர் புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி கட்டாயம்பண்ணுகிறார். இதற்காக பவுல் பேதுருவைக் கடிந்துகொள்கிறார். எல்லோருக்கும் முன்பாக பேதுருவைக் கடிந்துகொள்ள பவுல் பயப்படவில்லை. பவுல் தன்னுடைய உபதேசத்தில் உறுதியாக இருக்கிறார். மற்ற ஊழியரிடத்தில் தப்பிதம் காணப்படும்போது, பவுல் அதை கண்டும் காணாதவர்போல் இருக்கிறவரல்ல.

புறஜாதியார்கள் யூதர் முறைமையாக நடந்தால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் என்பது தவறான உபதேசம். ஏனெனில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மனுஷன் நீதிமானாக்கப் படுவதில்லை. விசுவாசத்தினால் மாத்திரமே மனுஷன் நீதிமானாக்கப்படுகிறான். இதுவே அடிப்படை சத்தியம். பேதுரு இந்தச் சத்தியத்திற்கு மாறாக உபதேசம் செய்து மாய்மாலம் பண்ணினார். அவருடனேகூட மற்ற யூதரும் மாய்மாலம் செய்தார்கள். பவுல் அவர்களுடைய மாய்மாலத்தைக் கண்டிக்கிறார். பேதுருவை எல்லோருக்கும் முன்பாக கண்டிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் நீதிமான்கள்
கலா 2 : 15-21

கலா 2:15. புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை யென்று அறிந்து, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்.

கலா 2:16. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.

கலா 2:17. கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ அல்லவே.

கலா 2:18. நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்.

கலா 2:19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப் பிரமாணத்திற்கு மரித்தேனே.

கலா 2:20. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில்அறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

கலா 2:21. நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

அப்போஸ்தலர் பவுல் பேதுருவின் மாய்மாலத்தை கண்டித்து எழுதுகிறபோது, சுவிசேஷத்தின் அடிப்படை சத்தியத்தையும் இங்கு தெளிவாக எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். புறஜாதியாராக யிருந்தாலும், யூதராகயிருந்தாலும், நீதிமானாக்கப்படுவதற்கு இதுவே சத்தியம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை. கலாத்தியர் மத்தியில் பவுல் இந்த அடிப்படை சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார். இந்த உபதேசத்தில் அவர் நிலைத்து நிற்கிறார். கலாத்தியருக்கு எழுதின இந்த நிருபத்தில், பவுல் இந்த உபதேசத்தை தெளிவுபடுத்தி உறுதிபண்ணுகிறார்.

யூதமார்க்கத் தமைந்த விசுவாசிகளும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தங்கள் பாவம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மன்னிக்கப்படும் என்று அவர்கள் விசுவாசித்தால், கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கிற விசுவாசம் பிரயோஜனமற்றதாக இருக்கும். ஏனெனில் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயே நாமெல்லோரும் இரட்சிக்கப்படுகிறோம். அப்படியிருக்கும் போது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தாங்கள் நீதிமான்களாக்கப்படுவதாக யூத மார்க்கத்தமைந்த விசுவாசிகள் விசுவாசிக்கிறார்கள். இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்களுக்கு, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் தேவையற்றதாகவே இருக்கும். இவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் நீதிமான் களாக்கப்படும்படி யூதர்களும் நாடுகிறார்கள். ஆனால் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் பாவிகளாகக் காணப்படுகிறார்கள். இவர்களுடைய பாவத்திற்கு கிறிஸ்து காரணரல்ல. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்பட முடியும் என்பது யூதமார்க்கத்தின் உபதேசம். அந்த உபதேசத்திலிருந்து விட்டுப் பிரிந்து, யூதமார்க்கத்தமைந்த விசுவாசிகள், கிறிஸ்துவைப் பற்றிக்கொள்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிறார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படும்படிக்கு கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளாக இருக்கிறார்கள். இது புதிய அனுபவம். நியாயப்பிரமாணத்தின் கிரியை பழைய அனுபவம். பழைய சுபாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, கிறிஸ்துவுக்குள் புதிய சுபாவத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இரட்சிக்கப்பட்ட பின்போ, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தான் நீதிமானாவதில்லை என்றும், இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே தான் நீதிமானாக்கப்படுவதாகவும் உறுதியாகச் சொல்லுகிறார். யூதமார்க்கத்தின் பழைய உபதேசத்தை இடித்துப்போட்டு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பற்றிக்கொண்டார். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், அவர்கள் இடித்துப்போட்டவைகளை மறுபடியும் கட்டுகிறவர்களாகயிருப்பார்கள். பவுல் அப்படியிருக்க விரும்பவில்லை. பவுல், தான் இடித்துப்போட்டதை மறுபடியும் கட்டினால், அவர் பிரமாணத்தை மீறுகிறவர் என்று காணப்படுவார். நியாயப்பிரமாணத்தை மீறின பாவத்திற்கு உட்பட்டவராகக் காணப்படுவார். ஆனால் பவுலோ தேவனுக்கென்று பிழைக்கும்படியாக, நியாயப் பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறித்து தன்னுடைய உபதேசத்தைச் சொல்லுகிறார். அவர் நியாயப் பிரமாணத்தினாலே நியாயப் பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார். நியாயப்பிரமாணத்தின் கிரியையினால் நீதிமானாக்கப்பட முடியும் என்று பவுல் எதிர்பார்க்கவில்லை. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசுவாசமே தன்னை நீதிமானாக்கும் என்று பவுல் விசுவாசிக்கிறார். இயேசுகிறிஸ்து பாவிகளை இரட்சிக்க தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தியிருக்கிறார். மனுஷரை மீட்பதற்கு, தம்முடைய சொந்த இரத்தத்தையே, மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். மனுஷருடைய இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறொரு பலி தேவையில்லை.

அப்போஸ்தலர் பவுல் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தவராகயிருந்தாலும், தன்னை நியாயப்பிரமாணமில்லாதவராக காண்பித்துக் கொள்ளவில்லை. தேவனுக்கென்று பிழைக்கும்படியாகவே, அவர் நியாயப்பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார். சுவிசேஷத்தின் உபதேசம் நம்முடைய கடமைகளிலிருந்து நமக்கு விடுதலை கொடுக்காது. நாம் செய்யவேண்டிய கடமைகளை நாம் செய்தே ஆகவேண்டும். நம்முடைய கடமைகளைச் செய்வதற்கு சுவிசேஷம் நம்மைப் பலப்படுத்துகிறது. அப்போஸ்தலர் பவுல் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவராகயிருந்தாலும், தேவனுக்கென்று பிழைக்கும்படியாகவே அவர் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தவராகயிருக்கிறார். தேவனுக்கென்று புதிய ஜீவனையும், மேன்மையான ஜீவனையும் ஜீவிக்கும்படியாகவே, அவர் நியாயப்பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்கென்று பிழைக்கிறார். அவர் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். ஆயினும் பிழைத்திருக்கிறார். இனி அவரல்ல, கிறிஸ்துவே அவருக்குள் பிழைத்திருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் மாம்சத்தில், இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் பிழைத்திருக்கிறார்.

தேவனுடைய கிருபையில் பவுல் ஆறுதலடைந்திருக்கிறார். தேவகிருபை அவருக்கு சுயமாய்க் கிடைக்கவில்லை. அந்தக் கிருபையை அவர் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பவுலிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்காக, தம்மைதாமே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் மரணத்தை பவுல் நினைவுகூர்ந்து, தானும் பாவத்திற்கு மரித்திருப்பதாகச் சொல்லுகிறார். பவுல் பாவத்திற்கு மரித்திருந்தாலும் கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறார். கிறிஸ்து தனக்குள் பிழைத்திருப்பதாக பவுல் அறிக்கை செய்கிறார்.

பவுல் மாம்சத்தில் பிழைத்திருக்கிறார். அதே வேளையில் அவர் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறார். வெளிப்பார்வைக்கு பவுல் மற்ற மனுஷரைப்போல இருந்தாலும், அவருடைய உள்ளான ஜீவியம் வித்தியாசமாகயிருக்கிறது. அவர் மாம்சத்தில் பிழைத்திருந்தாலும், அவர் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறார். உண்மையான விசுவாசமுடையவர்கள், விசுவாசத்தினாலே பிழைப்பார்கள். எல்லோரும் மாம்சத்தில் பிழைத்திருந்தாலும், எல்லோரும் விசுவாசத்தினாலே பிழைத்திருப்பதில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, மாம்சத்திலே, விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறோம். இதுவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும், உலகப்பிரகாரமான ஜனங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நாம் நீதிமானாக்கப் பட்டிருக்கிறோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை. அப்போஸ்தலர் பவுல், நீதிமானாக்கப்படுவதைப் பற்றிச் சொல்லும்போது, தேவனுடைய கிருபையைப்பற்றியும் சொல்லுகிறார். பவுல் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை. நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வராது. அது தேவனுடைய கிருபையினால் மாத்திரமே வரும். நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்கும் என்று பவுல் சொல்லுகிறார். மோசேயின் பிரமாணத்தினால் நமக்கு இரட்சிப்பு வருமென்றால், கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தது தேவையற்றதாகயிருக்கும். மோசேயின் பிரமாணத்தினால் மனுஷருக்கு இரட்சிப்பு உண்டாகாது. ஆகையினால்தான் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, மனுக்குலத்திற்கு இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்காக, கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

3 அதிகாரம்

கலாத்தியா தேசத்திலுள்ள சபையார் ஆரம்பத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்தார்கள். அதன்பின்பு தங்கள் விசுவாசத்திலிருந்து விலகி பின்வாங்கிப் போய்விட்டார்கள். அப்போஸ்தலர் பவுல் கலாத்தியருடைய பின்மாற்றத்தினிமித்தம் அவர்களைக் கடிந்துகொள்கிறார். விசுவாசத்தினால் மனுஷர் நீதிமானாக்கப் படுகிறார்கள் என்றும், நீதிமானாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் தேவையற்றவை என்றும் பவுல் தெளிவுபடுத்துகிறார்.

இதற்காக ஒரு சில சம்பவங்களை எடுத்துக்காட்டுகளாகச் சொல்லுகிறார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் தன்மையும், விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியங்களும் விசுவாசத்தை மையமாக வைத்தே அமைந்திருக்கிறது. தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்ததில் விசுவாசம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆகையினால் விசுவாசிகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிப் பதிலிருந்து விலகிப்போய், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக் கொள்ளக்கூடாது. மனுஷருடைய மீறுதலினிமித்தமாகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தை இரட்சிப்பதற்கு ஒரு இரட்சகர் தேவைப்படுகிறார் என்பதை ஜனங்களுக்கு புரிய வைப்பதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிர மாணமானது நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாக இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் அவருக்கு புத்திரராகயிருக்கிறோம். இது விசுவாசிகளுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

ஆவியினால் ஆரம்பம் பண்ணினவர்கள் கலா 3 : 1-5

கலா 3:1. புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையில்லறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே.

கலா 3:2. ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி னாலேயோ, விசுவாசக் கேள்வியி னாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?

கலா 3:3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?

கலா 3:4. இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே.

கலா 3:5. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தைக் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு எழுதுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தினால் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமானாக்கப்படவேண்டும் என்றும் முயற்சி செய்கிறார்கள். தாங்கள் நீதிமானாக்கப்படுவதற்கு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும் வேண்டும், அதே வேளையில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் செய்யவேண்டும் என்று சுயமுயற்சி செய்கிறார்கள்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் தடுமாற்றமடைந்திருக்கிறார்கள். பவுல் இவர்களைக் கடினமான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறார். இவர்களை அழைக்கும்போது, "புத்தியில்லாத கலாத்தியரே" என்று சொல்லுகிறார். "சத்தியத்திற்கு கீழ்ப்படியாமல் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்" என்று அவர்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்கிறார்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்னும் சத்தியம் அவர்களுக்கு உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. விசுவாசத்தினால் அவர்கள் நீதிமான்களாக்கப்பட முடியும் என்று பவுல் அவர்களுக்கு ஏற்கெனவே உபதேசம் செய்திருக்கிறார். இதுவே சுவிசேஷத்தின் வழி. சத்தியத்தை நாம் அறிந்திருக்கிறோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. சத்தியத்தை நாம் விசுவாசிக்கிறோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. நாம் சத்தியத்திற்கு மெய்யாக கீழ்ப்படியவேண்டும். இல்லையென்றால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நிலைதடுமாறும். கலாத்தியாவிலுள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய தடுமாற்றத்திலிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக அவர்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். சிலுவையைப்பற்றிய உபதேசம் அவர்களுக்கு தெளிவாக உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பந்தியிலும் அவர்கள் பங்குபெறுகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவம், கர்த்தருடைய பந்தியின் மூலமாய், அவர்களுக்கு தொடர்ந்து உபதேசம் பண்ணப்பட்டு வருகிறது.

சிலுவையைப்பற்றிய உபதேசத்தின் மூலமாகவும், கர்த்தருடைய பந்தியில் அவர்கள் பங்குபெறுவதன் மூலமாகவும், இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக அவர்கள் கண்களுக்கு முன், அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியானவரை எப்படி பெற்றுக் கொண்டார்களென்று பவுல் அவர்களிடத்தில் ஒரு கேள்வி கேட்கிறார். ஆவியானவர் அவர்களுடைய ஆத்துமாக்களில் கிரியை செய்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்களுக்கு எப்படி கிடைத்தது என்பதை கலாத்தியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேவனுடைய வரங்களையும், அவருடைய கிருபைகளையும் கலாத்தியர் எப்படி பெற்றுக்கொண்டார்கள் என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயா அல்லது விசுவாசக் கேள்வியினாலேயா, அவர்கள் எதினாலே ஆவியைப் பெற்றார்கள் என்று பவுல் தெரிந்துகொள்ள விரும்புகிறார். விசுவாசக்கேள்வியினாலே ஆவியைப் பெற்றதாக கலாத்தியர்கள் சொன்னார்களென்றால், அந்த விசுவாசத்தை அவர்கள் பற்றிக்கொள்ளவேண்டும். விசுவாசத்தை விட்டு விலகிப்போய், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக்கொள்ள முயற்சிபண்ணக்கூடாது.

கலாத்தியருடைய கடந்த கால அனுபவத்தையும், அவர்களுடைய தற்போதைய அனுபவத்தையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று, பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் ஆவியினால் ஆரம்பம் பண்ணினார்கள். அவர்களுடைய ஆரம்பம் மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ அவர்கள் நியாயப் பிரமாணத்தினுடைய கிரியைகளின் பக்கமாய்த் திரும்பியிருக்கிறார்கள்.

கிறிஸ்துவிலும் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். ஆனால் பரிபூரணமான பரிசுத்த நிலமையை அடைவதற்கு விசுவாசம் மாத்திரம் போதாது என்றும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் நிறைவேற்றவேண்டும் என்றும் இப்போது சொல்லுகிறார்கள். விசுவாசத்தோடு கிரியைகளையும் சேர்த்துக்கொண்டால்தான் நீதிமானாக்கப்பட முடியும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது.

கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்திற்குப் பதிலாக, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நாம் அங்கீகரித்தால், நமக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. சுவிசேஷத்தை விசுவாசிப்பதோடு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் செய்தால் சுவிசேஷத்திற்கு மேன்மை உண்டாகும் என்று கலாத்தியர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய செயலினால் சுவிசேஷத்திற்கு மேன்மை உண்டாகாது. தாழ்மையே உண்டாகும்.

கலாத்தியர்கள் இதுவரையிலும் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் மேன்மையான நிலமையிலிருந்தார்கள். ஆவியினாலே தங்கள் ஜீவியத்தை ஆரம்பம்பண்ணினார்கள். தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றார்கள். இப்போதோ அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக்கொண்டார்கள். இதனால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிட்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப்போய், ஆவியே இல்லாத ஒரு ஜீவியத்திற்கு பின்மாற்றமடைந்திருக் கிறார்கள்.

கலாத்தியர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்தார்கள். கிறிஸ்தவ உபதேசங்களை தங்கள் ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டார்கள். சத்தியத்திற்காக அநேக பாடுகளைப் பட்டார்கள். ஆனால் இப்போதோ விசுவாசத்தோடு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளும் தேவையென்று சொல்லுகிறார்கள்.

இதனால் அவர்கள் பட்ட எல்லா பாடுகளும் வீணாய்ப் போயிற்று. ஆவியினால் ஆரம்பம் பண்ணின அவர்கள் இப்பொழுது மாம்சத்தினால் முடிவு பெறப்போகிறார்கள். அவர்கள் இத்தனை புத்தியீனராகயிருக்கிறார்கள். ஆகையினால்தான் பவுல் அவர்களை, "புத்தியில்லாத கலாத்தியரே" என்று சொல்லுகிறார்.

தேவன் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவரை கொடுத்து, அவர்களுக்குளே அற்புதங்களை நடப்பிக்கிறார். தேவன் இதை நியாயப்பிரமாணத்தின் கிரியை களினால் செய்யவில்லை. விசுவாசக் கேள்வியினாலே செய்கிறார். இந்தச் சத்தியம் கலாத்தியருக்கு நன்றாகத் தெரியும். இந்தச் சத்தியத்தை அவர்கள் ஏற்கெனவே அங்கீகரித்து ஏற்றுக் கொண்டவர்கள். இதை விசுவாசிக் கிறார்கள்.

ஆனால் இப்போதோ தாங்கள் விசுவாசித்த சத்தியத்தை விட்டுவிட்டு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் என்னும் புதிய உபதேசத்தைப் பற்றிக் கொள்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்க வில்லை. இந்தக் கிரியைகளினால் தேவன் அவர்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கவுமில்லை. இவர்கள் மெய்யான சத்தியத்தை விட்டு விட்டு, மாயையான கள்ளஉபதேசத்தைப் பற்றிக்கொள்கிறார்கள்.

ஆபிரகாம்
கலா 3 : 6-18

கலா 3:6. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

கலா 3:7. ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.

கலா 3:8. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.

கலா 3:9. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்.

கலா 3:10. நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற் குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப் பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவை களையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.

கலா 3:11. நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிற தில்லையென்பது வெளியரங்க மாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே.

கலா 3:12. நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்.

கலா 3:13. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.

கலா 3:14. ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.

கலா 3:15. சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப் பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.

கலா 3:16. ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கு வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கும் என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.

கலா 3:17. ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்த மாக்கமாட்டாது.

கலா 3:18. அன்றியும், சுதந் தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத் தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே.

விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிற சத்தியத்தைக் கலாத்தியர்கள் ஒதுக்கி தள்ளிவிட்டார்கள். அப்போஸ்தலர் பவுல் அவர்கள் ஒதுக்கி தள்ளிய சத்தியமே மெய்யான சத்தியம் என்று இந்த வசனப்பகுதியில் உறுதி பண்ணுகிறார். ஆபிரகாம் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டார் என்பதை எடுத்துக் காட்டாகச் சொல்லி, விசுவாசத்தினால் மனுஷர் நீதிமானாக்கப்படுவதை உறுதிபண்ணுகிறார்.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியான எண்ணப்பட்டது. ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடு பற்றிக்கொண்டார்.

தேவன் ஆபிரகாமினுடைய விசுவாசத்தினிமித்தம் அவரை நீதிமானாக ஏற்றுக்கொண்டார். ஆபிரகாம் மாத்திரமல்ல, விசுவாச மார்க்கத்தார்கள் அனைவரும் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் பட்டதுபோல, விசுவாசமார்க்கத்தார் அனைவரும் தங்கள் விசுவாசத்தினால் நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவன் யூதமார்க்கத்தாரை மாத்திரமல்ல, புறஜாதியாரையும் நீதிமான் களாக்குகிறார். அவர்களையும், அவர்களுடைய விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்குகிறார். இயேசுகிறிஸ்து ஆபிரகாரமின் சந்ததியாகயிருக்கிறார். ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதுபோல, ஆபிரகாரம் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாக, புறஜாதியாரும் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அவர்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் விசுவாசித்தார். இதனால் அவர் ஆசீர்வதிக்கப்பட்டார். புறஜாதி ஜனங்களும் ஆபிரகாரமைப்போலவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். கிறிஸ்துவின் மூலமாய் புறஜாதி ஜனங்களும் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்.

“உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்று தேவன் ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தார். அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் அனைவரும், விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். புறஜாதி ஜனங்களும், இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். விசுவாசத் தினாலேயே, விசுவாசமார்க்கத்தார் அனைவரும் இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைக் காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக் கிறார்கள். சுவிசேஷத்தை விசுவாசியாமல் யாரும் நீதிமானாக்கப்பட முடியாது. நியாயப்பிரமாணம் மனுஷரை சாபத்திற் குட்படுத்துகிறது. இது யாரையும் நீதிமானாக்குவதில்லை. நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை யெல்லாம் செய்யத்தக்கதாக, நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரர் யாவரும் அவைகளில் நிலைத்திருக்கவேண்டும். அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவனாகயிருப்பான். நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்ட பிரகாரம் நாம் நியாயந்தீர்க்கப் படுவோமென்றால், நாம் எல்லோருமே குற்றவாளிகளாகவும், சபிக்கப்பட்டவர் களாகவுமே இருப்போம். நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரர் யாவரும் சாபத்திற்குட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

நியாயப்பிரமாணம் விசுவாசத்திற் குரியதல்ல. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்கிற மனுஷன் அவைகளாலே பிழைப்பான். நியாயப் பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகள் எல்லாவற்றையும் செய்து, அவைகளில் நிலைத்திருக்கிறவன் மாத்திரமே, நியாயப் பிரமாணத்தினால் பிழைப்பான். அவைகள் அனைத்திலும் ஒருவன் நிலைத்தி ராவிட்டால் அவன் சபிக்கப்பட்ட வனாகவே இருப்பான். நியாயப்பிர மாணத்திற்கு பூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும். ஏதாவது ஒரு பகுதியில் கீழ்ப்படியவில்லையென்றாலும், நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரர்கள் சபிக்கப் பட்டவர்களாகவே இருப்பார்கள்.

நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியை களினால் நீதிமானாக்கப்பட வேண்டு மென்று முயற்சிசெய்தால், நாமும் சபிக்கப் பட்டவர்களாகவே இருப்போம். ஏனெனில் நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிற தில்லை. இது வெளியரங்கமாக இருக்கிறது. இது மறைவான இரகசியமல்ல. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நியாயப் பிரமாணத்தினால் நீதிமானாக்கப்பட முடியும் என்று எதிர்பார்ப்பது வீணான காரியம். நியாயப்பிரமாணத்தின் மூலமாய் நமக்கு நீதி கிடைப்பதற்குப் பதிலாக சாபமே வருகிறது.

நியாயப்பிரமாணத்தின் மூலமாய் வருகிற சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரு வழி இருப்பதாக பவுல் கலாத்தியருக்குச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத் தினால், நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலை பெறமுடியும். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறது. கிறிஸ்து நமக்காக மரத்திலே தூக்கப்பட்டார். அவர் நமக்காக சாபமானார். இதுவே கிறிஸ்துவின் வழி. இதன் மூலமாய் நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொள் வதற்காக, ஒரு புதுமையான வழியைத் தெரிந்தெடுத்திருக்கிறார். அவரே நமக்காக சாபமானார். இதன் மூலமாய் ஆபிரகாமுக்குண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வருகிறது. இயேசுகிறிஸ்து நமக்காக சாபமானதினால், சிலுவையைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்கிறோம்.

இயேசுகிறிஸ்துவை விசவாசிக்கிறவர் களெல்லோரும் ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்கு சுதந்தரவாளிகளாக யிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தத்திற்குப் பங்காளிகளாக யிருக்கிறார்கள். கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வதினால் அவர்கள் நீதிமானாக்கப்படுவதில்லை. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் மாத்திரமே அவர்கள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ஆபிரகாமுக்குண்டான ஆசீர்வாதம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவர்களுக்கு வருகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் அவர்கள் தேவனுடைய புத்திரராகயிருக்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறார்கள். இந்தச் சிலாக்கியங்களெல்லாம் விசுவாசத்தினால் மாத்திரமே உண்டாகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் உண்டாகவில்லை.

அப்போஸ்தலர் பவுல் நீதிமானாக்கப் படுவதைப்பற்றிச் சொல்லும்போது, பழைய ஏற்பாட்டிலுள்ள வேதவசனங்களை இங்கு சாட்சியாகச் சொல்லுகிறார். விசுவாசத் தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது (கலா 3:11). விசுவாசத்தினால் மாத்திரமே மனுஷர் நீதிமானாக்கப்பட முடியும். விசுவாசத்தினால் மாத்திரமே ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும். ஜீவனுக்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். நியாயப் பிரமாணம் விசுவாசத்திற்குரியதல்ல.

"நியாயப்பிராமணத்தை செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "நியாயப்பிரமாணத்தைச் செய்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தில் பிழைக்கவேண்டும்" என்பது பொருளாகும். இவர்கள் நியாயப்பிரமாணத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை தங்கள் ஜீவியத்தில் மாறாத பிரமாணமாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

நியாயப்பிரமாணத்தின் கிரியை களுக்கு சிறிது மீறி நடந்தாலும், நீதிமானாக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. அவர்களுக்கு நீதிக்குப் பதிலாக சாபமே உண்டாகும். இதனால் நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரர்கள் அனைவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத் தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது.

தேவன் ஆபிரகாமோடு ஏற்படுத்திய உடன்படிக்கை ஸ்திரமாகயிருக்கிறது. மோசேக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதினால், தேவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் ஸ்திரதன்மை குறைந்துபோகவில்லை. அந்த உடன்படிக்கை வலுவிழந்துவிடவில்லை. மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதில்லையென்றும், அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதில்லை என்றும் பவுல் இதை விவரமாகச் சொல்லுகிறார்.

விசுவாசமானது வாக்குத்தத்தத்திற்கு முந்தியது. ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார். அவருக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பற்றி எதுவும் தெரியாது. மோசேயின் நியாயப்பிரமாணம் ஆபிரகாமுக்கு நானூற்று வருஷத்திற்குப் பின்பு உண்டாயிற்று. மோசேயின் நியாயப் பிரமாணமானது தேவனுடைய வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்க மாட்டாது. தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அவருக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தார் *(கலா 3:8)*. தேவனுடைய முன்னறிவிப்பானது ஒரு உடன்படிக்கை யாகவும், ஒரு ஏற்பாடாகவும் இருக்கிறது.

தேவன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். சந்ததிகளென்று அநேகரைக் குறித்துச் சொல்லவில்லை. "உன் சந்ததிக்கென்று" ஒருவரைக் குறித்தே சொல்லியிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அந்தச் சந்ததி. தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை நிறைவேறவேண்டுமானால், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, ஆபிரகாமுக்கு ஒரு சந்ததி உண்டாயிருக்கவேண்டும். தேவன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்களை உண்டுபண்ணியிருக்கிறார்.

அந்த வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்ள ஆபிரகாமுக்கு சந்ததி உண்டாயிருக்கவேண்டும். ஆபிரகாமுக்கு சந்ததி உண்டாகவில்லையென்றால், உடன்படிக்கையை யாராலும் சுதந்தரித்துக்கொள்ள முடியாது.

தேவன் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்களை உண்டுபண்ணினார். ஆபிரகாம் மரித்துப்போனார். தீர்க்கதரிசிகளும் மரித்துப்போனார்கள். ஆனால் மரித்துப்போகவில்லை. அது உடன்படிக்கை ஜீவனுள்ளதாகயிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் ஆபிரகாமின் சந்ததியைப்பற்றிச் சொல்லும்போது, கிறிஸ்துவே அந்தச் சந்ததி என்று தெளிவுபடுத்துகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை, இன்னும் ஜீவனுள்ளதாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனுள்ளவர். நித்தியகாலமாக ஜீவிக்கிறவர். இயேசுகிறிஸ்து நித்தியமானவராகயிருக்கிறபடியினால், தேவன் அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையும் நித்தியமானதாக இருக்கிறது.

மோசேயின் பிரமாணம், தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு பிந்தி உண்டானது. தேவன் ஆபிரகாமுக்கு, வாக்குத்தத்தத்தினால் சுதந்தரத்தை அருளிச் செய்திருக்கிறார். பிந்திவந்த நியாயப்பிரமாணம், முந்திபண்ணப்பட்ட உடன்படிக்கையை வியர்த்தமாக்கமாட்டாது. தேவன் ஆபிரகாமுக்கு, வாக்குத்தத்தத்தினாலே, சுதந்தரத்தை அருளிச்செய்திருக்கிறார். தேவன் வாக்குமாறாதவர். தம்முடைய வாக்குத்தத்தத்திலிருந்து அவர் ஒருபோதும் விலகிச் சென்றுவிடமாட்டார். மனம்மாறுவதற்கு தேவன் ஒரு மனுஷனல்ல. தேவனுடைய உடன்படிக்கை நித்தியமானது. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அந்த உடன்படிக்கை இன்றும் ஜீவனுள்ளதாயிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தின் நோக்கம் கலா 3 : 19-29

கலா 3:19. அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.

கலா 3:20. மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்.

கலா 3:21. அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.

கலா 3:22. அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி, வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது.

கலா 3:23. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம்.

கலா 3:24. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.

கலா 3:25. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே.

கலா 3:26. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

கலா 3:27. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

கலா 3:28. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

கலா 3:29. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

தேவன் மனுக்குலத்திற்கு மோசேயின் மூலமாய் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் நியாயப் பிராமணத்தின் நோக்கத்தை இங்கு தெளிவாகச் சொல்லுகிறார். மனுஷருடைய அக்கிரமங்களினிமித்தம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களும், புறஜாதி ஜனங்களும் பாவிகளாகயிருந்தார்கள். அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர்களுக்கு உணர்த்துவதற்காக, தேவன் மோசேயின் மூலமாய் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தார். பாவம் செய்யாதவாறு அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், தேவன் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தார்.

வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவே அந்த சந்ததி. தேவன் ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததியாகிய கிறிஸ்துவுக்கும் வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவுக்காகக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, இந்தப் பூமியில் அவதரிக்க வேண்டும். தேவன் மோசேயின் மூலமாய் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து, கிறிஸ்து வருமளவும், அதை ஜீவனுள்ளதாக அனுமதித்திருக்கிறார்.

மனுஷருடைய அக்கிரமங்களினிமித்தமாக நியாயப்பிரமாணமானது மனுஷருக்குக் கூட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. காலம் நிறைவேறும் வரையில் மாத்திரமே, நியாயப்பிரமாணத்திற்கு ஜீவன் இருக்கும். தேவனுடைய வாக்குத்தத்தத்தில் அவருடைய தெய்வீக கிருபை இடம்பெற்றிருக்கிறது. காலம் நிறைவேறும்போது தேவகிருபை அவருடைய வாக்குத்தத்தத்தில் பூரணமாய் வெளிப்படும். அப்போது மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் பெலனிழந்துபோகும். தேவகிருபை பூரணமாய் வெளிப்படும் போது, நியாயப்பிரமாணம் ஒழிந்துபோகும்.

நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமானதல்ல. ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய், தேவகிருபை நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதினால், நாம் இனிமேலும் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திற்குட்பட்டவர்களல்ல. நியாயப்பிரமாணத்திற்கு நாம் பயப்படவேண்டியதில்லை. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய், மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்டதினால், வாக்குத்தத்தத்தின் முக்கியத்துவம் நமக்குத் தெரியவருகிறது. நியாயப்பிரமாணமானது நம்முடைய பாவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. கிறிஸ்துவிடம் நாம் செல்லுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைத் துரிதப்படுத்துகிறது. வழிநடத்துகிறது.

மனுஷருடைய அக்கிரமங்களினிமித்தமாகவே தேவன் மோசேயின் மூலமாய், மனுக்குலத்திற்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த நியாயப்பிரமாணத்தை தேவன் தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிட்டார். மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல. மோசேயே அந்த மத்தியஸ்தன். தேவனோ ஒருவர். ஆகையினால் நியாயப்பிரமாணத்தினால் தேவனுடைய உடன்படிக்கையை வியர்த்தமாக்க முடியவில்லை.

தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்கு முன்பாகவே, ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார். உடன்படிக்கை பழையதாகயிருந்தாலும், அதற்குப் பின்பு வந்த நியாயப்பிரமாணத்தினால், தேவனுடைய உடன்படிக்கையை வியர்த்தமாக்க முடியவில்லை.

மோசே தேவனுக்கும் மனுஷருக்கும் ஒரு மத்தியஸ்தனாகவே இருந்தார். தேவனுடைய கரத்திலிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று அதை மனுஷருக்கு வெளிப்படுத்தினார். உடன்படிக்கையோ தேவனிடத்திலிருந்து ஆபிரகாமுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் நடுவில் மத்தியஸ்தர் யாருமில்லை. ஆகையினால், நியாயப்பிரமாணத்தினால், வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்க முடியவில்லை.

மனுக்குலத்திற்கு ஒரு இரட்சகர் தேவைப்படுகிறார். மனுஷருக்கு இந்தச் சத்தியத்தை உணர்த்துவதற்காக, தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமானதுமல்ல, முரண்பாடானதுமல்ல. மனுஷருடைய மீறுதல்களையும், அக்கிரமங்களையும் அவர்களுக்கு காண்பிப்பதற்காகவே, நியாயப்பிரமாணம் மனுஷருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தைவிட மேன்மையான நீதி ஒன்று தங்களுக்குத் தேவை என்பதை மனுஷர் புரிந்துகொள்ள வேண்டும். நியாயப்பிரமாணத்தினால் நீதி உண்டாகவில்லை. நியாயப்பிரமாணம் மனுஷருக்கு உயிரைக் கொடுக்கத் தக்கதாக அருளப்படவில்லை.

வேதம் எல்லோரையும் ஏகமாய் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது. நியாயப்பிரமாணத்தினால் நம்முடைய காயங்கள் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் நம்முடைய காயங்களுக்கு மருந்து கட்டி குணமாக்கக்கூடிய ஆற்றல் நியாயப்பிரமாணத்திற்கு இல்லை.

நியாயப்பிரமாணம் மனுஷருடைய பாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. ஆனால் இவற்றிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவது என்னும் வழிமுறையை நியாயப்பிரமாணம் நமக்குக் காண்பிக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற வர்களுக்கு மாத்திரமே வாக்குத்தத்தம் பலிக்கும். விசுவாசமுள்ளவர்களுக்கு மாத்திரமே தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும். நம்முடைய ஜீவியத்தில் வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டு மென்றால், நம்மிடத்தில் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் காணப்படவேண்டும்.

நியாயப்பிரமாணத்தினால் மனுஷருக்கு நீதி உண்டாகாது. இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே மனுஷருக்கு நீதி உண்டாகும். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் மாத்திரமே வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளை நம்புகிறவர் களுக்கு வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம் கிடைக்காது. அவர்களுக்கு நீதியும் உண்டாகாது.

நாம் விசுவாசத்தினாலே நீதிமானாக் கப்படுகிறோம். நாம் நீதிமான்களாக்கப் படுவதற்கு, நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருந்தது. நியாயப்பிரமாண மானது ஒரு ஆசிரியரைப்போல இருந்ததாக பவுல் இங்கு ஒப்புமையாகச் சொல்லுகிறார். கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசம் நமக்குள் வருகிறதற்கு முன்னே நாம் அடைக்கப்பட்டவர்களாய், நியாயப் பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப் பட்டிருந்தோம். சிறைச்சாலைகளில் கைதிகள் காவலில் வைத்து அடைக்கப்பட்டிருப்பதுபோல நாமும் நியாயப்பிரமாணத்தின்கீழ் அடைக்கப் பட்டிருந்தோம்.

அடைக்கப்பட்டவர்கள் விடுதலைக் காக ஏங்கி தவிப்பார்கள். நியாயப்பிரமாணத்தின்கீழ் அடைக்கப்பட்டு காவல்பண்ணப்பட்டிருந்தவர்கள், விசுவாசம் வருகிறதற்கு ஆவலோடு காத்திருந் தார்கள். கிறிஸ்துவின் வருகைக்காக அவர்கள் ஏங்கி தவித்தார்கள். கிறிஸ்து வந்தபோதோ அவரை விசுவாசத்தோடும், வாஞ்சையோடும் ஏற்றுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது, நியாயப்பிரமாணத்தின்கீழ் அடைக்கப்பட்டு காவல்பண்ணப்பட்டவர்கள், இயேசுகிறிஸ்துவைத் தங்கள் தேவனாகவும், இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள்.

தங்களுடைய சுயநீதி பிரயோஜனமற்றது என்பதையும், தாங்கள் பரிசுத்தமில்லாதவர்கள் என்பதையும், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமானவர்கள் என்பதையும் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப் பட்டிருந்தபோது ஜனங்கள் கற்றுக் கொண்டார்கள். நியாயப்பிரமாணத்தினால் தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியாது என்று அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டார்கள். நியாயப்பிரமாணம் அவர்களுக்கு ஒரு உபாத்தியைப்போல இருந்தது. அவர்களுக்கு கண்டிப்புடன் கற்றுக்கொடுத்தது. அவர்களை கண்டிப்புடன் ஆளுகையும் செய்தது. அவர்கள் உபாத்திக்குக் கீழ்ப்படிந்து, கீழானவர்களாக இருந்தார்கள்.

நாம் விசுவாசத்தினாலே நீதிமான் களாக்கப்படுவதற்கு, நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறது. ஜனங்களுக்கு உபாத்தியாயிருக்கிற நியாயப்பிரமாணம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படும் சத்தியத்தை அவர்களுக்குத் தெளிவாகக் கற்றுத்தருகிறது. விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு உண்டாகும் என்பதையும் நியாயப்பிரமாணம் என்கிற உபாத்தி அவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் நியாயப்பிரமாணத்தை உபாத்தியோடு ஒப்பிட்டுச் சொல்லும்போது, "விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்கு கீழனானவர்களல்லவே" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் நமக்குள் வந்தபின்பு, நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவினிடத்தில், வந்து சேர்ந்துவிட்டோம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து மிகுந்த நன்மை செய்திருக்கிறார். தேவனிடத்தில் தங்களுக்குள்ள கடமைகளைப் புரிந்துகொள்வதற்கு நியாயப்பிரமாணம் அவர்களுக்கு பேருதவியாயிருந்திருக்கிறது. தேவனிடத்தில் அவர்கள் விசுவாசம் வைப்பதற்கு நியாயப்பிரமாணம் அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறது.

ஆனால் யூதர்களோ நியாயப்பிரமாணத்தின் மெய்யான நோக்கத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நியாயப்பிரமாணம் தங்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துவதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தாங்கள் நீதிமான்களாக்கப்படுவதாக அவர்கள் தப்பாக நினைத்துக் கொண்டார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மனுஷனை நீதிமானாக்குவது தேவனுடைய சித்தமல்ல. மனுஷனை நீதிமானாக்குவதற்காக தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கவுமில்லை. ஆனால் யூதர்களோ நியாயப்பிரமாணத்தை தவறாகப் புரிந்துகொண்டார்கள். தேவனுக்குச் சித்தமில்லாததை தேவனுடைய சித்தம் என்று நினைத்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்பட வகைதேடுகிறார்கள்.

ஆனால் நியாயப்பிரமாணமோ அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்துகிறது. அவர்களுடைய மீறுதல்களையும், அக்கிரமங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. நியாயப்பிரமாணத்தினால் ஜனங்களுடைய பாவங்களை வெளிப்படுத்திக் காண்பிக்க மாத்திரமே முடியும். பாவத்தின் கட்டுக்களிலிருந்து நியாயப்பிரமாணத்தினால் மனுஷரை விடுவிக்க முடியாது. நியாயப்பிரமாணம் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதினால், தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவையென்பதை ஜனங்கள் புரிந்து கொள்கிறார்கள். இந்தப் புரிந்து கொள்ளுதலும் நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிற்று.

சுவிசேஷம் நியாயப்பிரமாணத்திற்கு மேலானது. நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழிருந்தபோது காவல்பண்ணப்பட்ட சிறு பிள்ளைகளைப்போல இருந்தோம். நாம் அடைக்கப்பட்டவர்களைப்போல இருந்தோம். நமக்கென்று எந்தவிதமான சுயாதீன உரிமையும் இல்லாமலிருந்தோம். ஆனால் சுவிசேஷம் நமக்குள் வந்தபோதோ, நமக்கு நியாயப்பிரமாணத்தின் கட்டுக்களிலிருந்து விடுதலை உண்டாயிற்று. நாம் இனிமேலும் காவல்பண்ணப்பட வேண்டிய சிறுபிள்ளைகளல்ல. தேவனுடைய புத்திரராகயிருக்கிற நாம், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து பெரியவர்களாகயிருக்கிறோம். சுயாதீனராகயிருக்கிறோம்.

நாமெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறோம். புத்திரர் என்பது சிறுபிள்ளைகளைக் குறிக்கிற வார்த்தையல்ல. தேவனுடைய ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் சுதந்தரித்துக்கொள்ளும் உரிமையுள்ள பிள்ளைகளாகயிருக்கிறோம்.

சுதந்தரவாளிக்குரிய வயது வந்தவர்களாக யிருக்கிறோம். நாம் தேவனுடைய புத்திரராயிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இந்தச் சிலாக்கியம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நமக்கு உண்டாயிற்று.

நாம் இனி அடைக்கப்பட்டவர்களோ அல்லது காவல்பண்ணப்பட்டவர்களோ அல்ல. நாம் சுயாதீனமுள்ளவர்கள். தேவனுடைய புத்திரர்கள். தேவன் தம்முடைய புத்திரருக்குக் கொடுக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும், எல்லா சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்கிற உரிமையுள்ளவர்களாக யிருக்கிறோம். தேவனுடைய நன்மைகளுக்கு நாம் சுதந்தரவாளிகளாக யிருக்கிறோம். இந்தச் சிலாக்கியம் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் நமக்கு உண்டாயிற்று.

நாமெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறோம். கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அத்தனைபேரும், கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர் களாகயிருக்கிறோம். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது, இயேசு கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்கிறோம். ஞானஸ்நானம் பெற்றதினால் நாம் கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக யிருக்கிறோம். தேவனும் நம்மை தம்முடைய புத்திரராக அங்கீகரித்து, ஏற்றுக்கொள்கிறார்.

ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறார்கள். சுவிசேஷத்தின்படி நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது, நியாயப் பிரமாணத்தின்படி விருத்தசேதனம் செய்துகொள்வதுபோல ஒரு அடையாளமாக இருக்கிறது.

நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவருடைய மரணத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம்.

இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததுபோல, நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுகிறோம். புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களாகிய நாம், நமக்குக் கிடைத்திருக்கிற இந்தச் சிலாக்கியத்தை நினைவுகூரவேண்டும். நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள் என்னும் சிந்தனை நமக்குள் காணப்படவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லா விசுவாசிகளுமே தேவனுடைய புத்திரராகயிருக்கிறார்கள். நியாயப் பிரமாணம் ஜனங்களை வேறுபிரிக்கிறது. யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசம் பண்ணிப் பார்க்கிறது. நியாயப்பிரமாணம் அடிமையானவனுக்கும் சுயாதீனனுக்கும் வித்தியாசம் காண்பிக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது. இந்த வித்தியாசம் நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிற்று. ஆனால் இயேசு கிறிஸ்துவுக்குள் இப்படிப்பட்ட வித்தியாசம் எதுவுமில்லை. நாமெல்லோரும் ஒரே நிலமையிலிருக்கிறோம். கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம். நாம் எந்த தேசத்தை சேர்ந்தவராகயிருந்தாலும், எந்த இனத்தவராகயிருந்தாலும், ஆணாகயிருந் தாலும், பெண்ணாகயிருந்தாலும் இயேசு கிறிஸ்துவுக்குள் வித்தியாசமில்லை. நாமெல்லோரும் இயேசுகிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம். நாமெல்லோருமே இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத் தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறோம்.

நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருப்போமானால், நாம் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறோம். தேவனுடைய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளும் சிலாக்கியமுள்ளவர்களாக யிருக்கிறோம். கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் ஒரு காலத்தில் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருந்தார்கள். கிறிஸ்துவினுடைய வர்களாயிருந்தார்கள். ஆபிரகாமின் சந்ததியாராயிருந்தார்கள். வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருந்தார்கள்.

ஆனால் இப்போதோ அவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து விலகிப்போய் விட்டார்கள். விசுவாசத்தைவிட்டுவிட்டு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக்கொண்டார்கள். இதனால் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய எல்லா ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங் களையும் இழந்துபோனார்கள்.

4 அதிகாரம்

விசுவாசத்தினால் மாத்திரமே நாம் நீதிமானாக்கப்படமுடியும் என்னும் சத்தியத்தை பவுல் இந்த அதிகாரத்திலும் தொடர்ந்து எழுதுகிறார். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நாம் நீதிமான்களாக்கப்பட முடியாது என்பது நிச்சயம். நியாயப்பிரமாணத்தைவிட சுவிசேஷம் மேன்மையானது என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார் (கலா 4:1-7). கலாத்தியர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பின்பு, அவர்களுடைய ஜீவியத்தில் ஏற்பட்ட ஆசீர்வாதமான மாற்றங்களை பவுல் இங்கு குறிப்பிடுகிறார் (கலா 4:8-11).

ஆரம்பத்தில் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் பவுல்மீது மிகவும் அன்பாகவும் பிரியமாகவும் இருந்தார்கள் (கலா 4:12-16). கள்ளப்போதகர்களின் குணாதிசயங்களைப் பவுல் விளக்குகிறார் (கலா 4:17,18). அப்போஸ்தலர் பவுல் கலாத்தியர்மீது அன்பாகவும் பிரியமாகவும் இருக்கிறார் (கலா 4:19,20). ஈசாக்கு, இஸ்மவேல் ஆகியோரின் சரித்திரம்.

காலம் நிறைவேறினபோது கலா 4 : 1-7

கலா 4:1. பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங்காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை.

கலா 4:2. தகப்பன் குறித்த காலம்வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான்.

கலா 4:3. அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்.

கலா 4:4. நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக,

கலா 4:5. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

கலா 4:6. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

கலா 4:7. ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து, விசுவாசத்தினால் மாத்திரமே தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியும் என்று நம்பினார்கள். அதன்பின்பு யூதமார்க்கத்து கள்ளப்போதகர்கள் கலாத்தியா தேசத்து சபைகளில் பிரவேசித்து, அவர்களுக்கு கள்ள உபதேசத்தைக் கொடுத்தார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தோடு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் கடைப்பிடித்தால்தான் இரட்சிக்கப்பட முடியும் என்றும், அப்போதுதான் நீதிமான்களாக்கப்பட முடியும் என்றும் கள்ள உபதேசம் பண்ணினார்கள். யூதமார்க்கத்தின் உபதேசங்களை சுவிசேஷத்தின் உபதேசங்களோடு கலப்பாய்ப் பேசினார்கள்.

அப்போஸ்தலர் பவுலோ கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுவதாகவும், நீதிமான் களாக்கப்படுவதாகவும் உறுதியாகச் சொல்கிறார். இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்கு பழைய ஏற்பாட்டு சபையை ஒரு எடுத்துக்காட்டாக பயன்படுத்தி விளக்குகிறார். பழைய ஏற்பாட்டு சபையானது ஒரு சிறு பிள்ளையைப்போல இருந்தது. பழைய ஏற்பாட்டு சபையின் காலமும் கிருபையின் காலம்தான். ஆனாலும் தற்போதுள்ள கிருபையின் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பழைய ஏற்பாட்டுக் கிருபையின் காலமானது, இருளின் காலமாகவே இருந்தது. பழைய ஏற்பாட்டு சபை சுதந்தரவாளியாகயிருந்தாலும், அது சிறுபிள்ளையாகயிருந்ததினால், சுதந்தர வாளிக்குரிய உரிமைகளும் சிலாக்கியங்களும் எதுவும் அதற்கு கிடைக்கவில்லை.

சுதந்தரவாளியானவன் எல்லாவற் றிற்கும் எஜமானாயிருக்கிறான். ஆனாலும் அவன் சிறுபிள்ளையாயிருக்கும் காலமளவும், அவனுடைய தகப்பன் குறித்த காலம் வரைக்கும், அந்தச் சிறுபிள்ளை யானது காரியக்காரருக்கும், வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டி ருக்கிறது. சுதந்தரவாளியானவன் சிறுபிள்ளையாயிருக்கும் காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை. அவன் சுதந்தரவாளிதான். ஆனாலும் அவன் அடிமையைப்போலவே இருக்கிறான். காரியக்காரருக்கும், வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்படிக்கிறான். அவன் சுதந்தரவாளியாகயிருந்தாலும் அவனால் சுயாதீனமாக ஒன்றும் செய்யமுடியாது. அவனுடைய தகப்பன் குறித்த காலம் வரைக்கும், அந்தப் பிள்ளையானது காரியக்காரருக்கும், வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு சபையானது சிறுபிள்ளையாகயிருக்கிற சுதந்தரவாளி யைப்போலவே இருந்தது. பழைய ஏற்பாட்டுக்காலம் இருளின்காலம். அது அடிமைத்தனத்தின் காலம். பழைய ஏற்பாட்டுக்கால சபைக்கும் அடிமையான வனுக்கும் வித்தியாசமில்லை. பிதாவானவர் குறித்த காலம் வரைக்கும் பழைய ஏற்பாட்டுச் சபை அடிமையானவனைப் போலவே இருந்தது. அது கிருபையின் காலமாகயிருந்தாலும், தேவனுடைய கிருபையை சுயாதீனமாக அனுபவிக்கிற விடுதலை அதற்குக் கொடுக்கப்படவில்லை. காலம் நிறைவேறினபோதோ, தேவன் தம்முடைய கிருபையை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் புதிய ஏற்பாட்டு சபைக்கு, பூரணமாய் வெளிப்படுத்தி யிருக்கிறார். அதுவரையிலும் சிறுபிள்ளையாகயிருந்த சுதந்தரவாளி யானவன், காலம் நிறைவேறின போது, பூரண புருஷனாக, சுதந்தரவாளியின் சுதந்தரங்களெல்லா வற்றையும் பூரணமாய்ப் பெற்றுக் கொள்கிறான்.

தேவன் குறித்த காலம் வரும்வரைக்கும், கர்த்தருடைய பிள்ளைகள் சிறுபிள்ளைகளைப்போலவே இருந்தார்கள். அந்தக்காலத்தில் அவர்கள் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப் பட்டவர்களாயிருந்தார்கள். சுவிசேஷத்தின் காலத்தில், சபைக்கு, தேவனுடைய கிருபை பூரணமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. காலம் நிறைவேறினபோது, பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். குமாரனாகிய கிறிஸ்து ஸ்திரீயினிடத்தில் பிறந்தவராகவும், நியாயப்பிரமாணத்திற்கு கீழானவருமாக இருந்தார்.

தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், குமாரன் பிதாவின் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து, ஸ்திரீயி னிடத்தில் பிறந்திருக்கிறார். மனுஷனாக அவதரித்திருக்கிறார். நியாயப் பிரமாணத்திற்குத் தன்னைக் கீழ்ப்படுத்திக் கொண்டார்.

தேவன் இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பியதற்கு பிரதான நோக்கமுண்டு. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் புத்திரசுவீகாரத்தை அடையவேண்டும். நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் மீட்டுக்கொள்ளப்படவேண்டும். இதுவே தேவனுடைய நோக்கம். இதை நிறைவேற்றுவதற்காகவே, பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பினார்.

காலம் நிறைவேறினபோது இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார். நாம் இனிமேல் அடிமையானவர்களல்ல. ஏற்கெனவே நாம் சுதந்தரவாளிகளாகயிருந்தோம். ஆனாலும் சிறுபிள்ளைகளாகவும் இருந்தோம். அந்தக் காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாகயிருந்தோம். காலம் நிறைவேறினபோது, நம்முடைய சிறுபிள்ளை பருவத்திலிருந்து வளர்ச்சி பெற்று, பூரண புருஷராக முதிர்ச்சியடைந்திருக்கிறோம். இப்போது சுதந்தரவாளியாக இருக்கிற நாம், தேவனிடமிருந்து நம்முடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்கிறோம். நாம் இனிமேல் அடிமைகளைப்போலயிராமல் தேவனுடைய புத்திரராகயிருக்கிறோம்.

சுவிசேஷத்தின் காலத்தில் கர்த்தரை விசுவாசிக்கிற நாம், தேவனுடைய புத்திரராகயிருக்கிறோம். விசுவாசத்தினால் புத்திர சுவிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறோம். நாம் தேவனுடைய புத்திரராகயிருக்கிறபடியினால் தேவன் தமது குமாரனுடைய ஆவியை நம்முடைய இருதயங்களில் அனுப்பியிருக்கிறார். ஆகையினால் தேவனை, “அப்பா, பிதாவே” என்று கூப்பிடும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் தேவனிடத்தில் நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கும்போது, நாம் தேவனைப் பிதாவாகப் பார்க்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கும் தேவனுக்கும் இடையே இருக்கிற ஆவிக்குரிய உறவைத் தெளிவுபடுத்துகிறார். இதன் முடிவுரையாக “ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்” என்று சொல்லுகிறார். நாம் இனிமேல் அடிமைகளல்ல. தேவனுடைய வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம். தேவனுடைய புத்திரராகயிருக்கிறோம். அப்போஸ்தலர் பவுல் இந்தச் சத்தியத்தைச் சொல்லும்போது, “நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்” என்று சொல்லி, கலாத்தியா தேசத்து சபையாரை உற்சாகப்படுத்துகிறார்.

நாம் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய புத்திரராயும், சுதந்தரராயும் இருக்கிறோம். இனிமேல் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு நாம் அடிமைப்பட்டவர்களல்ல. நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளுக்கு நாம் அடிமைப்பட்டவர்களல்ல. இயேசுகிறிஸ்து மூலமாய், அவரைப்பற்றும் விசுவாசத்தினால், நாம் தேவனுடைய புத்திரராயும், சுதந்தரராயும் இருக்கிறோம்.

தேவன் நம்மீது அன்புகூர்ந்து, நம்மை இரட்சிப்பதற்காக, தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். இதன் மூலமாய் அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிப்பதற்காக இந்தப் பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவானவர் நமக்காக பாடுகளைச் சகித்துக்கொண்டு, சிலுவையில் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். பாவத்திலிருந்து நம்மை மீட்பதற்கு, தம்முடைய சொந்த இரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார்.

தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய இருதயத்தில் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும். தெய்வீக சத்தியங்கள் நமக்குத் தொடர்ந்து உபதேசம்பண்ணப்படவேண்டும். இதற்காக கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியானவரை நமக்குள்ளே வாசம்செய்யுமாறு அனுப்பியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்கு சத்தியங்களை உபதேசிக்கிறார். நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். தேவனுடைய தெய்வீக சித்தத்தை நமக்குத் தெளிவுபடுத்துகிறார். ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் வாசம் செய்து, தம்முடைய ஆவியினால் நம்மை நிரப்புகிறார். அபிஷேகம் செய்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து சபையிலிருந்த விசுவாசிகள் சுதந்தரவாளிகளாகயிருந்தாலும், அவர்கள் சிறுபிள்ளைகளாகவே இருந்தார்கள். அடிமையானவர்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லாமலிருந்தார்கள். இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாகயிருந்தார்கள். சுவிசேஷத்தின் காலத்து சபையிலிருக்கிற விசுவாசிகளாகிய நாம் மேன்மையான சிலாக்கியங்களைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால், நாம் இனிமேல் அடிமையாயிராமல் புத்திரராயிருக்கிறோம். கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரராயிருக்கிறோம்.

இதுவரையிலும் கோபாக்கினையின் பிள்ளைகளாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகவும் இருந்தோம். ஆனால் இப்போதோ தேவனுடைய கிருபையினால் தேவனுடைய புத்திரராகவும், தேவனுடைய சுதந்தரராகவும் இருக்கிறோம். புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறோம். தேவனை, "அப்பா பிதாவே, என்று கூப்பிடுகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம், கிறிஸ்து மூலமாய் தேவனுடைய புத்திரராகயிருக்கிறோம். தேவனுடைய புத்திரருக்குரிய சுபாவங்களைப் பெற்றுக்கொள்கிறோம். தம்முடைய பிள்ளைகளெல்லோரும், தம்மைப்போலவே இருக்கவேண்டுமென்று பிதாவாகிய தேவன் விரும்புகிறார். நாம் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டவர்கள். ஆதியிலே ஆதாம் பாவம் செய்ததினால், தேவசாயல் நம்மிடத்தில் மங்கிப்போயிற்று. ஆயினும், கிறிஸ்து மூலமாய் தேவசாயல் நமக்குள் புதுப்பிக்கப்படுகிறது. தேவனுடைய புத்திரரின் சுபாவங்களைப் பெற்றிருக்கிற நாம், தேவனுடைய சுதந்தரராகயிருந்து, சுதந்தரவாளிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்கிறோம்.

தேவனை அறிந்திருக்கிறோம் கலா 4 : 8-11

கலா 4:8. நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்.

கலா 4:9. இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?

கலா 4:10. நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே.

கலா 4:11. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன்.

கலாத்தியா தேசத்திலுள்ள ஜனங்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அதற்கு முன்பு அவர்கள் தேவனை அறியாமலிருந்தார்கள். பாவத்தின் அடிமைத்தனத்தில் கட்டப்பட்டவர்களாகயிருந்தார்கள். சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அவர்கள் அடிமைகளாகயிருந்தார்கள். தேவர்களல்லாதவர்கள் மெய்யான தேவனல்ல. அவர்களெல்லாம் மாய்மாலம் பண்ணுகிறவர்கள். அவர்களால் ஜெபங்களைக் கேட்க முடியாது. ஜெபங்களுக்குப் பதில் கொடுக்க முடியாது. ஜனங்களுக்கு உதவி செய்யமுடியாது. ஆனால் கலாத்தியரோ மெய்யான தேவனை அறியாதவர்களாகயிருக்கிறார்கள். பொய்யான தெய்வங்களை பற்றிக்கொள்கிறார்கள். அந்தத் தெய்வங்களுக்கு அடிமைகளாகவும் இருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அவர்களுடைய பழைய நிலைமையை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

தேவனை அறியாமலிருந்த கலாத்தியருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. கிறிஸ்துவின் ஆவியானவர் அவர்களுடைய உள்ளத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டு பண்ணினார். அவர்கள் இப்போது தேவனை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் தேவனால் அறியப்பட்டிருக்கிறார்கள். இந்த மனமாற்றம் அவர்களுடைய சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ, சுயவல்லமையினாலோ உண்டாகவில்லை. இந்த மாற்றம் தேவனுடைய கிருபையினால் உண்டாயிற்று. நாம் தேவனை அறிந்துகொள்வதும், தேவனால் அறியப்படுவதும் தேவன் மூலமாகவே நமக்குள் உண்டாகிறது. தேவனாலே நாம் அறியப்பட்டிருப்பதினால்தான், நாம் தேவனை அறிந்திருக்கிறோம். தேவன் நம்மை அறிந்துகொள்ளவில்லையென்றால், நம்மால் தேவனை ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாது.

கலாத்தியர்கள் தேவனை அறிந்துகொள்வதற்கு முன்பு இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாகயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள். தேவனால் அறியப்பட்டிருக்கிறார்கள். இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு இதுவரையிலும் அடிமைகளாகயிருந்தவர்கள், இப்போது கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளோ இப்போது கர்த்தரைப் பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போய்விட்டார்கள். உலகத்தின் வழிபாடுகள் பெலனற்றதும் வெறுமையானதுமாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் அந்த வழிபாடுகளுக்கு மறுபடியும் திரும்பியிருக்கிறார்கள். மறுபடியும் அந்த வழிபாடுகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறார்கள்.

கலாத்தியர்கள் சுவிசேஷத்தின் பிரகாரம் தேவனை ஆராதிப்பதற்கு கற்றுக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ பெலனற்றதும் வெறுமையானதுமான வழிபாடுகளுக்கு மறுபடியும் திரும்புகிறார்கள். மறுபடியும் பொய்யான தெய்வங்களுக்கு அடிமைப்படும்படியாக விரும்புகிறார்கள். தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை செய்வதற்குப் பதிலாக, முன்னோர்களின் பாரம்பரியத்தின் பிரகாரமாகவும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் பிரகாரமாகவும் ஆராதனை செய்ய அவசரம் காண்பிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு, விசுவாசத்தில் பின்வாங்கிப்போய், தங்களுடைய பழைய ஜீவியத்திற்குத் திரும்பிப்போனால் அவர்களுடைய நிலைமை பரிதாபமாகயிருக்கும்.

யூதர்கள் அறியாமையினால் முன்னோர்களின் பாரம்பரியத்தை கைக்கொள்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்குத் தங்களை அடிமைப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிற விசுவாசிகள், மறுபடியும் இவைகளுக்குத் தங்களை அடிமைப்படுத்தினால், இவர்களுடைய நிலமை யூதர்களுடைய நிலமையைவிட பரிதாபமாகயிருக்கும். யூதர்களைவிட இவர்களே துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். அறியாமல் செய்த தப்பிதங்கள் மன்னிக்கப்படும். அறிந்து துணிகரமாகச் செய்கிற தப்பிதங்கள் மன்னிக்கப்படமாட்டாது.

யூதர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை நேசிக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவை பெலனற்றதும் வெறுமையானதுமாக யிருந்தாலும், அவ்வழிபாடுகளை அவர்கள் விரும்பி செய்கிறார்கள். அவைகளுக்குத் தங்களை அடிமைப்படுத்துகிறார்கள். முன்னோர்களின் பாரம்பரியமோ அல்லது நியாயப்பிராணத்தின் கிரியைகளோ நம்முடைய பாவத்தை மன்னிப்பதற்கு பெலனற்றவை. இவற்றால் நம்முடைய ஆத்துமாவை சுத்திகரிக்கமுடியாது. அந்த அளவுக்கு இவை பெலனற்றதாகவும் வெறுமையான தாகவும் இருக்கிறது.

யூதர்கள் தங்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தின் பிரகாரம், நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறார்கள். அவற்றிற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, தங்களை அடிமைப்படுத்துகிறார்கள். மார்க்க காரியங்களை நேர்த்தியாய்க் கடைப்பிடித்து, செம்மையாய் நிறைவேற்றுகிறார்கள். ஆனால் இவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியமோ பெலனற்றதாயிருக்கிறது.

இவர்களுக்குள் ஜீவனில்லை. இவர்களைப்போலவே கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் மார்க்ககாரியங்களில் தீவிரமாகயிருக்கிறார்கள். ஆனால் அதன் பரிசுத்தத்தையும் எளிமையையும் புரிந்துகொள்ளாமல், தங்களை மார்க்கத்தின் சடங்காச்சாரங்களுக்கு அடிமைப்படுத்திவிடுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள் என்றும், தேவனால் அறியப்பட்டிருக் கிறார்கள் என்றும் சொல்லுகிறார். ஆனாலும் அவர்கள் நியாயப் பிரமாணத்தின் அடிமைத்தனத்திற்குள் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். முன்னோர்களுடைய பாரம்பரிய வழிபாடுகள் பெலனற்றதாகவும், வெறுமையானதாகவும் இருந்தாலும், அதற்கு மறுபடியும் திரும்பி, தங்களை அவைகளுக்கு அடிமைப்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியரின் ஆவிக்குரிய நிலமையைப் பார்த்து மனங்கலங்குகிறார். தான் அவர்களுக்காக பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று அவர்களைக் குறித்து பயப்படுகிறார். பவுலின் இருதயத்தில் கலாத்தியரைக் குறித்து மிகுந்த வேதனை உண்டாயிற்று. பவுலின் பிரயாசம் எதுவும் கனிதரவில்லை. அவருடைய ஊழியத்தில் பலன் உண்டாகவில்லை. பிரயோஜனமே யில்லாமல் அவர்களுக்காக பிரயாசப்பட்டதை நினைத்து பவுல் மனங்கலங்குகிறார். அவர்களைக் குறித்துப் பயப்படுகிறார். கலாத்தியரின் பின்மாற்றம் பவுலை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

ஆனந்த பாக்கியம் எங்கே
கலா 4 : 12-16

கலா 4:12. சகோதரரே, என்னைப்போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களைப்போலுமானேனே, எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை.

கலா 4:13. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்.

கலா 4:14. அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும், தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்.

கலா 4:15. அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்.

கலா 4:16. நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போய் விட்டார்கள். தங்களுடைய இரட்சிப்புக்கு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளும் தேவைப்படுகிறது என்று சொல்லி, அவற்றை கைக்கொள்கிறார்கள். அப்படியிருந்தாலும் பவுல் அவர்கள்மீது அன்பாகவும் பிரியமாகவும் இருக்கிறார். அவர்களை "சகோதரரே" என்று கூப்பிடுகிறார். அவர்களுடைய இருதயம் பவுலைவிட்டு தூரமாய் விலகிப்போய் விட்டது.

ஆனாலும் பவுலிடத்தில் அவர்கள்மீது காணப்படுகிற அன்பு குறைந்துபோகவில்லை. தன்னைப் போலாகுமாறு பவுல் அவர்களை வேண்டிக்கொள்கிறார். தானும் அவர்களைப்போல ஆனதாக சொல்லு கிறார். அவர்கள் தனக்கு அநியாயம் ஒன்றும் செய்யவில்லை என்று அவர்களைப்பற்றி அறிக்கை செய்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளோடு சண்டைபோடவில்லை. வாக்குவாதம் பண்ணவில்லை. பவுலுக்கு அவர்களைப் பற்றிய பயமிருந்தாலும், அவர்களைப்பற்றிய கவலையிருந்தாலும், பவுல் அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். தன்னுடைய உபதேசத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்து, அவர்களை "சகோதரரே" என்று அன்போடு அழைக்கிறார். கர்த்தரைப்பற்றும் விசுவாசத்திலிருந்து அவர்கள் விலகிப்போய்விட்டாலும் அவர்களை எப்படியாவது மறுபடியும் கர்த்தரிடத்தில் அழைத்துவரவேண்மென்று பிரயாசப்படுகிறார். அவர்களை கடினமாகக் கடிந்துகொண்டு, அவர்களை கர்த்தரைவிட்டு துரத்திவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனத்தோடிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் சில சமயங்களில் விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லுகிறோம். அவர்கள் செய்கிற தப்பிதங்களினிமித்தமாக அவர்களைக் கடிந்துகொள்கிறோம். விசுவாசிகளைக் கடிந்துகொள்ளும்போது, அதை ஒரு குறிப்பிட்ட அளவோடு நிறுத்திக்கொள்ளவேண்டும். அவர்கள் செய்த தப்பிதங்களை அவர்களுக்கு உணர்த்திக் காண்பித்தால் போதும் என்று பொறுமையோடு பேசவேண்டும். நம்முடைய கடினமான வார்த்தைகளினால் அவர்களை கிறிஸ்துவை விட்டு துரத்திவிடக்கூடாது.

எல்லோருக்கும் முன்பாக அவர்களைக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக, தனிமையில் அவர்களோடு நிதானமாகப் பேசி, அவர்களுடைய தப்பிதங்களை, அவர்களுக்கு அன்பான வார்த்தைகளினால் உணர்த்த வேண்டும். நம்முடைய வார்த்தைகள் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளுக்குப் பிரயோஜனமாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் நன்மையை விசாரிக்கிறவர்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் ஆரம்பத்தில் பவுல்மீது அன்பாகவும் நேசமாகவும் இருந்தார்கள். பவுல் அவர்களிடத்தில் முதலாந்தரம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக வந்திருந்தார். அப்போது அவர்கள் பவுலை அன்போடு ஏற்றுக்கொண்டார்கள். பவுல் அப்போது அவர்களிடத்தில் சரீர பெலவீனத்தோடு வந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவருடைய சரீர பலவீனம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. தன்னுடைய சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை, பவுல் ஒருவேளை சரீர பலவீனம் என்று சொல்லியிருக்கலாம்.

கலாத்தியா சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுடைய சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை அசட்டைபண்ணவில்லை. அதை அரோசிக்கவில்லை. பவுலை அருவருக்காமல் ஏற்றுக்கொண்டார்கள். பவுல் சரீர பலவீனத்தோடிருந்ததினால், ஒருவேளை அவரால் உற்சாகமாக ஊழியம் செய்யமுடியாமல் இருந்திருக்கலாம். பவுலின் ஊழியத்தில் அவருடைய சரீர பலவீனம் ஒரு குறையாகவே காணப்பட்டது. ஆனாலும் அவர்கள் பவுலை ஏற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் பவுலை சாதாரணமாக ஒரு ஊழியக்காரரைப்போல ஏற்றுக் கொள்ளாமல், அவரை ஒரு தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும் ஏற்றுக் கொண்டார்கள். பவுலை அன்போடு வரவேற்றார்கள். தங்களுக்கு நற்செய்தி சொல்ல வந்தவர் என்று விசுவாசித்து, அவர்கள் பவுலை அன்போடு வரவேற்றார்கள். பவுலுக்காக எதையும் செய்ய அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். தங்கள் கண்களைப் பிடுங்கி, அவற்றை பவுலுக்குக் கொடுக்கக்கூடுமானால், அவர்கள் அப்படியும் செய்திருப்பார்கள். ஆனால் இப்போது அந்த அன்பு குறைந்துபோயிற்று. அவர்கள் பவுலை வெறுக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் பவுல்மீது கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் இப்போது இல்லை.

கலாத்தியர் அப்போஸ்தலர் பவுல்மீது வைத்திருந்த அன்பு குறைந்துபோயிற்று. பவுல் அதைப்பற்றி அவர்களுக்கு எழுதும்போது "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே" என்று கேட்கிறார். சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்வதும், அதை விசுவாசிப்பதும் தங்களுக்கு பாக்கியம் என்று முதலில் நினைத்தார்கள். ஆனால் இப்பொழுதோ அந்த நம்பிக்கை அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று. ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள். ஆரம்பத்திலே தங்கள் கண்களைப் பிடுங்கி பவுலுக்குக் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ பவுல்மீது அவர்களுக்குச் சிறிதும் அன்பில்லை. பவுலை ஒரு சத்துருவைப்போல பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் அவர்களிடம் "நான் உங்களுக்கு சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்கு சத்துருவானேனோ" என்று கேட்கிறார்.

சத்தியத்தைச் சொன்னதினால் பவுல் ஒரு காலத்தில் அவர்களுக்கு மிகவும் வேண்டிய சிநேகிதராகயிருந்தார். ஆனால் இப்பொழுதோ அதே சத்தியத்தைச் சொன்னதினால் அவர்களுக்கு சத்துருவைப்போல இருக்கிறார். இது உலகத்தின் சுபாவம். தங்களுக்கு உண்மையிலேயே நெருக்கமாகயிருக்கிற சிநேகிதர்களை இந்த உலகத்தார் சத்துருவாக நினைப்பார்கள். அதிலும் குறிப்பாக உண்மையைச் சொன்னால் யாருக்கும் பிடிக்காது. தங்களுக்குப் பிடிக்காத உண்மையை யாராவது தங்களிடம் சொல்லிவிட்டால், உடனே அவர்களை சத்துருவாகப் பாவித்துவிடுவார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சத்தியத்தைப் பேசுகிறார்கள். கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கிற செய்தியை முகதாட்சணியம் இல்லாமல், பாரபட்சம் காண்பியாமல், சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார்கள். இதனால் ஊழியக்காரர்களுக்கு அநேக சத்துருக்கள் உருவாகுகிறார்கள். அதிகமாய் ஊழியம் செய்யும்போது சத்துருக்களும் அதிகமாய் எழும்புகிறார்கள். எத்தனை சத்துருக்கள் எழும்பினாலும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சத்தியத்தைப் பேசுவதை நிறுத்திவிடக்கூடாது. மற்றவர்களுடைய மனது நோகுமே என்று நினைத்து சத்தியத்தைப் பேசாமலிருந்துவிடக்கூடாது. மற்றவர்கள் நம்மை சத்துருக்களாக நினைத்தாலும், அவர்களுக்கு சத்தியத்தைச் சொன்னதினிமித்தமே, நம்மை சத்துருக்களாக நினைக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, கர்த்தருக்கு தொடர்ந்து உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும்.

கள்ளப்போதகர்கள்
கலா 4 : 17,18

கலா 4:17. அவர்கள் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள்; ஆகிலும் நல்மனதோடே அப்படிச் செய்யாமல், நீங்கள் அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும்பொருட்டு உங்களைப் புறம்பாக்க விரும்புகிறார்கள்.

கலா 4:18. நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும்பொழுது மாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்டவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கள்ளப் போதகர்களின் சுபாவத்தை இங்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறார். அவர்கள் மாய்மாலக்காரர்கள். உண்மையை மறைத்து, பொய்யை உண்மையைப்போல பேசுகிறவர்கள். மனுஷருக்குப் பிரியமானதை மாத்திரம் அவர்கள் சொல்லுவார்கள். கலாத்தியரை நாடி அவர்கள் வைராக்கியம் பாராட்டு கிறார்கள். அவர்களை எப்படியாவது தங்கள் வலையில் சிக்க வைக்கவேண்டுமென்பதுதான் கள்ளப் போதர்களின் நோக்கம்.

அவர்கள் கலாத்தியரை நாடி நல்மனதோடே வைராக்கியம் பாராட்ட வில்லை. கலாத்தியரும் தங்களை நாடி வைராக்கியம் பாராட்டவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள்மீது அன்பாகயிருப்பதுபோல நடிக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்களுக்கு கலாத்தியர்மீது அன்பில்லை. அவர்களை சத்தியத்தைவிட்டுப் புறம்பாக்க வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். தங்கள் வலையில் கலாத்தியரைச் சிக்கவைப்பதற்காக, அவர்கள்மீது அன்புள்ளவர்கள்போல நடிக்கிறார்கள். அவர்களை நாடி பொய்யாக வைராக்கியம் பாராட்டுகிறார்கள்.

சில சமயங்களில் அன்பும் வைராக்கியமும் பெரிதாயிருக்கும். ஆனால் அங்கு உண்மை இருக்காது. நேர்மை இருக்காது. உண்மையில்லாத வைராக்கியம் பிரயோஜனமற்றது. நல்ல விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான் என்று பவுலும் சொல்லுகிறார். ஒரு சிலர் மற்றவர்களுக்கு அருகாமையிலிருக்கும்போது அவர்களைப் பற்றிப் புகழ்ந்துபேசுவார்கள். அன்பான வார்த்தைகளைக் கொட்டுவார்கள். அவர்களைவிட்டுத் தூரமாகப் போய்விட்ட பின்போ, அவர்களைப்பற்றி தவறாகப் பேசுவார்கள். மறைமுகமாக குறை சொல்லுவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியர்மீது உண்மையிலேயே அன்பாயிருக்கிறார். அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார். அவர்களோடு கூடயிருக்கும்போது மாத்திரமல்ல, அவர்களைவிட்டுப் பிரிந்திருந்தாலும், அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்.

நாம் நல்ல விஷயத்தில் மாத்திரமே வைராக்கியம் பாராட்டவேண்டும். நல்ல விஷயத்திற்காக வைராக்கியம் பாராட்டுவது நல்லது. தீயவிஷயத்திற்காக வைராக்கியம் பாராட்டுவது தீமையானது தான். நல்ல விஷயத்திற்காக நாம் எப்போதுமே வைராக்கியம் பாராட்ட வேண்டும். நம்முடைய இருதயத்திலிருந்து உண்மையான அன்பு புறப்பட்டு வரவேண்டும். அவ்வப்போது வருகிற அன்பு மெய்யான அன்பல்ல. எப்போதும் அன்பாகயிருப்பதே மெய்யான அன்பு. விசுவாசிகள் மத்தியில் இப்படிப்பட்ட மெய்யான அன்பு காணப்படவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பினால் வைராக்கியம் காண்பிக்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் அன்பில் நிலைத்திருக்கவேண்டும். அவர்களுடைய அன்பும் நிலைத்திருக்கவேண்டும்.

கர்ப்பவேதனைப்படுகிறேன் கலா 4 : 19,20

கலா 4:19. என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்.

கலா 4:20. உங்களைக்குறித்து நான் சந்தேகப்படுகிறபடியால், நான் இப்பொழுது உங்களிடத்தில் வந்திருந்து, வேறுவகையாகப்பேச விரும்புகிறேன்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியர்மீது மிகவும் அன்பாயிருக்கிறார். தன்னுடைய அன்பை இங்கு தெளிவுபடுத்துகிறார். பவுலின் அன்பு கள்ளஅப்போஸ்தலரின் அன்பைப்போல மாய்மாலமானதல்ல. அது உண்மையான அன்பு. கள்ள அப்போஸ்தலர்கள் கலாத்தியரோடு இருக்கும்போது ஒருவிதமாகவும், அவர்களை விட்டுப் பிரிந்திருக்கும்போது வேறுவிதமாகவும் பேசுவார்கள். அவர்களோடு கூடயிருக்கும்போது வைராக்கியம் பாராட்டுவார்கள். ஆனால் அவர்கள் நல்மனதோடே வைராக்கியம் பாராட்டுவதில்லை. கள்ளஅப்போஸ்தலர்கள் கலாத்தியர்மீது அன்பாயிருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். தங்களுடைய சுயஆதாயத்திற்காக அவர்கள்மீது அன்புகூருகிறார்கள். தங்களுக்கு கலாத்தியரால் ஒரு பிரயோஜனமும் இல்லையென்றால், அவர்கள்மீது அன்புகூரமாட்டார்கள். ஆனால் பவுலோ கள்ளப் போதகர்களைப்போல மாய்மாலம்பண்ண வில்லை. கலாத்தியர்மீது மெய்யாகவே அன்புகூருகிறார்.

பவுல் கலாத்தியரை, “என் சிறு பிள்ளைகளே” என்று அழைக்கிறார். மெய்யாகவே கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் பவுலுக்கு சிறுபிள்ளைகளைப்போல இருக்கிறார்கள். பவுல் அவர்களைத் தான் பெற்றெடுத்த பிள்ளைகளைப்போல பாவித்து நேசிக்கிறார்.

பவுலுக்கு கலாத்தியர்மீது பாசம் இருக்கிறது. இது பெற்றோர் பிள்ளையின்மீது காண்பிக்கிற பாசம். பவுல் கலாத்தியர்மீது தான் வைத்திருக்ககிற பாசத்தைச் சொல்லும்போது, "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்" என்று சொல்லுகிறார். ஒரு தாய் தன்னுடைய பிள்ளையைப் பெறும்போது கர்ப்பவேதனை அடைவதுபோல, கிறிஸ்து கலாத்தியரிடத்தில் உருவாகுமளவும், பவுல் ஒரு தாயைப்போல அவர்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறார். அவர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

உண்மையுள்ள ஊழியக்காரர்கள், விசுவாசிகள்மீது பவுலைப்போல உண்மையான அன்பு காண்பிக்க வேண்டும். பெற்றோர் தங்கள் சிறுபிள்ளைகளை நேசிப்பதுபோல ஊழியக்காரர்களும் விசுவாசிகளை நேசிக்கவேண்டும்.

விசுவாசிகளிடத்தில் கிறிஸ்து உருவாகவேண்டுமென்பதே ஊழியக் காரரின் பிரதான நோக்கமாக யிருக்கவேண்டும். தங்கள்மீது அன்பாகயிருக்கிற ஊழியக்காரரை விசுவாசிகளும் நேசிக்கவேண்டும். ஊழியக்காரரை வெறுத்து ஒதுக்கிவிடக் கூடாது. அவர்களை உதாசீனம்பண்ணி விடக்கூடாது. தங்களுக்கு சத்தியத்தைச் சொன்னதினால் அவர்களை சத்துருக்களாக நினைக்கக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் மறுபடியும் கலாத்தியரிடம் வரவேண்டுமென்று விரும்புகிறார். இதுவரையிலும் அவர்களுக்கு தன் அன்பை வெளிப்படுத்தியவர், இப்போது அவர்களோடு வேறு வகையாய்ப் பேசவிரும்புகிறார். அவர்களைச் சந்தேகப்படுகிறார்.

ஆகையினால் பவுல் அன்பான வார்த்தைகளைச் சொல்லுவதற்குப் பதிலாக இப்போது வேறு வகையாகப் பேசுகிறார். கலாத்தியரைப்பற்றி எப்படி நினைப்பது என்று பவுலுக்குச் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் ஒரு காலத்தில் பவுல்மீது மிகவும் அன்பாகயிருந்தார்கள். பவுலை நேசித்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் பவுலை ஒரு சத்துருவாகப் பாவிக்கிறார்கள். அவர்களிடத்தில் பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. ஆகையினால் பவுல் அவர்களைக் குறித்து சந்தேகப்படுகிறார்.

அவர்களைக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக, அவர்களிடத்தில் காணப்படுகிற உண்மையான பிரச்சனை என்ன என்பதை பவுல் அறிந்துகொள்ள விரும்புகிறார். அவர்களுக்கு மறுபடியும் சத்தியத்தை உபதேசம் செய்து, கள்ளஉபதேசங்களிலிருந்து அவர்களை விடுதலை செய்ய விரும்புகிறார். அவர்கள் மறுபடியும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திற்குள் திரும்பி வரவேண்டு மென்று பவுல் விரும்புகிறார். அவர்களைக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக, அவர்களோடு அன்பான வார்த்தைகளைப் பேசி, அவர்களுடைய விசுவாசத்தை உறுதிபண்ண விரும்புகிறார். அவர்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறார். அவர்களுக்குள் கிறிஸ்து உருவாகவேண்டுமென்பதே பவுலின் விருப்பம்.

ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்
கலா 4 : 21-31

கலா 4:21. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்.

கலா 4:22. ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்.

கலா 4:23. அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான்.

கலா 4:24. இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது, அது ஆகார் என்பவள் தானே.

கலா 4:25. ஆகார் என்பது அரபிதேசத்திலுள்ள சீனாய்மலை; அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப் பட்டிருக்கிறாளே.

கலா 4:26. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்.

கலா 4:27. அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்ப வேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது.

கலா 4:28. சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.

கலா 4:29. ஆகிலும் மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் நடந்துவருகிறது.

கலா 4:30. அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது: அடிமையான வளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப் பதில்லை; ஆகையால் அடிமையான வளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது.

கலா 4:31. இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ள வர்களுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளில் சிலர் தங்கள் இரட்சிப்புக்கு கிறிஸ்துவை மாத்திரமே விசுவாசிக்கி றார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் தாங்கள் நீதிமான் களாக்கப்பட முடியுமென்று நம்புகிறார்கள். வேறுசிலரோ கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடே, யூதமார்க்கத்து உபதேசமும் தங்கள் இரட்சிப்புக்குத் தேவையென்று சொல்லுகிறார்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மாத்திரமே தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியுமென்று நம்புகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்களுக்கும், நியாயப்பிராமணத்தை விசுவாசிக்கிற வர்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். இதற்காக ஈசாக்கு, இஸ்மவேல் ஆகியோரின் சரித்திரத்தை ஒப்பிட்டுச் சொல்லுகிறார். "நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதை கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்" என்று பவுல் அவர்களிடம் கேட்கிறார்.

நியாயப்பிரமாணத்தில் ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்களென்று எழுதியிருக்கிறது. அவர்களில் ஒருவனாகிய இஸ்மவேல் அடிமையானவளிடத்தில் பிறந்தவன். மற்றொரு குமாரனாகிய ஈசாக்கு சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். இஸ்மவேல் மாம்சத்தின்படி பிறந்தான்.

ஈசாக்கு வாக்குத்தத்தின்படி பிறந்தான். மாம்சத்தின்படி பிறப்பது என்பது இயற்கையாகப் பிறப்பதைக் குறிக்கும். ஆனால் ஈசாக்கோ இயற்கையாகப் பிறக்கவில்லை. சாராளுக்கு குழந்தை பெறுவதற்கான சரீர பெலன் இல்லாதபோது, வாக்குத்தத்தின்படி ஈசாக்கு பிறந்தான். அப்போஸ்தலர் பவுல் இந்தச் சம்பவத்தை ஒரு உருவகமாக விளக்கி, சுவிசேஷத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை எடுத்துச் சொல்லுகிறார்.

ஆகார், சாராள் ஆகிய இரண்டு ஸ்திரீகளும் இரண்டு ஏற்பாடுகளாக இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இரண்டு உடன்படிக்கைகள். ஆகார் சீனாய் மலையில் உண்டான உடன்படிக்கைக்கு ஒப்புமையாக இருக்கிறாள். சீனாய் மலையிலிருந்து நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையானது அடிமைத்தனத்திற்குள்ளாக பிள்ளை பெறுகிறது. மனுஷரை நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திற்குட்படுத்துகிறது. ஆகார் என்பது அரபி தேசத்திலுள்ள சீனாய் மலை. இது இப்பொழுதிருக்கிற எருசலேமுக்கு ஒப்புமையாக இருக்கிறது. ஆகார் தன் பிள்ளைகளோடே, அடிமைப்பட்டிருக்கிறாள்.

ஆகாரும், அவளுடைய பிள்ளைகளும், அவர்களுடைய அடிமைத் தனமும் யூதருடைய தற்போதைய நிலமையை வெளிப்படுத்துகிறது. யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக்கொண்டு அதற்கு அடிமைப் பட்டிருக்கிறார்கள். தங்களுடைய பிள்ளைகளையும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு அடிமைப்படுத்தி யிருக்கிறார்கள்.

சாராளோ சுயாதீனமுள்ளவள். இவள் மேலான எருசலேமுக்கு ஒப்புமையாகயிருக்கிறாள். மேலான எருசலேமில் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனம் இல்லை. பாவத்தினால் உண்டாகும் சாபம் இல்லை.

மேலான எருசலேமே நம்மெல்லோருக்கும் தாயானவள். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாக, யூதரும் புறஜாதியாரும், மேலான எருசலேமுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறோம். இது விசுவாசிகளுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். இதுவே உண்மையான சுயாதீனம். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வது அடிமைத்தனம்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசி களுடைய சுயாதீனத்தைச் சொல்லுவதற்கு, ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை இங்கு மேற்கோளாக எழுதுகிறார். "பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு; வாழ்க்கைப் பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா 54:1).

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்து விசுவாசிகளுக்கு அவர்களுடைய சுதந்தரத்தைத் தெளிவுபடுத்துகிறார். "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" என்று சொல்லி தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தை உறுதிபண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் நம்முடைய ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே நமக்கு இரட்சிப்பு உண்டு என்றும், இதன் மூலமாக மாத்திரமே நாம் நீதிமான்களாக்கப்பட முடியும் என்றும் நம்புகிறோம். கர்த்தருடைய பிள்ளை களாகிய நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

வாக்குத்தத்தின் பிள்ளைகள் சுதந்தர வாளிகளாகயிருந்தாலும், அவர்களுக்கும் சில துன்பங்கள் உண்டு. மாம்சத்தின்படி பிறந்தவனாகிய இஸ்மவேல், ஆவியின்படி பிறந்த ஈசாக்கை அப்பொழுது துன்பப்படுத்தினான். அதுபோலவே இப்பொழுதும் நடந்துவருகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் உலகப்பிரகாரமான ஜனங்கள் மூலமாய் துன்பங்களை அனுபவிக்கிறோம். இதற்காக நாம் சோர்ந்துபோய் விடக்கூடாது.

இதைக்குறித்து வேதமும் இவ்வாறு தெளிவாகச் சொல்லுகிறது. " சாராள் ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பேதள்ளும்; இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியா யிருப்பதில்லை என்றாள்" (ஆதி 21:10). அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை.

அப்போஸ்தலர் பவுல் ஆபிரகாமின் இரண்டு குமாரரைப்பற்றிச் சொல்லிவிட்டு, கலாத்தியருக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார். "இப்படியிருக்க சகோதரரே, நாம் அடிமையானவளுக்கு பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கு பிள்ளைகளாயிருக்கிறோம்" என்று சொல்லுகிறார். நாம் வாக்குத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம். ஆவியின்படி பிறந்திருக்கிறோம்.

5 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு பொதுவான புத்திமதிகளைச் சொல்லுகிறார். தன்னுடைய ஆவிக்குரிய ஆலோசனைகளை அவர்கள் மத்தியில் உறுதிபண்ணுகிறார் (கலா 5:1-12). விசுவாசிகள் தங்களிடத்தில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும். அவர்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்துப்போடக்கூடாது (கலா 5:13-15).

விசுவாசிகள் பாவத்தைவிட்டு விலகி ஓடவேண்டும். மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது (கலா 5:17). நாம் ஆவியினால் நடத்தப்படவேண்டும். ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளவேண்டும். மாம்ச இச்சையை நிறைவேற்றக்கூடாது (கலா 5:16,18). மாம்சத்தின் கிரியைகள் என்னென்ன என்பதையும், ஆவியின் கனியையும் பவுல் தெளிவாக அட்டவணை போட்டுக் காண்பிக்கிறார் (கலா 5:19-25). விசுவாசிகள் வீண்புகழ்ச்சியை விரும்பக்கூடாது (கலா 5:26).

விருத்தசேதனம்
கலா 5 : 1-12

கலா 5:1. ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்.

கலா 5:2. இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கலா 5:3. மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.

கலா 5:4. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.

கலா 5:5. நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்.

கலா 5:6. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும் விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.

கலா 5:7. நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?

கலா 5:8. இந்த போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.

கலா 5:9. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.

கலா 5:10. நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.

கலா 5:11. சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இது வரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப்பற்றி வரும் இடறல்ஒழிந்திருக்குமே.

கலா 5:12. உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும்.

நியாயப்பிரமாணம்

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன். நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா 5:1-4).

நாம் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறோம். மோசேயின் பிரமாணத்திற்கும் நம்முடைய இரட்சிப்புக்கும் சம்பந்தமில்லை. இரட்சிக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நிறைவேற்றவேண்டும் என்னும் அவசியம் இல்லை. நியாயப்பிரமாணம் நம்மை அடிமைப்படுத்துகிறது. கிறிஸ்துவோ நமக்கு சுயாதீன நிலைமையை உண்டு பண்ணியிருக்கிறார். இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் மறுபடியும் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தன நுகத்திற்குட்பட்டுவிடக் கூடாது. கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலமையிலேயே நிலைகொண்டிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து சுவிசேஷத்தின்கீழ் நமக்கு ஒரு விடுதலையைக் கொடுத்திருக்கிறார். நமக்கு சுயாதீன நிலமையை உண்டுபண்ணியிருக்கிறார். இந்த விடுதலை இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நமக்கு உண்டாயிற்று. அவரே நம்மை விடுதலை செய்திருக்கிறார். ஆகையினால் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலமையில் நாம் நிலைகொண்டிருக்கவேண்டும். நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தன நுகத்திற்கு நாம் மறுபடியும் அடிமைகளாகிவிடக்கூடாது.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்கள் மத்தியிலே கள்ளப்போதர்கள் பிரவேசித்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக் கடைப்பிடித்தால் மாத்திரமே அவர்கள் இரட்சிக்கப்பட முடியுமென்று கள்ளஉபதேசத்தைக் கொடுத்தார்கள். இதனால் அவர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை விட்டுவிட்டு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமானாக்கப்பட முடியுமென்று இவர்கள் நம்புவதினால், இவர்களுக்கு கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் இராது.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். "பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா 5:2) என்றும், "மறுபடியும் சாட்சியாகச் சொல்லுகிறேன்" (கலா 5:3) என்றும் எழுதி பவுல் தன் வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார். தான் ஏற்கெனவே சொன்னதை மறுபடியும் சொல்லுகிறார்.

"நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக் கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு பிரயோஜனமிராது" என்று பவுல் அவர்களுக்குச் சொல்லுகிறார். "விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற கடனாளியாயிருக்கிறான்" என்று மறுபடியும் அவர்களுக்கு சாட்சியாகச் சொல்லுகிறார். பவுலைப் பொறுத்தவரையில் இந்த உபதேசம் மிகவும் முக்கியமான உபதேசமாகயிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திற்குத் திரும்பி வரவேண்டும். விசுவாசத்தினால் மாத்திரமே தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியுமென்று நம்பவேண்டும்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை விட்டு விலகி வரவேண்டும். விருத்தசேதனம் பண்ணுகிற சடங்குகளுக்கு அவர்கள் அடிமைகளாகி விடக்கூடாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காமல், நியாயப்பிரமாணத்தையும் விருத்தசேதனத்தையும் நம்பி, அவற்றைக் கைக்கொண்டால் கிறிஸ்துவினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. கிறிஸ்து அவர்களுக்கு உண்டாக்கின சுயாதீன நிலமையிலிருந்து, அவர்கள் நிலைகொண்டிராமல் விலகிப் போய்விடுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் இதே சத்தியத்தை மறுபடியும் சொல்லுகிறார். "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று சொல்லுகிறார். ஏனெனில் விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற கடனாளியாயிருக்கிறான். அவன் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலமையிலே நிலைகொண்டிராமல், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து, கிருபையிலிருந்து விழுந்து விடுகிறான்.

விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட வேண்டுமென்பது தேவன் நமக்கு நியமித்திருக்கிற பிரமாணம். விசுவாசத்தைவிட்டுவிட்டு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்கிறவர்கள், தேவனுடைய பிரமாணத்தைவிட்டு விலகிப்போய் விடுகிறார்கள். சுயாதீன நிலமையிலிருந்து கீழே விழுந்துவிடுகிறார்கள். அவர்கள் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற கடனாளியாயிருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் முழுவதையும் எந்த மனுஷனாலும் நிறைவேற்ற முடியாது. ஆகையினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப் பற்றிக்கொள்வதினால், அவர்கள் இதன் மூலமாய் நீதிமான்களாக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லாமற்போயிற்று. அவர்கள் நிரந்தர கடனாளிகளாக இருக்கிறார்கள்.

அவர்கள் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை விட்டுவிட்டு, நியாயப்பிரமாணத்தை நம்புகிறார்கள். தங்களுடைய நம்பிக்கையை கிறிஸ்துவின்மீது கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, நியாயப்பிரமாணத்தின்மீது கட்டியெழுப்புகிறார்கள். இதனால் அவர்களுக்கு கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. தங்கள் ஜீவியத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவர் இரட்சகராக இருக்கமாட்டார். கிறிஸ்து மாத்திரமே தங்களுடைய இரட்சகர் என்று விசுவாசித்து ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அவர்களுக்கு இரட்சகரும் இல்லை. இரட்சிப்பும் இல்லை.

நீதி கிடைக்குமென்று

நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம் (கலா 5:5).

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திச் சொல்லுகிறார். அவர்களுக்கு பவுல் எடுத்துக்காட்டாக ஜீவிக்கிறார். கலாத்தியர் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார். பவுல் நீதி கிடைக்குமென்று, ஆவியைக் கொண்டு, விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லா விசுவாசிகளும் நீதி கிடைக்குமென்று நம்பிக்கையோடே காத்திருக்கிறார்கள். இந்த நீதி இந்தப் பிரபஞ்சத்தில் நமக்குக் கிடைக்காது. வரப்போகிற உலகத்தில் நமக்குக் கிடைக்கும். நாம் பரலோகத்தில் தேவநீதியைப் பெற்றுக்கொள்வோம். அந்த நீதி கிடைக்குமென்று, ஆவியைக் கொண்டு, விசுவாசத்தினால், நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்.

ஒவ்வொரு விசுவாசியும் தங்களுக்கு நீதி கிடைக்குமென்று நம்பவேண்டும். அதற்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நமக்கு இந்த உலகத்தில் பல்வேறு விதமான தேவைகளும், விருப்பங்களும் இருந்தாலும், நமக்கு நீதி கிடைக்கும் என்பதே பிரதான விருப்பமாக இருக்கவேண்டும். இது மனுஷருடைய நீதியல்ல. இது கிறிஸ்துவின் நீதி. நாம் கிறிஸ்துவின் நீதியை பெற்றுக்கொள்ளவேண்டும். அந்த நீதி நமக்குக் கிடைக்குமென்று நாம் நம்பிக்கையோடே காத்திருக்கவேண்டும்.

நமக்குக் கிடைக்கப்போகிற நீதியே, நமக்கு நித்திய சந்தோஷத்தைத் தரும். இந்தச் சந்தோஷத்தை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் பெற்றுக்கொள்ள முடியாது. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே இந்த நீதியையும், இதன் மூலமாய் வரும் நித்திய சந்தோஷத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவநீதி நமக்குக் கிடைக்குமென்று நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். இந்த நம்பிக்கை ஆவியின் மூலமாய் நமக்கு வருகிறது. ஆவியானவரின் வழிநடத்துதலினாலும், ஆவியானவரின் உதவியினாலும் நமக்கு இந்த நம்பிக்கை உண்டாயிற்று. பரிசுத்த ஆவியானவரின் கிருபையினால் நமக்குள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் வந்திருக்கிறது. கிறிஸ்துவின் மூலமாய் தேவநீதி கிடைக்குமென்று நம்பிக்கையோடு காத்திருக்கிறோம். தேவநீதியை எதிர்பார்க்கிறோம். ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால், தேவநீதி கிடைக்குமென்று நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்.

அன்பினால் கிரியை செய்கிற விசுவாசம்

கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் (கலா 5:6).

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார். அவருடைய வருகையினால் நியாயப்பிரமாணம் முடிந்துவிட்டது. ஆகையினால் ஒருவன் விருத்தசேதனம் செய்திருக்கிறானா அல்லது விருத்தசேதனம் செய்யவில்லையா என்பது முக்கியமல்ல. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. விருத்தசேதனம் செய்ததினால் ஒரு நன்மையும் வந்துவிடப்போவதில்லை. விருத்தசேதனம் செய்யாததினால் ஒரு தீமையும் உண்டாகப்போவதில்லை. இது பிரயோஜனமற்ற கிரியையாகவே இருக்கிறது. தேவன் விருத்தசேதனத்தை ஒரு பொருட்டாகப் பார்ப்பதில்லை.

விருத்தசேதனத்தின் கிரியை ஒன்றுக்கும் உதவாது. ஆனால் அன்பினால் கிரியை செய்கிற விசுவாசம் உதவும். நம்மிடத்தில் விசுவாசம் இருக்கவேண்டும். அந்த விசுவாசம் அன்பினால் கிரியை செய்யவேண்டும். கிருபை கிரியை நடப்பிக்கவேண்டும். நாம் கிரியை செய்யும்போது அதை அன்பினால் செய்யவேண்டும். விசுவாசத்தோடு செய்யவேண்டும். தேவனிடத்தில் அன்புகூரவேண்டும். மனுஷரிடத்திலும் அன்புகூரவேண்டும். அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆதாரம்.

நன்றாய் ஓடினீர்களே

நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? (கலா 5:7)

கலாத்தியர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போய்விட்டார்கள். ஆரம்பத்தில் நன்றாய் ஆரம்பம்பண்ணினார்கள். ஆனால் இப்போதோ பின்மாற்றமான நிலமையிலிருக்கிறார்கள். பவுல் அவர்களை மறுபடியும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திற்கு அழைத்து வர பிரயாசப்படுகிறார். இதற்காக அவர்களுடைய நல்ல ஆரம்பத்தை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே" என்று அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

விசுவாசியின் ஜீவியம் ஒரு ஓட்டப்பந்தயத்தைப்போன்றது. இந்தப் பந்தயத்தில் விசுவாசி ஓடவேண்டும். தொடர்ந்து ஓடவேண்டும். தன் ஓட்டத்தில் அவர் நிலைத்திருக்கவேண்டும். பரிசு வாங்கவேண்டுமென்றால் போட்டியின் முடிவு வரையிலும் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். ஆரம்பத்தில் நன்றாய் ஓடிவிட்டு, இடையில் ஓட்டத்தை நிறுத்திவிட்டால், நமக்குப் பரிசு கிடைக்காது. நாம் ஓட்டப்பந்தயத்தில் ஓடினால் மாத்திரம் போதாது. நன்றாகவும் ஓடவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், ஆரம்பத்தில் மாத்திரம் விசுவாசமிருந்தால் போதாது. நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போய்விடக்கூடாது. தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் பாதையில் தொடர்ந்து ஓடவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஓடவேண்டும். ஓட்டத்தை ஆரம்பத்திருக்கிற நாம் முடிவு வரையிலும் ஓடவேண்டும். நன்றாய் ஓடவேண்டும்.

கலாத்தியர்கள் ஆரம்பத்தில் நன்றாய் ஓடினார்கள். ஆனால் இப்போதோ கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போய்விட்டார்கள். பவுல் அவர்களிடம், "உங்களுக்கு தடை செய்தவன் யார்" என்று கேட்கிறார். அவர்களுக்கு தடை செய்தவர் யார் என்பது பவுலுக்கு நன்றாகத் தெரியும். கலாத்தியர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போக, கள்ளப்போதகர்கள் அவர்களுக்குத் தடைசெய்தார்கள். பவுலுக்கு இது நன்றாகத் தெரியும். ஆனாலும் கலாத்தியர்களும் தங்களுக்கு தடையாக இருக்கிறவர்களைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்காகவே பவுல் அவர்களிடத்தில், "உங்களுக்குத் தடை செய்தவன் யார்" என்று ஒரு கேள்வி கேட்கிறார்.

விசுவாசிகளில் அநேகர் ஆரம்பத்தில் நன்றாய் ஓடுகிறார்கள். கொஞ்சக்காலம், கொஞ்சத்தூரம் ஓடுகிறார்கள். அதன்பின்பு அவர்களுடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் ஏதாவது தடை வந்துவிடுகிறது. அப்போது அவர்கள் சோர்ந்துபோய் தாங்கள் ஓடுவதை நிறுத்திவிடுகிறார்கள். ஓட்டத்திலிருந்து விலகிப்போய் விடுகிறார்கள். ஆரம்பத்தில் நன்றாய் ஓடியவர்கள், பின்பு ஏதாவது ஒரு தடையினால் ஓட்டத்தை நிறுத்திவிடும்போது, அவர்களுக்கு ஆசீர்வாதமும் நின்றுவிடும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியமும் சீரழிந்துபோகிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளின் ஓட்டத்திற்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டும். அவர்களைத் தொடர்ந்து ஓடுமாறு உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு தடையாகயிருக்கும் காரியத்தைக் கண்டுபிடித்து, அந்தத் தடைகளை நீக்கிப்போட முயற்சிபண்ணவேண்டும். விசுவாசிகள் சோர்ந்துபோனால், அவர்களுடைய சோர்வுகளை அகற்றிப்போட முயற்சி செய்யவேண்டும்.

புதிய விசுவாசிகளுக்கு ஆரம்பத்தில் பல சோதனைகளும், பல தடைகளும் வரும். விசுவாச ஓட்டத்தை அவர்கள் தொடர்ந்து ஓடுவதை சாத்தான் தடைபண்ணுவான். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை விசுவாசிகள் பின்பற்றிச் செல்லாதவாறு, சாத்தான் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்துவான். எப்படியாவது விசுவாசிகளை அவர்களுடைய விசுவாசத்திலிருந்து வழிவிலகி சென்றுவிடுவதற்கு சாத்தான் அதிகப்பிரயாசப்படுவான். சத்தியத்திற்கு அவர்கள் கீழ்ப்படியாமற்போக சதிபண்ணுவான்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில், ஆரம்பத்தில் நன்றாய் ஓடினார்கள். சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். ஆனால் அவர்கள் சத்தியத்திற்குத் தொடர்ந்து கீழ்ப்படியாதவாறு, கள்ளப்போதகர்கள் அவர்களுக்கு கள்ளப்போதனைகளைக் கொடுத்தார்கள். கலாத்தியர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய கள்ளப்போதர்கள் தடையாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணிய சுவிசேஷமே சத்தியம். கலாத்தியர்கள் அந்தச் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். சத்தியம் அவர்களுடைய ஜீவியத்தை ஆளுகை செய்யவேண்டும். சத்தியத்தில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை அவர்கள் விசுவாசிக்கவேண்டும்.

சத்தியத்தைக் கேட்டால் மாத்திரம் போதாது. சத்தியத்தை விசுவாசித்தால் மாத்திரம் போதாது. சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும்வேண்டும். சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது. அதின் அன்பையும், அதின் வல்லமையையும் பெற்றுக்கொள்ள வேண்டும். சத்தியத்திற்கு சரியாகக் கீழ்ப்படியாதவர்கள், சத்தியத்தைத் தொடர்ந்து பற்றிக்கொள்ளமாட்டார்கள். வழியில், வழிவிலகிப் போய்விடுவார்கள். பின்வாங்கிப்போய்விடுவார்கள். தேவன் தங்களுக்கு நியமித்திருக்கிற இலக்கை அவர்கள் அடையாமல் போய்விடுவார்கள்.

இந்தப் போதனை

இந்த போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல (கலா 5:8).

கலாத்தியர் மத்தியிலே கள்ளப்போதர்கள் கள்ளஉபதேசம் பண்ணுகிறார்கள். இதனால் அவர்கள் சத்தியத்தைவிட்டு விலகிப் பின்வாங்கிப் போய்விட்டார்கள். இந்தப்போதனை அவர்களை அழைத்தவரால் உண்டாகவில்லையென்று பவுல் சொல்லுகிறார். "அழைத்தவர்" என்னும் வார்த்தை தேவனையோ அல்லது அப்போஸ்தலராகிய பவுலையோ குறிக்கலாம். இந்தப்போதனை நிச்சயமாகவே தேவனிடத்திலிருந்து வரவில்லை. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு உண்டாகும் என்பது தேவனுடைய போதனை. மனுஷர் விசுவாசத்தினால் மாத்திரமே நீதிமானாக்கப்பட முடியும் என்பது தேவனுடைய போதனைதான்.

ஆனால் கலாத்தியர் மத்தியிலே கொடுக்கப்படுகிற போதனை, இந்தப் போதனைக்கு முற்றிலும் முரண்பட்டிருக்கிறது. தேவன் இந்தப் போதனையை ஸ்தாபிக்கவில்லை. பவுலும் இந்தப் போதனையை உபதேசம் பண்ணவில்லை. பவுல் தன் ஆரம்பகால ஊழியத்திலிருந்து இதுவரையிலும் விருத்தசேதனத்திற்கும், அதைப் பிரசங்கிக்கிறவர்களுக்கும் விரோதமாகப் பேசி வருகிறார். விசுவாசிகளை விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாது என்பதே பவுலின் உபதேசம். ஆத்தும இரட்சிப்புக்கு விருத்தசேதனம் அவசியம் என்று சொல்லக்கூடாது என்பதைப் பவுல் தெளிவாகச் சொல்லுகிறார்.

விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்கிற போதனை எங்கிருந்து, யாரிடமிருந்து வந்தது என்பதை கலாத்தியரே யோசித்துப் பார்க்கவேண்டும். நிச்சயமாகவே இப்படிப்பட்ட கள்ளஉபதேசங்கள் சாத்தானிடமிருந்தும், அவனுடைய கருவியாக செயல்படுகிறவர்களிடமிருந்தும் வந்திருக்க வேண்டும். தங்களுக்கு இப்படிப்பட்ட கள்ளப்போதகம் உற்தேசம்பண்ணப்படும் போது, கலாத்தியர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்க வேண்டும். சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை விட்டுவிடாமல், அதைத் தொடர்ந்து பற்றிக்கொள்ளவேண்டும்.

புளிப்புள்ள கொஞ்ச மாவானது

புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும் (கலா 5:9).

கள்ளப்போதகர்கள் கொடுக்கிற கள்ளஉபதேசம் மிகவும் ஆபத்தானது. இது விசுவாசிகள் மத்தியில் தொற்றுநோயைப் போல பரவி, அவர்களுக்குத் தீங்குவிளைவிக்கும். கலாத்தியர்கள் கள்ளப்போதனையைப் புரிந்துகொண்டு அதைவிட்டு விலகி வரவேண்டும். கள்ளஉபதேசங்களுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். மெய்யான சத்தியத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

விருத்தசேதனத்தைப் பற்றிய உபதேசமானது, கள்ளஉபதேசம் என்பது தெரிந்திருந்தும், அதை விட்டு விலகி வராமல், அதைப்பற்றிக்கொண்டால், அதனால் அவர்களுக்கும் அவர்கள் மூலமாய் பிறருக்கும் ஆவிக்குரிய ஆபத்து உண்டாகும். ஏனெனில் புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த மா அனைத்தையும் உப்பப்பண்ணும். கொஞ்சம் புளித்த மாவு எல்லா மாவையும் புளிக்க வைத்துவிடும். புளித்தமாவை ஆரம்பத்திலேயே ஒதுக்கி வைத்துவிடவேண்டும். இல்லையென்றால் அது எல்லா மாவையும் புளிக்க வைத்துவிடும்.

விசுவாசிகளின் சமுதாயமானது பிசைந்த மாவுக்கு ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாசிகளில் ஒருவர் கள்ளஉபதேசத்தைப் பெற்றுக்கொண்டாலும், அந்த உபதேசம் மற்ற விசுவாசிகளுக்கும் பரவிவிடுவதற்கு வாய்ப்புள்ளது. கள்ளப்போதகர்கள் ஓய்வில்லாமல் விசுவாசிகள் மத்தியிலே கள்ளப்போதனைகளை உபதேசம் பண்ணுகிறார்கள். ஒரு சில விசுவாசிகள் இவர்களுடைய கள்ளப்போதனைகளை ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் கொஞ்சம் புளித்த மாவைப்போல இருக்கிறார்கள். என்றாலும், கொஞ்சம் புளித்த மாவானது, எல்லா பிசைந்த மாவையும் புளிக்க வைத்துவிடுவதுபோல, கள்ளஉபதேசத்தைப் பெற்றிருக்கிற ஒரு சில விசுவாசிகள் மூலமாய், இந்த கள்ளஉபதேசம் எல்லா விசுவாசிகளுக்கும் பரவிவிடுவதற்கு வாய்ப்புள்ளது. ஒரு விசுவாசி கள்ளஉபதேசத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, அந்த உபதேசம் சபை முழுவதற்கும் பரவிவிடும். பரவிய பின்பு அதை நீக்குவது கடினம். ஆரம்பத்திலேயே கள்ளஉபதேசத்தைக் கண்டுபிடித்து, அதை நீக்கிப்போடவேண்டும்.

உங்களைக் கலக்குகிறவன்

நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப் பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான் (கலா 5:10).

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியா தேசத்து விசுவாசிகளைக் குறித்து கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார். அவர்கள் வேறுவிதமாய் சிந்திக்கமாட்டார்களென்று பவுல் நம்புகிறார். அவர்கள் தன்னைப்போலவே சிந்திப்பார்களென்றும், தான் பிரசங்கம்பண்ணிய சத்தியத்தை விசுவாசித்து அங்கீகரிப்பார்களென்றும் பவுல் நம்புகிறார். கிறிஸ்து தம்முடைய சுவிசேஷத்தின் மூலமாய், நமக்குண்டாக்கின சுயாதீன நிலைமையிலே அவர்கள் நிலைகொண்டிருப்பார்களென்று பவுல் எதிர்பார்க்கிறார்.

நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்போது, அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்து கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கவேண்டும். ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்கேற்ற சூழ்நிலை இல்லாவிட்டாலும், கர்த்தர் அவர்களை இரட்சிப்பாரென்று, கர்த்தருக்குள் உறுதியாய் நம்பவேண்டும்.

கலாத்தியர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து விலகிப் போயிருக்கிறார்கள். இதற்காக பவுல் அவர்களை அதிகமாய்க் குற்றப்படுத்தவில்லை. அவர்கள்மீது குற்றம் சொல்லுவதற்குப் பதிலாக, அவர்களை கலக்குகிறவர்கள்மீது பவுல் குற்றம் சொல்லுகிறார். அவர்கள் எப்படிப் பட்டவர்களாயிருந்தாலும், தங்களுக்கேற்ற ஆக்கினையை அடைவார்களென்று அவர்களைக் குறித்து தீர்ப்பு சொல்லுகிறார்.

நாம் ஜனங்களுடைய தப்பிதங்களையும் பாவங்களையும் கடிந்து கொள்ளவேண்டும். தலைவர்களுக்கும், அவர்களால் வழிநடத்தப் படுகிறவர்களுக்கும் வித்தியாசமுண்டு. சில சமயங்களில் தலைவர்கள் ஜனங்களை தவறான பாதையில் வழிநடத்திவிடுவார்கள். ஜனங்களின் தப்பிதங்களைக் கடிந்துசொல்லும்போது, அந்தத் தப்பிதங்களுக்கு ஜனங்கள் காரணமா அல்லது அவர்களை வழிநடத்துகிற தலைவர்கள் காரணமா என்று வித்தியாசம் காணவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியரின் பின்மாற்றத்தைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறார். அவர்கள் விசுவாசத்தை விட்டு விலகிப்போனதற்கு, அவர்களுக்கு உபதேசம் செய்த கள்ளப்போதகர்களே காரணமென்று தீர்மானம்பண்ணுகிறார். அதற்காக அவர்களைக் கடிந்து கொள்கிறார். அவர்கள் தாங்கள் செய்த தப்பிதங்களுக்கேற்ற ஆக்கினையை அடைவார்களென்று கள்ளப்போதர்களைக் குறித்து பவுல் தீர்ப்பு சொல்லுகிறார். தேவன் அவர்களை நீதியாய் நியாயம் விசாரிப்பாரென்று பவுல் நிச்சயமாய் நம்புகிறார்.

கலாத்தியா தேசத்து விசுவாசிகளைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும் என்று பவுல் விரும்புகிறார். அவர்கள் கிறிஸ்துவை விட்டுத் தறிப்புண்டு போகக்கூடாது. கிறிஸ்துவின் மூலமாய் வரும் இரட்சிப்பின் நம்பிக்கைகளிலிருந்து அவர்கள் தறிப்புண்டு போகக்கூடாது. அவர்கள் சபையின் ஐக்கியத்திலிருந்து தறிப்புண்டு போகவேண்டும். கள்ளஉபதேசத்தை சபையாருக்கு சொல்லமுடியாதபடி அவர்களுக்குத் தடை ஏற்படவேண்டும். சுவிசேஷம் பரிசுத்தமானது. கள்ளப்போதகர்கள் சுவிசேஷத்தை கலப்பாய்ப் போதிக்கிறார்கள். அப்படிப்பட்ட கள்ளப்போதகர்களுக்கு விரோதமாக பவுல் எதிர்த்து நிற்கிறார்.

விருத்த சேதனத்தைப் பிரசங்கிக்கிறவன்

சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இது வரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப்பற்றி வரும் இடறல் ஒழிந்திருக்குமே. உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும் (கலா 5:11,12).

கலாத்தியர் மத்தியிலே யூதமார்க்கத்து உபதேசங்களைப் போதிக்கிற கள்ளப்போதகர்கள் ஊழியம் செய்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் உபதேசம் பண்ணுகிறார்கள். கள்ளப்போதகர்கள் பவுலைக்குறித்து தப்பிதமாகப் பேசுகிறார்கள். பவுலுக்கு விரோதமாக துர்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். பவுலும் விருத்தசேதனத்தை ஆதரித்துப் பிரசங்கிப்பதாக கலாத்தியர்கள் சொல்லுகிறார்கள். பவுலும் விருத்தசேதனத்தை ஆதரிப்பதினால், கலாத்தியர் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று கள்ளப்போதகர்கள் பொய் சொல்லுகிறார்கள்.

விசுவாசிகள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று பவுல் ஒருபோதும் பிரசங்கம்பண்ணவில்லை. பவுல் சொல்லாத பிரசங்கத்தை, அவர் பிரசங்கம்பண்ணியதாக, கள்ளப்போதகர்கள் பொய்சொல்லி, பவுலின் பெயரைக் கெடுக்கிறார்கள். தான் விருத்தசேதனத்தைப் பற்றி பிரசங்கிக்கவில்லையென்று பவுல் இங்கு உறுதியாகச் சொல்லுகிறார். அவர் விருத்தசேதனத்தைப் பிரசங்கித்திருந்தால், அவருக்கு ஒரு துன்பமும் வந்திருக்காது. அவர் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. பவுல் விருத்தசேதனத்திற்கு விரோதமாக பிரசங்கம்பண்ணுவதால்தான் அவருக்கு அநேகத் துன்பங்கள் உண்டாயிற்று.

பவுல் விருத்தசேதனத்திற்கு ஆதரவாகப் பேசியிருந்தால், யூதமார்க்கத்து உபதேசத்தைப் போதிக்கிற கள்ளப்போதகர்கள் பவுலை ஏற்றுக்கொள்வார்கள். பவுல்மீது பிரியமாயிருப்பார்கள். பவுலைத் துன்பப்படுத்தமாட்டார்கள். ஆனால் பவுலோ, தன் ஊழியத்தின் ஆரம்ப முதலே, விருத்தசேதனத்திற்கு விரோதமாகத்தான் பிரசங்கம் பண்ணிவருகிறார். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே மனுஷர் நீதிமானாக்கப்பட முடியும் என்று உறுதியாகச் சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் யாரும் நீதிமானாக்கப்படுவதில்லை என்பதுதான் பவுலின் உபதேசம். பவுல் விருத்தசேதனத்திற்கு எப்போதுமே தடையாக இருக்கிறார்.

பவுல் விருத்தசேதனத்தை ஆதரித்துப் பிரசங்கம் செய்திருந்தால், சிலுவையைப்பற்றி வரும் இடறல் அவருக்கு ஒழிந்திருக்கும். அவருக்கு ஒரு துன்பமும் உண்டாயிருக்காது. ஆனால் பவுலோ சத்தியத்தைப் பிரசங்கம் செய்கிறார். துன்பங்களையும் பாடுகளையும், வேதனைகளையும் சகித்துக்கொள்கிறார். சத்தியத்தைக் கலப்பாய் உபதேசம்பண்ணுவதற்குப் பதிலாக, சத்தியத்தை உண்மையாய் உபதேசம் செய்து, இதனால் வரக்கூடிய எல்லா இடறல்களையும் தாங்கிக்கொள்கிறார்.

ஆவிக்கேற்றபடி நடப்பது
கலா 5 : 13-26

கலா 5:13. சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.

கலா 5:14. உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

கலா 5:15. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

கலா 5:16. பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

கலா 5:17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

கலா 5:18. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

கலா 5:19. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

கலா 5:20. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்.

கலா 5:21. பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கலா 5:22. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,

கலா 5:23. சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

கலா 5:24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

கலா 5:25. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

கலா 5:26. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

சுயாதீனம்

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்(கலா 5:13-16).

விசுவாசிகள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கக்கூடாது. ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். விசுவாசிகளுடைய ஜீவியத்தில் தேவபக்தியும், நற்குணமும் காணப்பட வேண்டும். விசுவாசிகள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை விசுவாசிக்கிறவர்களுடைய அடிமைத் தனத்தை நீக்கிவிட்டு, அவர்களுக்கு விடுதலையையும் சுயாதீனத்தையும் கொடுக்கிறார். ஆனால் இந்த சுயாதீனத்தை அநுசரிப்பதில், ஒவ்வொரு விசுவாசியும் மிகவும் கவனத்தோடிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற சுயாதீனத்தை, தங்களுடைய மாம்சத்திற்கேதுவாக, அநுசரிக்கக்கூடாது. அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டும்.

கர்த்தரை விசுவாசிக்கிற பிள்ளைகளாகிய நமக்கு சுயாதீனம் ஒரு சிலாக்கியமாக கிடைத்திருக்கிறது. நமக்கு சுயாதீனம் இருப்பதினால் நாம் எதையும் செய்யலாம் என்று தீர்மானம் செய்துவிடக்கூடாது. கிறிஸ்து நியாயப்பிராமணத்தின் சாபத்திலிருந்து நம்மை விடுவித்திருக்கிறார். ஆனால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு கீழ்ப்படிவதிலிருந்து அவர் நம்மை விடுவிக்கவில்லை. இயேசுகிறிஸ்து நமக்கு சுயாதீனத்தைக் கொடுத்தாலும், நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் நற்குணங்கள் காணப்படவேண்டும். நமக்கு சுயாதீனம் இருக்கிறது என்பதற்காக, நம்முடைய சுயாதீனத்தை மாம்சத்திற்கேதுவாக அநுசரித்து, நமக்கு இஷ்டமானதைச் செய்துவிடக்கூடாது.

நாம் ஒருவருக்கொருவர் அன்பினாலே ஊழியம் செய்யவேண்டும். "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறுகிறது. அன்பே நியாயப்பிரமாணத்தின் மொத்த சாரம். நாம் பிறரிடத்தில் அன்புகூரும்போது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம். தேவன் நமக்கு சுயாதீனத்தைக் கொடுத்திருக்கிறார் என்று நினைத்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்து, பிறரிடத்தில் அன்புகூராமல் இருந்துவிடக்கூடாது.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம் செய்கிறார் (யோவா 13:35). ஒருவேளை நம்மால் எல்லாரிடத்திலும் அன்புகூரமுடியாமல் போகலாம். அன்புகூராவிட்டாலும், ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்காமலிருக்கவேண்டும். யாரையும் அழித்துப்போடவேண்டுமென்று நினைக்கக்கூடாது.

"உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதுதான் நியாயப்பிரமாணத்தின் சாரம்சம். கலாத்தியர்கள் இந்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாவிட்டாலும், ஒருவரையொவருவர் கடித்து பட்சிக்காமலிருக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். "நீங்கள் ஒருவரையொருவர் கடித்து பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவரால் ஒருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (கலா 5:15) என்று தன் நிருபத்தில் எழுதுகிறார். சகோதரர் மத்தியிலே வாக்குவாதங்களும், சண்டைகளும், பேதங்களும் தொடர்ந்து காணப்படுமானால் எல்லோருக்கும் அழிவு உண்டாகும். ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவார்கள்.

கர்த்தருடைய சபையை வெளியிலுள்ள அந்தகார சக்திகள் எதாலும் அழிக்க முடியாது. ஆனால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே கடித்து பட்சித்து, அழிந்துபோவார்கள். விசுவாசிகளை புறஜாதியாருடைய கைகள் அழிக்காது. ஆனால் சபையிலுள்ள விசுவாசிகள் தங்கள் சொந்தக் கைகளினால் தங்களைத் தாங்களே அழித்துப்போடுவார்கள். விசுவாசிகள் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூராமல், ஒருவரையொருவர் கடித்து பட்சித்தால், தேவனுடைய கிருபை அவர்களுக்குக் கிடைக்காது. அன்பின் ஆவி அவர்களை விட்டு அகன்றுபோகும். அசுத்த ஆவி அவர்களுக்குள் பிரவேசித்துவிடும். தேவகிருபை இல்லாத இடங்களில் சத்துருவினுடைய கிரியை தாராளமாய் நடைபெறும்.

மாம்சத்தின் கிரியைகள்

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள். பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் (கலா 5:17-21).

கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோரும் பாவத்தை வெறுக்கவேண்டும். பாவத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளவேண்டும். மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருக்க வேண்டும். சபையிலுள்ள விசுவாசிகள் கருத்து வேறுபாடில்லாமல், ஒருவரையொருவர் கடித்து பட்சிக்காமல், ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். அப்போதுதான் விசுவாசிகள் மத்தியில் பிரிவினை உண்டாகாது. விசுவாசிகள் ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் இருக்க வேண்டுமென்றால், அவர்களெல்லோரும் பாவத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும்.

ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. இரட்சிக்கப்பட்ட பின்பு நம்முடைய ஆவி நமக்குள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஆவிக்கேற்ற பிரகாரம் நாம் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளை நாம் செய்யாமலிருக்கிறோம். மாம்சத்தின்படி செய்யக்கூடாதவற்றை செய்துவிடுகிறோம். நாம் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளை செய்யாதபடிக்கு, மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

இயல்பாகவே எல்லா மனுஷரிடத்திலும் இப்படிப்பட்ட போராட்டம் உண்டு. அவர்களுடைய மனச்சாட்சியும் அவர்களுடைய துன்மார்க்க குணமும் ஒன்றுக்கொன்று யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கும். இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய சிருஷ்டியாகயிருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நமக்குள் பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. நம்முடைய புதிய ஜீவியத்தில்,

BELLWETHER INTERNATIONAL

கலாத்தியர் - விரிவுரை
GALATIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

பழைய பாவத்தின் சுபாவங்கள் ஓரளவு தங்கியிருக்கிறது. நம்முடைய புதிய சுபாவத்தில் தேவகிருபை கிரியை செய்கிறது. நாம் இந்த உலகத்திலிருக்கிற வரையிலும், நம்முடைய பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும், நமக்குள்ளே யுத்தம் நடைபெறும்.

நமக்குள் மாம்சத்திற்கும் ஆவிக்கும் போராட்டம் நடைபெறும்போது, நாம் எந்தப் பக்கமாக நின்று யுத்தம்பண்ணவேண்டும் என்று பவுல் விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லுகிறார். ஆவியின் பக்கமாய் நின்று மாம்சத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவது நம்முடைய கடமை. விசுவாசிகள் மாம்சத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். இதற்காக தேவகிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆவியினால் நடத்தப்படவேண்டும். தேவகிருபையினால் மாம்சத்தின் இச்சைகளை போராடி ஜெயிக்கவேண்டும். இந்தப் போராட்டத்தில் நாம் ஜெயிக்க வேண்டுமென்றால், நாம் ஆவியினால் நடத்தப்படவேண்டும்.

நாம் ஆவியினால் நடத்தப்பட்டால் மாம்சத்தின் கிரியைகளை நிறைவேற்ற மாட்டோம். ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்த ஒப்புக்கொடுக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக ஆளுகை நம்மை ஆளுகை செய்து, ஆட்கொள்ளவேண்டும். நம்மிடத்தில் தங்கியிருக்கிற நம்முடைய பழைய சுபாவமும், பாவமான பழக்க வழக்கங்களும் நம்மை விட்டு நீங்கிப்போகவேண்டும். பழைய சுபாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. ஆவியானவர் நம்மை ஆளுகை செய்யவேண்டும். நமக்குள் புதிய சுபாவம் நிரம்பியிருக்கவேண்டும்.

பாவத்திற்கு விரோதமாக யுத்தம் செய்யவேண்டுமென்றால், நாம் ஆவியினால் நடத்தப்படவேண்டும். நாம் ஆவியினால் நடத்தப்படுவோமென்றால், நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களல்ல. நமக்குள் பாவத்தின் வல்லமை காணப்படலாம். பழைய பாவசுபாவம் நமக்குள் இருக்கலாம். அவ்வப்போது இவை நம்மைச் சோதிக்கலாம். நம்முடைய மாம்ச இச்சைகள் நம்முடைய ஆவிக்கு விரோதமாக யுத்தம்பண்ணலாம். இருந்தாலும் நாம் ஆவியினால் நடத்தப்படுவோமென்றால், நம்முடைய பழைய பாவசுபாவம் நம்மை மேற்கொள்ளமாட்டாது. நாம் நியாயப்பிரமாணத்திற்கும், அதன் ஆக்கினைக்கும் கீழ்ப்பட்டவர்களாக இருக்கமாட்டோம்.

அப்போஸ்தலர் பவுல் மாம்சத்தின் கிரியைகளை இங்கு வரிசையாக அட்டவணை போட்டு சொல்லுகிறார். மாம்சத்தின் கிரியைகள் பல உள்ளன. இவையெல்லாமே நம்முடைய ஆவிக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகின்றன. மாம்சத்தின் கிரியைகள் எல்லாமே பாவமானது. விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம் ஆகியவை ஏழாவது கற்பனைக்கு விரோதமான பாவம். விக்கிரகாராதனை பில்லிசூனியம் ஆகியவை இரண்டாவது கற்பனைக்கு விரோதமான பாவம்.

ஒரு சில பாவங்கள் மற்ற மனுஷருக்கு விரோதமாக செய்யக்கூடியவை. பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள் ஆகியவை மற்ற மனுஷருக்கு விரோதமாக நாம் செய்கிற பாவங்கள். இந்தப் பாவங்கள் முற்றிப்போனால் அது மனுஷ கொலைகளில் முடியும். நாம் மற்றவர்களுடைய நற்பெயருக்கும், அவர்களுடைய புகழுக்கும் விரோதமாக யுத்தம்பண்ணுவதோடு, அவர்களுடைய ஜீவனுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணி, அவர்களைக் கொலைசெய்கிற நிலமைக்கு வந்துவிடலாம். இவையெல்லாம் மாம்சத்தின் கிரியைகள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பிறருக்கு விரோதமாகப் பாவம் செய்வதுபோல, சில சமயங்களில் நமக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறோம். வெறிகள், களியாட்டுக்கள் ஆகியவை நமக்கு விரோதமாக நாம் செய்கிற பாவங்களாகும். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று பவுல் கலாத்தியருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். தாம் ஏற்கெனவே சொன்னதை, இப்போது அவர்களுக்கு மறுபடியும் சொல்லுகிறார். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. இந்தப் பாவங்கள் பரலோகத்தின் வாசல்களை அவர்களுக்கு அடைத்துப்போடும்.

ஆவியின் கனி

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம் (கலா 5:22-25).

விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியம் கனிதரும் ஜீவியமாக இருக்கவேண்டும். ஆவியின் கனி நம்மிடத்திலிருந்து வெளிப்படவேண்டும். அப்போஸ்தலர் பவுல் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, அதை மாம்சத்தின் கிரியை என்று சொல்லுகிறார். ஏனெனில் மாம்சம் மனுஷனை பாவத்திற்குட்படுத்துகிறது. கிருபையானது ஆவியின் கனி என்று அழைக்கப்படுகிறது. ஆவியின் கனியானது பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்தே புறப்பட்டு வருகிறது. ஆவியானவரே கனிதரும் வேராக இருக்கிறார்.

நம்மிடத்தில் அன்பும் சந்தோஷம் நிரம்பியிருக்கவேண்டும். அப்போதுதான் நம்மால் கர்த்தரிடத்தில் எப்போதும் சந்தோஷமாக இருக்கமுடியும். நாம் தேவனோடும் மற்றவர்களோடும் சமாதானத்தோடிருக்கவேண்டும். நீடிய பொறுமையும் தயவும் நம்மிடத்தில் காணப்படவேண்டும். நமக்கு விரோதமாக யாராவது தீங்கு செய்தால், உடனே கோபப்பட்டுவிடாமல், நீடியபொறுமையோடு, அந்தத் தீங்குகளைச் சகித்துக்கொள்ள வேண்டும். நம்மிடத்தில் நற்குணம் காணப்படவேண்டும். வாய்ப்பு கிடைக்கும்போது பிறருக்கு நன்மைசெய்ய நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

சத்தியத்தில் நமக்கு விசுவாசம் வேண்டும். நாம் சத்தியத்தை அறிக்கை செய்கிறோம். அதை விசுவாசித்து அறிக்கை செய்யவேண்டும். மற்றவர்களுக்கு நாம் வாக்கு கொடுக்கும்போது, நம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்களாக காணப்படவேண்டும். நம்மிடத்தில் சாந்தகுணம் இருக்கவேண்டும். எளிதில் கோபப்பட்டு விடக்கூடாது. இச்சையடக்கத்தோடிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் பேராசைப்படக்கூடாது. இப்படிப்பட்ட ஆவியின் கனி நம்மிடத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார். இதைப்பற்றிச் சொல்லும்போது, “இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை” என்றும் சொல்லுகிறார்.

கலாத்தியர்கள் இப்போது நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை. அவர்கள் தேவகிருபையின்கீழ் இருக்கிறார்கள். யாரிடத்திலெல்லாம் ஆவியின்கனி காணப்படுகிறதோ அவர்கள் ஆவியினால் நடத்தப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இவர்களை ஆளுகை செய்கிறார். இவர்கள் மூலமாக ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறார்.

BELLWETHER INTERNATIONAL

கலாத்தியர் - விரிவுரை
GALATIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கிறிஸ்துவினுடையவர்கள் இச்சை அடக்கத்தோடிருப்பார்கள். அவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். அவர்கள் பாவத்திற்கு மரித்தவர்களாக இருக்கிறார்கள். பவுல் எப்போதோ பாவத்திற்கு மரித்துவிட்டார். அவரைப்போலவே கலாத்தியரும் இப்போது பாவத்திற்கு மரித்தவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுக்கு பாவத்தின்மீது பூரண வெற்றி உண்டாகவில்லை. அவர்களுடைய மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. அவர்கள் செய்யவேண்டு மென்றிருக்கிறவைகளை செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. இவர்களுக்குள் மாம்சமும் இருக்கிறது, ஆவியும் இருக்கிறது. மாம்சத்தின் இச்சைகளும் இருக்கிறது. மாம்சத்தின் இச்சைகள் நம்மை மேற்கொள்ளக்கூடாது. மாம்சத்தையும், அதின் இச்சைகளையும் நாம் சிலுவையில் அறையவேண்டும். மாம்சத்தினால் நாம் அழிந்துபோகக்கூடாது.

நாம் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறவர்கள். நாம் நம்முடைய மாம்சத்தையும் அதன் இச்சைகளையும், தொடர்ந்து சிலுவையில் அறைந்துகொண்டே இருக்கவேண்டும். பாவத்திற்கு ஊழியம் செய்கிறவர்களையும், தங்கள் மாம்சத்திற்கும் அதன் ஆசை இச்சைகளுக்கும் அடிமைப் பட்டவர்களையும், கிறிஸ்து தம்முடையவர்களாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

நாம் தீமையைவிட்டு விலகியிருந்தால் மாத்திரம் போதாது. பாவம் செய்யாமல் இருந்தால் மாத்திரம் போதாது. நன்மை செய்யவும் கற்றுக்கொள்ளவேண்டும். மாம்சத்தின் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படக்கூடாது. மாம்சத்தின் கிரியைகளை நாம் செய்யக்கூடாது. இதைச் செய்யாமலிருந்தால் மாத்திரம் போதாது. நாம் கனிதரவும்வேண்டும். நம்முடைய ஜீவியத்திலிருந்து ஆவியின் கனி வெளிப்படவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கனிகொடுக்கும் ஜீவியத்தை நாடவேண்டும். மிகுந்த கவனத்தோடு நம்முடைய ஜீவியத்திலிருந்து ஆவியின் கனியை தொடர்ந்து கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். நாம் ஆவியினால் பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் வேண்டும். கனிகொடுப்பது கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய கடமை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் தேவனுடைய புத்திரராகயிருக்கிறோம். அவரை, "அப்பா பிதாவே" என்று கூப்பிடத்தக்கதாக, தேவன் தமது குமாரனுடைய ஆவியை நம்முடைய இருதயங்களில் அனுப்பியிருக்கிறார் (கலா 4:6). கிறிஸ்துவின் ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருப்பது, நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். கிறிஸ்துவின் ஆவியையுடையவர்களாகிய நாம், அதற்கேற்றபடி நடக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஜீவியத்தில் நற்குணங்கள் காணப்படவேண்டும். நம்முடைய நடத்தை நல்ல நடத்தையாக இருக்கவேண்டும். ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்கள் ஆவியின் கனியைக் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருக்கிறவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறையவேண்டும். புதிய ஜீவனைப் பெற்றிருக்கிற நாம், அந்த ஜீவனுக்கேற்றபடி பரிசுத்தத்தில் நடக்கவேண்டும்.

வீண்புகழ்ச்சி

வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம் (கலா 5:26).

அப்போஸ்தலர் பவுல் இந்த அதிகாரத்தின் முடிவில் கலாத்தியரை எச்சரித்து ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் வீண்புகழ்ச்சியை விரும்பக்கூடாது. ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளக்கூடாது. ஒருவரையொருவர் கோபமூட்டக்கூடாது. வீண்புகழ்ச்சியை விரும்புகிறவர் மற்றவர்மீது பொறாமை கொள்வார், மற்றவர்களை கோபமூட்டுவார். இதனால் விசுவாசிகள் மத்தியில் வாக்குவாதங்களும் சண்டைகளும் உண்டாகும். ஆவியின் கனி வெளிப்படுகிற இடத்தில் மாம்சத்தின் கிரியை வெளிப்படும்.

நாம் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும் என்பதுதான் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிற முக்கியமான பிரமாணம். நாம் ஒருவருக்கொருவர் அன்புகூராமல், வீண்புகழ்ச்சியை விரும்பி, ஒருவரையொருவர் கோபமூட்டி, ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளும்போது, கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறவர்களாகயிருப்போம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய உள்ளான சுபாவத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மனுஷரிடத்திலிருந்து வருகிற புகழ்ச்சி வீண்புகழ்ச்சியாகவே இருக்கிறது. நாம் மனுஷருடைய வீண்புகழ்ச்சியை விரும்பக்கூடாது. இப்படிப்பட்ட வீண்புகழ்ச்சிகளை சிலுவையில் அறையவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனுஷர் புகழவேண்டுமென்று ஊழியம் செய்யக்கூடாது. கர்த்தருக்கு உண்மையாக ஊழியம் செய்யவேண்டும். அப்போது கர்த்தரே நம்மை, "நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே" என்று புகழ்ந்து பேசுவார்.

6 அதிகாரம்

இந்த அதிகாரம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசிகளோடு எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும், விசுவாசிகளுடைய ஆவிக்குரிய கடமைகளைப்பற்றியும் பவுல் முதலாவது பகுதியில் தெளிவுபடுத்தி எழுதுகிறார் (கலா 6:1-10). யூதமார்க்கத்து கள்ளப்போதர்களுக்கு விரோதமாக கலாத்தியர்கள் எச்சரிப்போடு தங்களைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று இந்த நிருபத்தின் இரண்டாவது பகுதியில் பவுல் எழுதுகிறார். கள்ளப்போதகர்களின் சுபாவங்களை பவுல் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார் (கலா 6:11-14). தன்னுடைய சுபாவத்தையும் நடக்கையையும் பற்றி இந்த நிருபத்தில் எழுதுகிறார். நிருபத்தின் முடிவுரையாக விசுவாசிகளுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதத்தை பயபக்தியோடு சொல்லி, இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார்.

கிறிஸ்துவினுடைய பிரமாணம் கலா 6 : 1-10

கலா 6:1. சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப் பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு.

கலா 6:2. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

கலா 6:3. ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்.

கலா 6:4. அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும்.

கலா 6:5. அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே.

கலா 6:6. மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக் கடவன்.

கலா 6:7. மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

கலா 6:8. தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

கலா 6:9. நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

கலா 6:10. ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்.

சீர்பொருந்தப்பண்ணுங்கள்

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு (கலா 6:1).

ஒரு சில விசுவாசிகள் ஏதாவது குற்றத்தில் அகப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் சோதனையில் எதிர்பாராமல் சிக்கி பாவம் செய்திருக்கலாம். இப்படிப்பட்டவர்கள்மீது மற்ற விசுவாசிகள் கடினமாக நடந்து கொள்ளக்கூடாது. சாந்தமுள்ள ஆவியோடே அவர்களை சீர்பொருந்தப் பண்ணவேண்டும். ஒரு சிலர் வேண்டுமென்றே துணிகரமாகப் பாவம் செய்வார்கள். இப்படிப்பட்டவர்களைக் கண்டிக்கவேண்டும். வேறுசிலர், எதிர்பாராமல் சில குற்றத்தில் அகப்பட்டுக் கொள்வார்கள். இப்படிப் பட்டவர்களை சாந்தமுள்ள ஆவியோடே சீர்பொருந்தப் பண்ணவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஆவிக்குரியவர்கள். நம்மிடத்தில் ஆவிக்குரிய சுபாவங்கள் காணப்படவேண்டும். குற்றத்தில் அகப்பட்டிருக்கிறவர்களை சாந்தமுள்ள ஆவியோடே சீர்பொருந்தப் பண்ணவேண்டும். இது ஆவிக்குரிய விசுவாசிகளின் கடமை. "சீர்பொருந்தப்பண்ணுதல்" என்னும் வார்த்தையானது, "முறிந்துபோன எலும்புகளை மறுபடியும் கட்டி ஒட்டவைத்தல்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. எலும்புகள் பிசகிவிட்டால், அதை மிகவும் கவனமாக மறுபடியும் ஒன்றுசேர்க்கவேண்டும். உடைந்த எலும்புகளை முரட்டுத்தனமாகச் சேர்க்க முடியாது. நிதானமாக செயல்படவேண்டும். அதுபோலவே விசுவாசிகள் ஏதாவது குற்றத்தில் அகப்பட்டு விட்டால், அவர்களிடம் முரட்டுத்தனமாக கடிந்துகொள்ளக்கூடாது. முறிந்துபோன எலும்புகளை மிகவும் கவனமாக மறுபடியும் ஒட்டவைப்பதுபோல, குற்றத்தில் அகப்பட்டிருக்கிற விசுவாசிகளை, சாந்தமுள்ள ஆவியோடே சீர்பொருந்தப் பண்ணவேண்டும். அவர்களுடைய தப்பிதங்களை மன்னிக்கவேண்டும். நாம் அவர்கள்மீது அன்பாகயிருக்கிறோம் என்பதை அவர்களுக்கு உறுதிபண்ணவேண்டும்.

குற்றத்தில் அகப்பட்டிருக்கிற விசுவாசிகள்மீது நாம் கோபப்படக்கூடாது. சாபவார்த்தைகளைச் சொல்லி அவர்களை பயமுறுத்தக்கூடாது. அவர்களிடத்தில் அன்பான வார்த்தைகளைப் பேசவேண்டும். சாந்தமுள்ள ஆவியோடு அவர்களிடம் பழகவேண்டும். அவர்களை எப்படியாவது மறுபடியும் விசுவாச ஜீவியத்திற்கு அழைத்து வரவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய சகோதரர் பாவத்தில் விழுந்துவிட்டால், அதைப் பார்த்து நாம் சந்தோஷப்படக்கூடாது. ஆவிக்குரிய மற்ற சகோதரர்கள் பாவத்தில் விழுந்துபோவதை நமக்கு வெற்றியாக நினைக்கக்கூடாது.

பல சமயங்களில் குற்றத்தில் அகப்பட்டிருக்கிற சகோதரரை நாம் கடினவார்த்தைகளைச் சொல்லி திருத்துவதற்கு முயற்சிபண்ணுகிறோம். ஆனால் அவர்களோ சீர்பொருந்துவதற்குப் பதிலாக சீரழிந்துபோகிறார்கள். கடினவார்த்தைகளினாலோ, கோபமான வார்த்தைகளினாலோ ஆவிக்குரிய பிரயோஜனம் உண்டாவதில்லை. ஆகையினால் அவர்களை சாந்தமுள்ள ஆவியோடு சீர்பொருந்தபண்ண வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவர்களிடத்தில் அன்பாகப் பேசவேண்டும். அவர்களுடைய ஆத்துமாவைக்குறித்து கரிசனையுடன் பேசவேண்டும். அவர்கள் கர்த்தரோடு மறுபடியும் ஒப்புரவாக வேண்டும். அவர்கள் சீர்பொருந்தப்பண்ணப்படவேண்டும்.

ஆவிக்குரியவர்களாகிய நாம் மற்ற சகோதரரிடத்தில் சாந்தமுள்ள ஆவியோடு அவர்களை சீர்பொருந்தப்பண்ணவேண்டும். இதற்கு முக்கியமான காரணம், நாமும் குற்றத்தில் அகப்படுவதற்கு வாய்ப்புள்ளது. நாமும் சோதிக்கப்பட்டு, பாவத்தில் விழுந்து விடுவதற்கு வாய்ப்புள்ளது. நாம் மற்ற சகோதரர்களிடத்தில் எப்படி பழகுகிறோமோ, அப்படித்தான் மற்றவர்களும் நம்மோடு பழகுவார்கள்.

நாம் மற்றவர்களிடம் சாந்தமுள்ள ஆவியோடு பழகினால், அவர்களும் நம்மோடு சாந்தமுள்ள ஆவியோடு பழகுவார்கள். ஆகையினால் நாம் சோதிக்கப்படாதபடிக்கு நம்மைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

மற்ற சகோதரர்கள் இன்று பாவம் செய்திருக்கலாம். இதே போன்ற பிரச்சனை நாளைக்கு நமக்கும் வரலாம். நிற்கிற நாம் விழுந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். மற்றவர்களோடு எப்படி பழகுகிறோமோ அப்படித்தான் மற்றவர்களும் நம்மோடு பழகுவார்கள். மற்றவர்கள் நமக்கு எதைச் செய்யவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதை நாம் அவர்களுக்கு முந்திச் செய்யவேண்டும். மற்றவர்கள் நம்மோடு சாந்தமுள்ள ஆவியோடு பேசவேண்டுமென்று விரும்பினால், நாம் முதலில் அவர்களோடு சாந்தமுள்ள ஆவியோடு பேசவேண்டும்.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலா 6:2).

நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும். நமக்கு முன்பாக யாராவது பாரம் சுமப்பார்களென்றால், அவர்களுடைய பாரத்தை நாமும் சுமக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்கள்மீது கரிசனையோடும், அன்போடும் இருந்து, அவர்களுக்கு ஆறுதலாகவும் உதவியாகவும் செயல்படவேண்டும். ஒரு சிலர் சோதனைகளில் சிக்கிக்கொள்ளலாம். பாடுகளை அனுபவிக்கலாம். அப்படிப்பட்டவர்களை நாம் சந்திக்கும்போது, அவர்களைக் கண்டும் காணாதவர்கள்போல இருந்துவிடக்கூடாது. அவர்களுடைய சோதனைக்காலத்தில் நாம் அவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும்.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும்போது நாம் கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம். கிறிஸ்துவின் பிரமாணம் அன்பின் பிரமாணம். இயேசுகிறிஸ்து தம்முடைய பிரமாணத்திற்கு எடுத்துக்காட்டாக ஜீவித்தவர். இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையும் அவருடைய சுபாவமும் நமக்கு முன்மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுபாவமே அவருடைய பிரமாணம். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நம்மிடத்தில், கிறிஸ்துவின் பிரமாணம் கிரியை செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகள் மோசேயின் பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். மோசேயின் பிரமாணம் ஜனங்கள்மீது தேவையில்லாத கடினபாரத்தைச் சுமத்துகிறது. கிறிஸ்துவின் பிரமாணமோ, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும் என்று சொல்லுகிறது. மோசேயின் பிரமாணம் நம்மீது பாரத்தைச் சுமத்துகிறது. கிறிஸ்துவின் பிரமாணத்தில் நாம் மற்றவர்களுடைய பாரத்தைச் சுமக்கிறோம்.

தன்னைத்தானே வஞ்சிக்கிறவன்

ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான் (கலா 6:3).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் பெருமை காணப்படக்கூடாது. நாம் ஒன்றுமில்லாதவர்கள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். நாம் ஒன்றுமில்லாதிருந்தும், நம்மை நாமே ஒரு பொருட்டு என்று எண்ணினால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாகயிருப்போம். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதற்கு நம்முடைய சுயபெருமை தடையாக இருக்கும். பெருமையும் அகந்தையும் சத்துருவின் சுபாவம். பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபை செய்கிறார்.

நம்முடைய சுபாவத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்மிடத்தில் தீயசுபாவம் ஏதாவது இருக்குமென்றால் அதை ஆரம்பத்திலேயே நீக்கிப்போடவேண்டும். ஒரு சிலரிடத்தில் ஒன்றுமே இருக்காது. ஆனால் தங்களிடத்தில் எல்லாம் இருப்பதாக நினைத்து அவர்கள் பெருமைப்படுவார்கள். இப்படிப்பட்ட சுபாவத்தை பவுல் எச்சரிக்கிறார். சுயபெருமையினால் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள். சுயபெருமையுடையவர்கள் மற்றவர்களை ஏளனமாகப் பார்க்கிறார்கள். தங்களிடத்தில் மேன்மையான குணம் எதுவும் இல்லாவிட்டாலும், மற்றவர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்களென்று நினைக்கிறார்கள். இப்படி நினைக்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

சுயபெருமையுள்ளவர்கள் எளிதில் மனந்திரும்பமாட்டார்கள். சோதனையை மேற்கொள்ளமாட்டார்கள். பாடுகளையும் வேதனைகளையும் சகித்துக்கொள்ள மாட்டார்கள். சுயபெருமையுள்ளவர்களுக்கு அவர்களுடைய உண்மையான சுபாவம் தெரியாது. ஆகையினால் சோதனையின்போது சீக்கிரத்தில் விழுந்துவிடுவார்கள். நிற்கிறேன் என்று தன்னைப்பற்றி நினைக்கிறவன், கீழே விழுந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சுயபெருமையானது சுயவஞ்சனையாகவே இருக்கிறது. இவர்களை மற்றவர்கள் வஞ்சிக்க வேண்டியதில்லை. இவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்வார்கள்.

சுயகிரியை

அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும் (கலா 6:4).

ஒவ்வொருவரும் தன்தன் சுயகிரியையை சோதித்துப்பார்க்க வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். சுயகிரியை என்பது நம்முடைய சுயசுபாவத்தைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தை நம்மை ஆளுகை செய்கிறதா, கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி நாம் ஜீவிக்கிறோமா என்று நம்மைநாமே சோதித்துப் பார்க்கவேண்டும். மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, நம்மைநாமே சோதித்துப் பார்த்து, நம்மை நியாயந்தீர்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய வழிகளைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய தொழிலைச் சோதித்துப்பார்க்க வேண்டும். மற்றவர்களுடைய குடும்பங்களை சோதித்துப் பார்த்து, அவர்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, நம்முடைய குடும்பங்களைச் சோதித்துப் பார்க்கவேண்டும்.

நம்முடைய சுயகிரியைகளை நாம் சோதித்துப் பார்க்கும்போது, நமக்குள் பெருமை இருக்காது. நாம் ஒன்றுமில்லாதவர்கள் என்பதைப் புரிந்துகொண்டு, நம்மை ஒரு பொருட்டு என்று சொல்லி, நம்மை நாமே மேன்மை பாராட்டமாட்டோம். நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளையும், நாம் நடக்கிற வழிகளையும் சோதித்துப் பார்க்கவேண்டும். மற்றவர்களுக்கு உபகாரம் செய்யாவிட்டாலும், அவர்களுக்கு உபத்திரவம் பண்ணாமலிருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். பிறருக்கு உதவிசெய்யும் நல்ல சுபாவம் நம்மிடத்தில் வரவேண்டும்.

நம்மைநாமே பார்க்கும்போது, நம்மிடத்தில் நல்ல சுபாவங்கள் காணப்படுமென்றால், நமக்கு நம்மைக்குறித்து மேன்மை பாராட்ட இடமுண்டாகும். நம்முடைய சுபாவம் நமக்குச் சந்தோஷத்தைத் தரும். மற்றவர்களைப் பார்த்தால் சில சமயங்களில் நமக்கு எரிச்சலும் பொறாமையும் வரும். நம்மைநாமே பார்க்கும்போது, நம்முடைய உண்மையான சுபாவம் நமக்குத் தெரியவரும். நம்முடைய நற்குணத்தில் நாம் திருப்தியாயிருப்போம். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்போம். தேவனுடைய வார்த்தையின்படி நம்முடைய வாழ்க்கையைச் சீர்பொருந்தப் பண்ணுவோம். கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்போம். கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிப்போம்.

நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்றால், நம்முடைய சுயகிரியைகள் கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கவேண்டும். நம்முடைய கிரியைகள் கர்த்தரைச் சந்தோஷப்படுத்த வேண்டும். அப்போதுதான் நமக்குள் மெய்யான சந்தோஷமுண்டாகும். நம்முடைய நற்கிரியைகளைக் குறித்து நம்முடைய மனச்சாட்சி நமக்கு நற்சாட்சி கொடுக்கும். மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்வார்களென்றோ, நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களென்றோ அதிகமாய்க் கவலைப்படக்கூடாது.

கர்த்தருடைய பார்வையில் நாம் எப்படியிருக்கிறோம் என்பதை கண்டுபிடிக்கவேண்டும். அதற்காக ஒவ்வொரு விசுவாசியும் தன்தன் கிரியைகளைச் சோதித்துப் பார்க்கவேண்டும். அப்போது மற்றவர்களைப் பார்க்கும்போது அல்ல, தங்களையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவர்களுக்கு இடமுண்டாகும்.

தன் பாரம்

அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே (கலா 6:5).

ஒவ்வொரு விசுவாசியும் தன்தன் பாரத்தைச் சுமக்கவேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். தேவனுடைய மகா நியாயத்தீர்ப்பு நாளின்போது, நாம் ஒவ்வொருவரும் நம்மைக்குறித்து கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் நாம் நியாயம் விசாரிக்கப்படுவோம். நாம் செய்த நன்மைகளுக்காகவது அல்லது தீமைகளுக்காகவது ஏற்ற பலனை அப்போது பெற்றுக்கொள்வோம். நன்மை செய்திருந்தால் நமக்கு ஆசீர்வாதம் உண்டு. தீமை செய்திருந்தால் நமக்கு தண்டனை உண்டு. நியாயத்தீர்ப்பு நாளின்போது ஒவ்வொருவரும் தன்தன் பாரத்தைச் சுமக்கவேண்டும்.

நியாயத்தீர்ப்பு நாளின்போது, கர்த்தருடைய சமுகத்தில், நம்மைக் குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியது நிச்சயம். ஆகையினால் இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும்போதே, கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக ஜீவிக்கவேண்டும். நம்முடைய கிரியைகளைச் சோதித்துப் பார்க்கவேண்டும். கர்த்தருக்குப் பிரியமானபடி ஜீவிக்கவேண்டும். நம்மையும் நம்முடைய கிரியைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும்.

நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்காமல், மற்றவர்கள்மீது அதிக பாரத்தைச் சுமத்தாமல், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும்போது, கர்த்தருடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம். நம்முடைய பாரத்தை நாம் கட்டாயம் சுமந்தே ஆகவேண்டும். அதே வேளையில் நாம் மற்றவர்களுடைய பாரத்தைச் சுமக்கும்போது, நம்மிடத்திலுள்ள நற்குணத்தை வெளிப்படுத்துகிறோம். ஆவியின் கனி நம்மூலமாக வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் பிரமாணத்தை நம்முடைய ஜீவியத்தில் நிறைவேற்றுகிறோம்.

உபதேசிக்கப்படுகிறவன்

மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக் கடவன் (கலா 6:6).

விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்கு தாராளமாய் உதவிசெய்யவேண்டும். ஊழியத்திற்கும், ஊழியக்காரர்களுக்கும் உதாரத்துவமாய்க் கொடுக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களின் நன்மையை விசாரிக்கிறார். அவர்களைப் போஷித்துப் பராமரிக்கிறார். ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு திருவசனத்தை உபதேசிக்கிறார்கள். திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிற விசுவாசிகள், தங்களுக்கு வசனத்தை உபதேசிக்கிற ஊழியக்காரர்களுக்கு, சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

ஒரு சிலர் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவர்களாக இருப்பார்கள். ஒரு சிலர் திருவசனத்தை உபதேசிக்கிறவர்களாக இருப்பார்கள். கர்த்தரே தம்முடைய ஊழியக்காரர்களை திருவசனத்தை உபதேசிக்க நியமித்திருக்கிறார். உபதேசிக்கிறவர்களுக்கும், உபதேசிக்கப் படுகிறவர்களுக்கும் வித்தியாசமுண்டு. உபதேசிக்கிறவர்களுக்கு, உபதேசிக்கப் படுகிறவர்கள் உதவிசெய்ய வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இது அவருடைய பிரமாணம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு திருவசனத்தை உபதேசிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையே நமக்கு ஜீவனாக இருக்கிறது. நம்முடைய ஜீவியத்தையும், நம்முடைய விசுவாசத்தையும் கிறிஸ்துவின் வார்த்தையே ஆளுகை செய்கிறது. திருவசனத்தை உபதேசிக்கிறவர்கள், வார்த்தையைக் கலப்பில்லாமல் உபதேசிக்கவேண்டும். சத்தியத்தை மெய்யாய்ச் சொல்லவேண்டும். ஊழியக்காரர்களும் போஷிக்கப்பட வேண்டும். திருவசனத்தை உபதேசிக்கிறவர்கள் ஜனங்களுடைய இருதயங்களில் ஞானநன்மையை விதைக்கிறார்கள். அவர்களுடைய சரீர நன்மைகளை அறுவடை செய்கிற உரிமையை கர்த்தர் ஊழியக்காருக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிற விசுவாசிகள், தங்களுக்கு திருவசனத்தை உபதேசம்பண்ணுகிற ஊழியக்காரர்களுக்கு, தங்களுடைய சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்க வேண்டும்.

எதை விதைக்கிறானோ

மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் (கலா 6:7,8).

தேவனை யாரும் பரியாசம்பண்ணக்கூடாது. தேவன் தம்மை யாரும் பரியாசம்பண்ணவொட்டார். நாமும் மோசம்போகாதிருக்கவேண்டும். நம்மை நாமே வஞ்சித்துவிடக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் திருவசனத்தை உண்மையாய் உபதேசிக்கவேண்டும். ஊழியம் செய்வதுபோல நடிக்கக்கூடாது. மாய்மாலம்பண்ணக்கூடாது. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். கர்த்தருக்கு ஊழியம் செய்வதாகச் சொல்லிவிட்டு, நாம் உண்மையாக ஊழியம் செய்யவில்லையென்றால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். கர்த்தரை யாரும் வஞ்சிக்க முடியாது. அவரை யாரும் பரியாசம்பண்ண முடியாது. மனுஷன் தனக்குத்தானே மாய்மாலம் பண்ணலாம். கர்த்தரோ மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறவர். அவருக்கு முன்பாக எல்லாம் வெளியரங்கமாக இருக்கும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் விதைக்கிற காலம். பரலோகத்தில் நமக்கு மிகப்பெரிய அறுவடைக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்தப்பூமியில் எதை விதைக்கிறோமோ, அதையே பரலோகத்தில் அறுப்போம். விதைப்பது ஒன்றும், அறுப்பது வேறொன்றுமாக ஒருபோதும் இருக்காது.

அப்போஸ்தலர் பவுல் இரண்டுவிதமான விதைப்புக்களைப்பற்றி இங்கு சொல்லுகிறார். ஒன்று மாம்சத்திற்கென்று விதைப்பது. மற்றொன்று ஆவிக்கென்று விதைப்பது. நாம் மாம்சத்திற்கென்று விதைத்தால், மாம்சத்தினால் அழிவை அறுப்போம். ஆவிக்கென்று விதைத்தால் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்போம். மாம்சத்திற்குரிய அறுவடையினால் இம்மையிலும் நமக்கு நன்மை உண்டாகாது. மறுமையிலும் நன்மை உண்டாகாது. இம்மையில் துன்பமும் மறுமையில் நித்திய அழிவும் உண்டாகும்.

ஆவிக்கென்று விதைக்கிறவர்கள், தங்களுடைய அறுவடைக்காக, பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பிரபஞ்சத்தில் சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும். அவர்கள் நித்திய ஜீவனையும் நித்திய சந்தோஷத்தையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். நம்முடைய கிரியைகளுக்குத்தக்கதாக தேவன் நமக்குப் பலனளிப்பார். நம்முடைய கிரியைகள் எல்லாவற்றையும் கர்த்தர் சோதித்துப் பார்ப்பார். நாம் இந்தப் பூமியில் எப்படிப்பட்ட பதவி வகிக்கிறோம் என்பது முக்கியமல்ல. நம்முடைய கடமையை எப்படி நிறைவேற்றுகிறோம் என்பதுதான் முக்கியம். நாம் என்ன ஊழியம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. அந்த ஊழியத்தை எப்படிச் செய்கிறோம் என்பதே முக்கியம்.

ஏற்ற காலத்தில் அறுப்போம்

நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம் (கலா 6:9,10).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமலிருக்க வேண்டும். நாமெல்லோருக்குமே சரீரத்தில் சோர்வும், ஆவியில் சோர்வும் உண்டாவதற்கு வாய்ப்பிருக்கிறது. கடினமாக உழைக்கும்போது சோர்வு உண்டாகும். சோர்வு உண்டானாலும், நாம் தொடர்ந்து நன்மை செய்யவேண்டும். தளர்ந்து போய்விடக்கூடாது. சோர்ந்துபோகாமல் நன்மைசெய்து, தளர்ந்துபோகாமல் இருப்போமென்றால், நாம் ஏற்றக்காலத்தில் அறுவடை செய்வோம். நமக்காக ஒரு பெரிய அறுவடை நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறுவடை அறுப்புக்கு ஆயத்தமாயிருக்கிறது. சோர்ந்துபோகாமல், உண்மையாய் நன்மை செய்கிறவர்களுக்கு, இந்த அறுவடை நிச்சயம் உண்டு. ஒருவேளை நமக்குக் கிடைக்க வேண்டிய வெகுமதி தாமதமாகலாம். தாமதமானாலும் நிச்சயமாய் கிடைக்கும். ஏற்றக்காலத்தில் கிடைக்கும். ஏற்றகாலம் என்பது நாம் விரும்புகிற காலமல்ல. அது கர்த்தர் நியமித்திருக்கிற காலம்.

கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும், தங்களுக்குக் கிடைக்கிற சமயத்திற்குத்தக்கதாக, தங்களுடைய இடங்களில் நன்மை செய்யவேண்டும். நமக்கு மாத்திரம் நன்மை செய்துகொண்டால் போதாது. பிறருக்கும் நன்மை செய்யவேண்டும். பொதுவாக யாவருக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். நாம் நன்மை செய்வதை குறுகிய வட்டத்திற்குள் வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட ஜனத்திற்கு மாத்திரம்தான் நன்மை செய்வோமென்று, நம்மைநாமே ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடைத்துப் போடக்கூடாது. நன்மை செய்யும்போது அதை எல்லோரும் பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய வாசல் எப்போதும் திறந்திருக்கவேண்டும். அதை ஒரு குறிப்பிட்ட ஜனத்தாருக்கு மாத்திரம் திறந்து, மற்றவர்களுக்கெல்லாம் அந்த வாசலை அடைத்து, குறுகிய மனப்பாங்கோடு நன்மை செய்யக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் நன்மை செய்யவேண்டும்.

எல்லோருக்கும் நன்மை செய்தாலும், விசுவாசக் குடும்பத்தார்மீது விசேஷித்த கவனம் செலுத்தவேண்டும். அவர்கள்மீது விசேஷித்த அக்கரையும், விசேஷித்த கரிசனையும் காண்பிக்கவேண்டும். நன்மை செய்யும்போது யாரையும் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது. அதேவேளையில் விசுவாசக் குடும்பத்தாருக்கு விசேஷித்த வழிகளில் உதவிபுரியவேண்டும்.

நாம் எப்பொழுது நன்மை செய்யவேண்டுமென்று பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக நன்மை செய்யவேண்டும் என்று சொல்லுகிறார். நமக்கு சமயம் கிடைக்கும்போது நாம் கட்டாயம் நன்மை செய்யவேண்டும். நம்முடைய ஜீவனுள்ள காலம் வரைக்கும் நமக்கு சமயம் கிடைக்கும். ஆகையினால் நம்முடைய ஜீவியகாலம் முழுவதிலும், நாம் யாவருக்கும் நன்மை செய்யவேண்டும்.

ஒரு சிலர் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிடுவார்கள். மரிக்கும் தருவாயில், பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்குள் உண்டாகும். இவர்கள் தங்கள் ஜீவியகாலத்தை நஷ்டப்படுத்தியவர்கள். இவர்களுக்கு வாழ்நாளெல்லாம் ஏராளமான சமயம் கிடைத்திருந்தாலும் அவற்றையெல்லாம் அசட்டை செய்து, பயன்படுத்தாமல் விட்டுவிடுவார்கள். இப்போதோ மரணப்படுக்கையில் இருக்கிறார்கள். சாகும் தருவாயில் இருக்கிறார்கள். நன்மை செய்தால்தான் பரலோகத்திற்குள் போகமுடியும் என்னும் பயம் இவர்களுக்குள் வந்துவிடும். ஆகையினால் இப்படிப்பட்டவர்கள், தங்கள் ஜீவியகாலத்தின் முடிவில், தங்கள் சுயஆதாயத்திற்காக நன்மை செய்வார்கள்.

ஒரு சிலர் உயிரோடிருக்கும்போதும் நன்மை செய்வார்கள். அவர்கள் மரித்தபின்பும் அவர்கள் பெயரில் நன்மை செய்வதற்கு சில காரியங்களைச் செய்து வைத்திருப்பார்கள். பிறருக்கு நன்மை செய்வதற்காக தங்களுடைய சொத்தின் ஒரு பகுதியை உயிலாக எழுதி வைத்திருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மூலமாய் எப்போதுமே நன்மையான காரியம் நடைபெறும். நாம் உயிரோடிருக்கும்போது மற்றவர்களுக்கு நன்மை செய்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிறருக்குப் பிரயோஜனமில்லாத வாழ்க்கை வாழ்வோமென்றால், நாம் உடனடியாக மனந்திரும்ப வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை செய்வதை நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

பிறருக்கு நன்மை செய்ய, தேவன் நமக்கு பல வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு வாய்ப்பைக் கொடுக்கும்போது, நாம் அந்த வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்தி, மற்றவர்களுக்கு நன்மை செய்கிறோமா என்பதை அவர் ஆராய்ந்து பார்க்கிறார். நாம் கொஞ்சத்தில் உண்மை உள்ளவர்களாகயிருந்தால்தான், கர்த்தர் நம்மை அநேகத்தின்மேல் அதிகாரியாக்குவார். நாம் வாய்ப்புக்களைப் பயன்படுத்தும்போது, கர்த்தர் நமக்கு மேலும் பல வாய்ப்புக்களைக் கொடுப்பார். நம்முடைய திராணிக்குத்தக்கதாகவும், முடிந்தால் அதற்கு மேலும் நாம் பிறருக்கு நன்மை செய்யவேண்டும். உதவி தேவைப்படுவோரை நாம் பார்க்கும்போது, அவர்களைக் கண்டும் காணாதவர்கள் போல இருந்துவிடக்கூடாது. நம்மால் யாவருக்கும் உதவிசெய்ய முடியவில்லையென்றாலும், ஒரு சிலருக்காவது நன்மை செய்து, அவர்களை ஆசீர்வதிக்க ஆரம்பிக்கவேண்டும்.

விருத்தசேதனம்
கலா 6 : 11-18

கலா 6:11. என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள்.

கலா 6:12. மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம் பண்ணுகிறார்கள்.

கலா 6:13. விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

கலா 6:14. நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில்அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில்அறையுண்டிருக்கிறேன்.

கலா 6:15. கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்.

கலா 6:16. இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலுக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

கலா 6:17. இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்.

கலா 6:18. சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்.

கள்ளப்போதகர்கள்

என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள். மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம் பண்ணுகிறார்கள். விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள் (கலா 6:11-13).

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தின் முடிவுரைக்கு வந்திருக்கிறார். பவுல் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகள் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். இந்த நிருபம் நீளமான நிருபமாக இருந்தாலும், தன்னுடைய கையெழுத்தாய் இந்த நிருபம் முழுவதையும் எழுதியிருக்கிறார். தான் சொல்லச் சொல்ல வேறு யாராவது எழுதலாமென்று நினைத்து, யாரையும் எழுத்தராகப் பயன்படுத்தவில்லை. பவுல் கலாத்தியர்மீது மிகுந்த அன்பாகயிருப்பதினால், தன் கையெழுத்தாகவே இந்த நிருபம் முழுவதையும் எழுதியிருக்கிறார்.

கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளுக்கு பவுலும் உபதேசம் செய்கிறார். கள்ளப்போதகர்களும் உபதேசம் செய்கிறார்கள். பவுல் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசங்கம் பண்ணுகிறார். கள்ளப்போதகர்களோ நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட கள்ளப்போதகர்களின் உண்மையான சுபாவத்தை, பவுல் கலாத்தியருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

கள்ளப்போதர்கள் மாம்சத்தின்படி நல்வேஷமாய் காணப்பட விரும்புகிறவர்கள். புறம்பான மார்க்கக் காரியங்களில் அதிக வைராக்கியமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் உள்ளான பரிசுத்தமில்லை. மெய்யான பக்தியுமில்லை. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நாம் கடைப்பிடிக்கவேண்டுமென்று அவர்கள் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களோ நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளாமலிருக்கிறார்கள். மாம்சத்தின்படி நல்வேஷமாய் காணப்பட விரும்புகிறார்கள்.

அவர்கள் பக்தியுள்ளவர்களென்று மற்றவர்கள் நினைக்கவேண்டும். அதற்கேற்ற வகையில் அவர்கள் பக்தியின் வெளிவேஷத்தைத் தரித்திருக்கிறார்கள். யூதமார்க்கம் என்னும் போர்வையில் மறைந்துகொண்டு மாய்மாலம் பண்ணுகிறார்கள். வேஷம் போடுவதே அவர்களுடைய முழுநேர ஊழியமாயிற்று. புறஜாதி மார்க்கத்தார் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும், அவர்களும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று கட்டாயம் பண்ணுகிறார்கள். கள்ளப்போதர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்பட ஆயத்தமாயில்லை. துன்ப்பட விரும்பவில்லை. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறார்கள். கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிவர அவர்களுக்கு விருப்பமில்லை.

கள்ளப்போதர்கள் தங்கள் விசுவாசமென்னும் கப்பலை உடைத்துப்போட்டார்கள். அவர்களுடைய நல்மனச்சாட்சி மழுங்கிப்போயிற்று. அவர்கள் செய்கிறது தப்பிதம் என்று அவர்களுடைய மனச்சாட்சிகூட அவர்களுக்கு எச்சரித்துச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களில் மூழ்கிப்போயிருக்கிறார்கள். மாம்சத்தின்படி நல்வேஷமாய் காணப்பட்டால் போதுமென்று நினைக்கிறார்கள்.

கள்ளப்போதர்கள் புறஜாதியாரின் மாம்சத்தைக்குறித்து மேன்மை பாராட்ட விரும்புகிறார்கள். இதற்காக புறஜாதியாரும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒருவர் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், அவரை தங்கள் பக்கமாகச் சேர்த்துக்கொண்ட பெருமை கள்ளப்போதருக்கு உண்டாகும். கள்ளப்போதர்கள் இப்படிப்பட்ட பெருமையைத்தான் விரும்புகிறார்கள். மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டுமென்பதே அவர்களுடைய ஆவல். ஆவியைக் குறித்தும், ஆவிக்குரிய பரிசுத்தத்தைக் குறித்தும் அவர்களுக்கு அக்கரையே இல்லை.

நானோ

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில்அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில்அறையுண்டிருக்கிறேன் (கலா 6:14).

அப்போஸ்தலர் பவுல் கள்ளப்போதகர்களின் சுபாவத்தைச் சொல்லிவிட்டு, தன்னுடைய சுபாவத்தைப்பற்றியும் சொல்லுகிறார். பவுல் இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மாத்திரமே மேன்மை பாராட்டுகிறார். வேறொன்றையும் குறித்து அவர் மேன்மை பாராட்டவில்லை. இந்தச் சத்தியம்தான் யூதருக்கு தடைக்கல்லாக இருக்கிறது. கிரேக்கருக்கு பைத்தியமாக இருக்கிறது. யூதமார்க்கத்தமைந்த விசுவாசிகள், தங்கள் இரட்சிப்புக்கு இரண்டுமே முக்கியம் என்கிறார்கள். கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசமும் வேண்டும், அதோடு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் கைக்கொள்ளவேண்டும் என்பதுதான் யூதமார்க்கத்தமைந்த விசுவாசிகளின் நம்பிக்கை. ஆனால் பவுலோ, மனுஷருடைய ஆத்தும இரட்சிப்புக்கு நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் தேவையற்றவை என்றும், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே போதுமானது என்றும் உபதேசம்பண்ணுகிறார். கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார். வேறொன்றைக் குறித்தும் அவர் மேன்மை பாராட்டவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே அடிப்படை ஆதாரம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் எப்படிப்பட்ட பாதையில் கடந்து வந்தாலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையும் குறித்து மேன்மை பாராட்டவேண்டும். சோதனைகளும், பாடுகளும், வேதனைகளும் வரும்போது சோர்ந்துபோகக்கூடாது. சோதனையிலும் நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். சோதனைகள் நம்மை மேற்கொள்ளக்கூடாது. நாம் இயேசுகிறிஸ்துவின் பலத்தினால் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

நம்முடைய சந்தோஷம், நம்பிக்கை எல்லாமே கிறிஸ்துவின் சிலுவையில்தான் இருக்கிறது. ஆகையினால் விசுவாசிகளெல்லோரும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றையும் குறித்து, மேன்மை பாராட்டக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் இந்தப் பிரபஞ்சத்திற்கு மரித்தவராகயிருக்கிறார். இந்த உலகம் இயேசுகிறிஸ்துவினால் அவருக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது. அவரும் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறார். மரித்துப் போனவர்களுக்கு சந்தோஷமும் வருத்தமும் இருக்காது. நகைப்பும் இருக்காது. அழுகையும் இருக்காது. அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான். பவுல் இந்த உலகத்திற்கு மரித்தவரைப்போல இருக்கிறார். இந்த உலகத்தினால் அவருக்கு சந்தோஷமோ, வருத்தமோ உண்டாகவில்லை. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற ஒவ்வொரு நாளிலும், இயேசுகிறிஸ்து நம்முடைய இரட்சிப்புக்காக இந்த உலகத்தில் பட்ட பாடுகளையெல்லாம் நினைவுகூரவேண்டும். அப்போதுதான் நம்முடைய உள்ளத்தில் உலக சிநேகம் இருக்காது. கர்த்தரையும், அவருடைய சிலுவையையும் மாத்திரம் சிநேகிப்போம். உலகத்தை சிநேகிக்கமாட்டோம்.

புது சிருஷ்டி

கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம் (கலா 6:15).

அப்போஸ்தலர் பவுல் கள்ளப்போதர்களின் துர்உபதேசத்திற்கு விரோதமாக விவாதம்பண்ணவில்லை. அவர்களுடைய உபதேசம் மாயையானது என்று நினைத்து, அது ஒன்றுமில்லையென்று தீர்மானித்து விடுகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றுமில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாயிருக்கவேண்டும். இதுதான் முக்கியம்.

கள்ளப்போதகர்கள் ஒன்றுமில்லாத விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தையின்படி விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதினால் நமக்கு ஆசீர்வாதமோ, சாபமோ உண்டாகப் போவதில்லை. விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளாவிட்டாலும் நமக்கு ஒன்றுமுண்டாகாது. நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் நம்முடைய இருதயத்தில் அங்கீகரிக்கவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருக்க வேண்டும்.

விருத்தசேதனத்தின் அஸ்திபாரத்தில் நம்முடைய விசுவாச ஜீவியத்தை கட்டியெழுப்ப முடியாது. அது நம்முடைய ஆத்துமாவை இரட்சிப்பதற்கோ, நமக்கு புதுஜீவனைக் கொடுப்பதற்கோ பலனற்றது. நாம் எப்படிப்பட்ட பாரம்பரிய பழக்க வழக்கங்களை கைக்கொள்கிறோம் என்பது முக்கியமல்ல. மோசேயின் பிரமாணத்தில் எத்தனை கற்பனைகளைக் கைக்கொள்கிறோம் என்பதும், எதையெல்லாம் கைக்கொள்ளவில்லை என்பதும் கர்த்தருக்கு முக்கியமல்ல. நாம் இயேசுகிறிஸ்துவில் புதுசிருஷ்டியாயிருக்க வேண்டும். புதுசிருஷ்டியே காரியம். நம்முடைய மனதும் இருதயமும் புதுப்பிக்கப்படவேண்டும். நம்முடைய இருதயத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசம் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய ஜீவியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படிகிற ஜீவியமாக இருக்கவேண்டும்.

நாம் எப்படிப்பட்ட ஊழியம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. சமுதாயத்தில் நம்முடைய பெயர் எப்படிப்பட்டது என்பது முக்கியமல்ல. ஸ்தாபனத்தில் நமக்கு என்னென்ன தலைமைப் பொறுப்புக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதும் முக்கியமல்ல. நம்முடைய பட்டமோ, பதவியோ முக்கியமல்ல. இவற்றை வைத்து நாம் தேவனுடைய சமுகத்திற்குள் பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். அவரையே நம்முடைய கர்த்தராகவும் ஆண்டவராகவும் அங்கீகரிக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாகவேண்டும். புதுசிருஷ்டியே காரியம்.

சமாதானமும் இரக்கமும்

இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக (கலா 6:16).

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியருக்கு ஆசீர்வாத வார்த்தைகளைக் கூறுகிறார். ஆனால் தன்னுடைய ஆசீர்வாதத்தை எல்லோருக்கும் சொல்லாமல், கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு மாத்திரம் சொல்லுகிறார். அவர்களுக்கு சமாதானமும், இரக்கமும் உண்டாயிருப்பதாக என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிக்கிறார். கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி நடந்துகொள்கிறவர்கள், தங்களுக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மை செய்கிறார்கள். இவர்களுக்கு விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை புதுசிருஷ்டியே காரியமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவினால் உலகம் இவர்களுக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது. இவர்களும் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது, "தேவனுடைய இஸ்ரவேலருக்கும்" ஆசீர்வாதம் சொல்லுகிறார். தேவனுடைய இஸ்ரவேலர் என்னும் வார்த்தை உண்மையான எல்லா விசுவாசிகளையும் குறிக்கிறது. அவர்கள் யூதராகயிருந்தாலும், புறஜாதியாராகயிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இஸ்ரவேலராக இருக்கிறார்கள். யூதர்களும், யூதமார்க்கத்து கள்ளபோதகர்களும் ஆசீர்வாத வார்த்தைகளைச் சொல்லும்போது, விருத்தசேதனம் பண்ணிக் கொண்டவர்களுக்கு மாத்திரம் ஆசீர்வாதம் சொல்லுவார்கள். அவர்களுடைய ஆசீர்வாதம் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாதவர்களுக்குக் கிடைக்காது.

மெய்யான விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்தின்படி நடக்கிறவர்கள். இவர்கள் தங்கள் சுயகற்பனையின் பிரகாரமோ, சுயபிரமாணத்தின் பிரகாரமோ நடப்பதில்லை. கர்த்தரே இவர்களை ஆட்கொண்டு ஆளுகை செய்கிறார். கர்த்தர் இவர்களுக்குக் கொடுத்திருக்கிற பிரமாணங்களை ஏற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள்.

நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி நடந்தாலும், நமக்கு தேவனுடைய சமாதானமும், இரக்கமும் தேவைப்படுகிறது. தேவகிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தேவனுடைய பிரமாணத்தின்படி நடக்கிறவர்களுக்கு, சமாதானமும் இரக்கமும் உண்டாயிருக்குமென்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். தேவனோடு சமாதானமாயிருப்பதற்கு, அவருடைய பிரமாணத்தின்படி நடப்பதே மெய்யான வழி. தேவனுடைய சமாதானத்தையும் இரக்கத்தையும் நாம் இப்போது பெற்றுக்கொண்டால், அவற்றை இனிமேலும் பெற்றுக்கொள்ள முடியும் என்னும் நிச்சயம் நமக்குள் உண்டாகும். இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்தில் வழிவிலகாமல், தொடர்ந்து அதிலே நடக்கும்போது, நமக்கு தேவனோடு நீடித்த சமாதானமுண்டாகும். தேவனுடைய இரக்கம் நமக்கு எப்போதும் கிடைக்கும்.

இயேசுவினுடைய அச்சடையாளங்கள்

இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் (கலா 6:17).

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவினிமித்தமாகவும், அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் அநேகப் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார். அவருடைய சரீரத்தில் உபத்திரவப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகிறது. காயத்தின் தழும்புகள் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினாலும், அவருடைய சுவிசேஷத்தை உபதேசிப்பதினாலும், சத்துருக்கள் பவுலைத் துன்பப்படுத்தினார்கள். உபத்திரவத்திற்கு உட்படுத்தினார்கள். இதனால் பவுலின் சரீரத்தில் அநேகக்காயங்கள் உண்டாயிற்று. அந்தக் காயத்தின் அடிச்சுவடுகளெல்லாம் பவுலின் சரீரத்தில் தெரிகிறது. இந்தக் காயங்களை பவுல் கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்கள் என்று சொல்லி, அவற்றை தன்னுடைய சரீரத்தில் தரித்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய்ப் பிரசங்கிக்கிறவர். ஆத்துமாக்கள்மீது அதிகக் கரிசனையோடிருக்கிறவர். சுவிசேஷத்தினிமித்தமாய் பல பாடுகளை அனுபவித்தவர். அப்போஸ்தல அதிகாரத்தோடு விசுவாசிகளை ஆசீர்வதிக்கிற சிலாக்கியம் பெற்றிருக்கிறவர். அப்படிப்பட்ட தனக்கு இனிமேல் ஒருவனும் வருத்தம் உண்டாக்கக்கூடாது என்று சொல்லுகிறார். பவுல் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தின் உபதேசத்திற்கு யாரும் எதிர்த்துப் பேசக்கூடாது. பவுலின் அப்போஸ்தல அதிகாரத்திற்கு விரோதமாக யாரும் எதிர்த்து நிற்கக்கூடாது. பவுல் இதுவரையிலும் இப்படிப்பட்ட வருத்தங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்டிருக்கிறார். இனிமேல் ஒருவனும் தனக்கு இப்படிப்பட்ட வருத்தத்தை உண்டாக்கக்கூடாது என்று தெளிவாகச் சொல்லிவிடுகிறார்.

பவுல் ஏற்கெனவே கிறிஸ்துவினிமித்தமாக பல பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தவர். ஆனால் கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளோ கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திற்கு விலகிப்போய், பவுலுக்கு வருத்தத்தை உண்டாக்குகிறார்கள். பவுல் சுவிசேஷத்திற்காக பாடுபட ஆயத்தமாயிருக்கிறார். விசுவாசிகள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து, கள்ளப்போதர்களின் நியாயப்பிரமாண உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, பவுலை வருத்தப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட வருத்தத்தைத் தனக்கு இனிமேல் யாரும் உண்டாக்கக்கூடாது என்று அவர்களுக்குத் தெளிவாக எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் கிருபை

சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென் (கலா 6:18).

அப்போஸ்தலர் பவுல், கலாத்தியருக்கு தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லி, இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். கலாத்தியா தேசத்திலுள்ள விசுவாசிகளை, பவுல், "சகோதரரே" என்று கூப்பிடுகிறார். அவர்களுக்காக ஜெபிக்கிறார். ஜெபவார்த்தையைச் சொல்லி அவர்களை விட்டுக்கடந்து செல்கிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக" என்று ஜெபித்து, அவர்களை ஆசீர்வதித்து, இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். பொதுவாக அப்போஸ்தலர்கள் விசுவாசிகளிடமிருந்து விடைபெற்றுச் செல்லும்போது, இப்படிப்பட்ட ஆசீர்வாத வார்த்தைகளைச் சொல்வது வழக்கம்.

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியரிடமிருந்து விடைபெறும்போது அவர்களுக்காக ஜெபிக்கிறார். அவர்களுக்கு கிறிஸ்துவின் கிருபை கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகிறார். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்குத் தேவையான தேவகிருபைகள் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு, அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச்செல்லவேண்டும். அவர்கள் இப்பிரபஞ்சத்தில் தேவனோடு சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய இரக்கங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்த ஜீவியத்தில் அவர்களுக்கு எவ்வளவு சோதனைகளும், உபத்திரவங்களும் வந்தாலும், தேவகிருபை அவர்களோடு கூடயிருக்கவேண்டும். அவர்களுக்கு மரணமே நேரிடுவதாக இருந்தாலும், அவர்களுடைய ஜீவன் சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும், இயேசுகிறிஸ்துவின் கிருபை அவர்களுடைய ஆவியோடு எப்போதும் கூடயிருக்கவேண்டும் என்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

கலாத்தியா தேசத்து சபையார் பவுலின் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கள்ளப்போதர்களுக்கு அவர்கள் சொல்லிக்கொடுத்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக் கைக்கொள்கிறார்கள். அவர்கள் ஆதியிலே பவுல்மீது வைத்திருந்த அன்பு இப்போது அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் ஆவிக்குரிய பின்மாற்றத்திலிருக்கிறார்கள். ஆனாலும் பவுல் அவர்கள்மீது வைத்திருக்கிற அன்பு குறையவில்லை. அவர்களைக்குறித்த கரிசனையும் குறையவில்லை. அவர்கள் நன்றாயிருக்கவேண்டுமென்று அவர்களை ஆசீர்வதிக்கிறார். "கிறிஸ்துவின் கிருபை அவர்களுடைய ஆவியுடனே கூடயிருப்பதாக" என்று ஆசீர்வதிக்கிறார். தேவஆவியானவர் அவர்களுடைய ஆவியிலும் ஆத்துமாவிலும் தொடர்ந்து வாசம்பண்ணவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். தங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிற ஆவியானவரின் சத்தத்திற்கு அவர்கள் செவிகொடுத்து, கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் விசுவாசிகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஆசீர்வதிக்கவேண்டும். கிறிஸ்துவின் கிருபை விசுவாசிகளுடைய ஆவியுடனே கூடயிருப்பதாக என்று சொல்லி அவர்களை உண்மையாய் ஆசீர்வதிக்கவேண்டும். அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய ஆசீர்வாத வார்த்தைகளைச் சொல்லி முடித்த பின்பு, "ஆமென்" என்று சொல்லி தன்னுடைய வாழ்த்துதலை நிறைவுசெய்கிறார். தன்னுடைய ஆசீர்வாத வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்.